பதிவு எண் 2041

KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா }

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1–12 |
| வெளிநாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4. | ஈரோடு, விபவ ௵ சித்திரை ௴ 31௳ (13—5—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 3.

இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

இனும்! இனும்!

சாரவிவேகி சதானந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனுமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சர்து இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

## நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று



அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.

## அறிக்கை.

நமது
கோயமுத்தூர் ஜில்லா
வாசிகளின் சௌகர்யத்தை உத்தேசித்து

**ரஸ்டன்—ஹார்ன்ஸ்பி,**

ஆயில் இன்ஜின்கள், பம்புகள், பெல்டிங்கள்
பாப்கோ பெய்ண்ட்டுகள், இன்ஜினீர்கள் சாமான்கள்,
பைப், பைப்பிட்டிங்கள்,

**ஏராளமாய் தயாரில் வைத்திருக்கிறோம்.**

**மாசி அண்ட் கம்பெனி, Ltd.**

**இன்ஜினீயர்கள்**

திருச்சி ரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட்,
**கோயமுத்தூர்.**

இனும்! இனும்!! இனும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்.)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உறவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம், ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவைகளையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்றதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

# 'இந்திய-மாதா'

மிஸ், காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிரட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு:

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம்உயர்ந்த பைண்டு.

புஸ்தகத்தின்பேரில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—[illegible]—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனும்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
Book-Depot, சென்னை.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

# முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள், தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் $4\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

## முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமன்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காமினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பேன்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய சவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசீய டிரான்ஸபர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 25 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு ரூ 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி
தபால் பெட்டி 119, மதராஸ்.

## தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

[illegible] கணக்கு [illegible] முறையை நன்கு போதிப்பது. [illegible] பதிவு, இரட்டைப்பதிவு இரண்டு பாகங்களுமடங்கியிருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையுமுடையது. வியாபாரிகள், மாணாக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தேவி ஆஸ்ரமம்,
திரௌபதையம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

## 'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சரசம்.

தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய சொந்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து நாணயமாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

[illegible]கள், விதைகள் கெட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீரு சாயபு,
[illegible] அண்டு பழவியாபாரம், சேலம்.
தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்.

# ஆலயங்கள் இருக்கவேண்டுமா?

## ‘தெய்வங்களின் யோக்கியதை’.

ராமன்.

கட்டுரை 4.

(ஞானனந்த சுவாமிகள் எழுதியது)

சிலர் ஆழ்வார், நாயனுர்கள், ரிஷிகள், முனிகள் மனுஷக்குரங்கு, இப்போது மனுஷக்கறிக்கு ஏமாந்து வீங்கிய கடவுள்கள் ஆகியோர் இன்றையத் தேதிக்குநீச தத்துவத்தைக் கடைப்பிடிக்கவில்லை யென்று கூறி, திருப்பாணுழ்வார் நந்தனர் இவர்களைச் சுட்டிக்காட்டி, என்னை மேற்படி கடவுள்களதும் அவதாரங்களதும் நீசதத்துவ சம்பந்தமான கொள்கையையும் நடத்தையையும் மேலும் ருசுப்பிக்க வேண்டுமெனக் கேட்கின்றனர். என்னுடைய கொள்கை மேற்படி தெய்வங்களின் அயோக்கியத் தனத்தை வெளிப்படுத்துவதேயாதலால், இங்கு அதைப்பற்றிக் கொஞ்சம் பேசுகிறேன்:—

கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய 3 யுகங்களிலும் கழிந்த 38 லட்சத்து 88 ஆயிரம் ஆண்டுகளிலும், கலியுகத்தில புத்தாவதாரக்காலம்வரைக்கும் அதாவது சென்ற 3000 ஆண்டுகள் வரைக்கும் கூட ஷை ஆச்சாரிகளும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் எவ்விடத்தில் மறைக்கப்பட்டுவைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்? அத்தனை பெரிய நீண்ட காலத்தில் சிவனும் விஷ்ணும் இந்தியாவில் கிடைத்தவரைக்கும் விடாமல் அனுபவிக்க வெண்ணித்தானே சும்மா விருந்தனர்? சங்கராசாரியும் ஆதி வைஷ்ணவப்ராடெஸ்டெண்ட் என்ற ராமாநுஜாச்சாரியும் 3890000 ஆண்டுகளாக எங்கேயிருந்தனர்? இவர்கள் என்னதான் நமக்கு நாட்டிவிட்டனர்? ஆற்றமாட்டாமல், பார்ப்பானை போற்றி விட்டு ‘திவ்யாஞ்ஞை’கள் என்ற பெயரால் ஏழைகளை தம் சொத்தைக் கோவில்களுக்கும் மடங்களுக்கும் தந்திடும்படி வைத்திட்ட பெருமைதானே? இந்த இந்தியாவில் எவர்—எந்த அவதாரக்காரன்—பார்ப்பனனது நிலைமையைப்பலப் படுத்தவறியவா?

இயேசு கிறிஸ்துவும் முகமத்நபியும் புத்த பெருமானும் ஆகிய மூவரும் உலகில ‘நீச’ தத்துவத்தை ஒழித்து எல்லாருக்கும் சகல ஞானமும் சமம் என்று போதித்துச் செய்கையிலும் அனுஷ்டிக்கும் படியன்றே செய்துவிட்டு மறைந்தார்கள். சோமபானக் கட்குடி தேவதைகளும், அஸ்வமேத யாகத்திற்கும் பௌண்ட்ரீக யாகத்திற்கும் வரம் தந்த கலாடித்தேவதைகளும், இக்கலிகாலத்திலும் இந்தியரை ஏமாற்றி வசப்படுத்திவிடலாமென்று எண்ணி அனுப்பிய ஆசாமிகள் சில அற்பமான கௌரவமில்லாத சமரசப் பாட்டுக்கள் பாடிவிட்டு ஒன்றும் நடத்தி வைக்க முடியாமல் ஒழிந்தனரே யன்றி இங்கு அவர்கள் என்ன நலத்தை நாட்டிச் சென்றனர் என்று கேட்கிறேன். நான் அற்பமான கௌரவ மில்லாத பாட்டுக்கள் என்று ஏன் சொல்லுகிறேனெனில் அப்பாட்டுக்கள் சிவனுடைய அல்லது விஷ்ணுவினுடைய தொண்டரைமட்டும் கடவுளர் என்று தூக்குகிறதே யொழிய, அவர்களுக்குத் தொண்டரல்லாத சாதாரண நாகரீகமும் அறிவும் கல்வியும் ஒழுக்கமும் உடையவர்களான ஆதித்திராவிடர் உள்பட்ட எச்சாதியாரும் நீசர் அல்ல என்று சொல்லுகின்றனவா? ஷை பாட்டுக்கள் மட்டும் பாடி பார்ப்பனரது கையில் ஒப்பித்துவிட்டுச் சென்றவர்கள் தம்நாளில் நீசத்துவம் கொண்டாடவில்லையென்று யாரேனும் சொல்லுவாரா? இத்தனைக்கும் இவர்கள் யாவரும் அவதாரங்களாம்! இந்த நமது அவதாரங்கள்யாவும் ஒன்று சேர்ந்தால்கூட ஒரு புத்தருக்காவது ஒரு முகமத் நபிக்காவது, ஒரு யேசுகிறிஸ்துவுக்காவது கடுகத்தனையேனும் ஒப்பிடக்கூடிய காரியம சாதித்தவராவரா? இந்த ஆசாமிகள் யாவரும் சிவன், விஷ்ணு, இவர்களது அவதாரங்களின் விக்கிரகங்களை நீராட்டிச் செலவுசெய்து பூசித்துவந்தால் மோக்ஷம என்று கூறிவிடவில்லையா? தலம் என்றும் தீர்த்தமென்றும் கூறி அவர்கள் மேலும் ஏமாற்றவில்லையா? அவர்கள் தம் பாட்டையே பெருமையைப்பாடி, அவையே முத்திதரும் என்றும் உரைத்து, பார்ப்பனரையே புகழ்ந்து ஒழிந்து விட்டதால் தமிழர்களின் மூளை மேலெழுந்து நினைக்க வழியில்லாமல் போயிற்று. அன்னிய மதத்தினரைப் படுகொலை செய்யவென சில ஆட்களை அனுப்பிய நம் ‘கடவுள்’களுக்கு, சமத்துவத்தை காரியத்தில் நடத்தி வைக்கும்படி சொல்ல, வாயற்று, பலமற்று போயிற்று? இது யோக்கியக் கடவுளது குணமா? நாம் ஷை ஆட்களால் கற்றுக்கொண்டதெல்லாம் எல்லா அன்னிய மதத்தினரும் ‘நீசர்கள்’ என்பதே. இப்படிப்பட்ட காரியமில்லா அடியார் என்பவர்களும் அவர்களது தேவதைகளும் சேர்ந்துகொண்டு, கோவில்களுக்குள் உட்கார்ந்துகொண்டு, நம் முன்னவர்கள் இளித்தவாயத் தனமாய் விட்ட சொத்தை வெட்கமின்றி--இன்னும் ஐரோப்பிய ஆட்சி நாளிலும் —அனுபவிக்கின்றனர்.

நந்தனரும் திருப்பாணுழ்வாரும் பார்ப்பனத் தேவதைகளின் சிபார்சின்மேலேயே ஆலயத்துள் கலியுகத்தில் மட்டும் அழைத்துச் செல்லப்பட்டவர்களாதலாலும், பார்ப்பனத் தேவதைகளும, சுத்தியான எவரும் தம் கோவில்களுள் நுழையலாமென தம் பொற்சபை முதலியவற்றில் ஒரு போதும் கூறியில்லை யாதலாலும், நந்தனரும் திருப்பாணரும்கூட தாழ்த்தப்பட்ட ‘நீசர்’ என்றவரைப பற்றித் தம தேவதைகளுக்குச் சிபார்சு செய்து பேசியதில்லை யாதலாலும், ஏன் இங்கு யாருக்கும் தடுமாற்றம்? என்கிறேன். திரிசங்கு காலத்தில் இல்லாத சிவனும், இராமனும், விஷ்ணுவுமா இப்பொழுது உள்ளனர்? ஒரு வேளை வெள்ளைக்காரனது நாகரீகத்தைக கண்டு மிகவும் வெட்கப்பட்டு ஷை தேவதைகள் இனி வாய் திறந்து தீண்டாமையை விலக்க இணங்கினும் இதுவரைக்கும் நடத்திய காலித்தனங்களும் மூர்க்கத் தனங்களும் பாவங்களும எங்கு செல்வது? இவை படைத்த வர்க்கம் எப்படி ஆயிற்று? இவை இனி ஒருசமயம் நம்மை ஏமாற்றி மனுஸ்மிருதிக்கு மீளக் கொண்டுபோய் விடவா?

இவைஇத்தனையும் சேர்ந்தாலும்ஒருஉண்மை யோக்கிய மனுஷனுக்குச் சமமாகுமா? ஐரோப்பியன் இந்தியாவில் அடிவைத்திலாவிடில் இன்னும் இந்நாட்டில் தீண்டாமை வழக்கமானது மகா கொடுமையுடன் எல்லாக்கற்றவர்களாலுங்கூட கொண்டாடப்பட்டிருக்குமா இராதா? எப்பொழுதும் போல ஷை கடவுளரும் ஏமாற்ற நிலைமையில் நம்மை விட்டிருப்பாரா இல்லையா? இனி நாம் நந்தனர் திருப்பாணுழ்வார் என்று பேசி அரை நிமிஷமும் ஏமாறுமல் நம் பார்ப்பனச் சிருட்டிக் கடவுள்களையும் அவற்றை தாங்கிய முக்கிய ராமனையும் அவரவரால் இந்தியாவுக்கு நாட்டப்பட்ட அதர்மங்களையும் ஏமாற்றத்தையும் கணக்கிட்டே உண்மை மதிப்புப்போடவேண்டும்.

திருஞான சம்பந்தருக்குநாடெங்கும்தீண்டாமையைப்போக்கி எல்லாரையும் ஆலயம் நுழையும்படி செய்வதைக்காட்டிலும் வேறு வேலை என்ன என்றும் கேட்கிறேன்? அப்படியே நம்மாழ்வாரையும் திருமங்கை ஆழ்வாரையும் கேட்கிறேன். இவர்களும் நந்தனரும் திருப்பாணுழ்வாரும இவர்களது கடவுள்களான ஆசாமிகளான இழிகுண இயல்புகொண்ட தேவதைகளும் ரிஷிகளும் செந்நெறி ஒன்றுக்கேனும் பாடுபடாமல் போயினர். இனி நான் மேற் செல்கிறேன்.

சதாநந்த ரிஷி விஸ்வாமித்திரனைப் பற்றி ராமனிடம் மேலும வாலாறு கூறுகையில் விஸ்வாமித்திரர் திலோத்தமையைக் கண்டு மோகித்து விரட்டிக்கொண்டு ஓடின செய்தியை ராமனிடம் சொன்னதாகக் கம்பர் கூறினுலும் ஒரு சிஷ்யனது முன்னிலையில் அச்சிஷ்யனது குருவின் நடத்தையைப் பற்றிக்கெடுதலாகக்காட்டும்சிற்றின்பவிவகாரத்தைகூறினது நிசமாயின் அதுசதாநந்தனின பகுத்தறிவைக் காட்டாது. சதாநந்தரிஷி பேசியிருக்க மாட்டாரெனின் கம்பர் அந்த ரிஷியின் வாயில் தானுக இந்தச்சொற்களைப் போட்டது தவறு.

விஸ்வாமித்திரன் திரிசங்கு சம்பந்த வேள்விக்கு தன் சொல்லைக்கேட்டவுடன வாசத வசிட்டனது 100 புத்திரர்களையும் நரபலிக்குச் செல்ல மறுத்த தன் பிள்ளைகளையும் வேடராகும்படி—நீசராகும்படி—சபித்தனன். இதைக்கேட்டவுன் எவர்தான் உள்ளம் நடுங்கமாட்டார். இந்த ரிஷிமார்களுக்குக் கிட்ட நெருங்கிப் பழகுகையில், ஒரு கால், ஒருவனை அவன்றனக்குப் பிடிகாத ஒரு செய்கையை செய்யச் சொல்லுங்கால். அவன் மறுத்தால் அதற்குச் சாபங்கள்! இப்படிப்பட்ட ரிஷிமாரான அயோக்கியர்களுக்குக் குடிக்கத்தண்ணீர் கொடுக்கலாமா வென்கிறேன். இப்படிப்பட்ட பொல்லாதவனிடம் மாட்டிய ராம லக்ஷ்மணர் அவன் சொன்னபடியெல்லாம் சொலலவோ, பழி புரியவோ முற்படாவிடில் அந்த ரிஷி சபிப்பான் என்று அவர்கள் பயப்படடிருப்பாரா மாட்டாரா? விஷ்ணுவாயிருந்து சலந்தரா சூரனது மனை

(இதன் தொடர்ச்சி 22-ம் பக்கம் பார்க்க)

# பழனி வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி அவர்களின்

ரிஜிஸ்டார்ட்



டிரேட் மார்க்

## தாம்பிர பஸ்பத்தால் தீராத குஷ்ட ரோகமெல்லாம் தீர்ந்துவிட்டது.

### வெள்ளைக் குஷ்டம் தீர்ந்துவிட்டது.

வெள்ளைபடர்ந்த இடங்களில் முளைத்த வெள்ளை ரோமங்களெல்லாம் உதிர்ந்து கருப்பு ரோமம் முளைத்து விட்டது. வெண்மை மறைந்து சுயசரீரம் உண்டாய் விட்டது. வாய் ரணம் ஆறிவிட்டது.

சூரணம் அனுபானம் உள்பட 100 நாள் தாம்பிர பற்பம் ரூபா 100. ஏழைகளுக்கு ரூபா 50.



கே. ராதாகிருஷ்ண நாயுடு, 23, அய்யாசாமி முதலி தெரு, சென்னை.





சீனுவாச பிள்ளை c/o எஸ். துரைசாமி ஐயர், குடிமல்லூர், வாலாஜாபேட்டை தாலூக்கா.

நமது விளம்பரம்போல் சிலர் குஷ்டரோகத்திற்கு மருந்திருப்பதாய் பொய் விளம்பரம் போடுகிறார்கள் போலி விளம்பரத்தை நம்பி ஏமாறுதீர்கள். நமது மருந்தால்சொஸ்தமான குஷ்டரோகிகளின் போட்டோ படங்களைப் பார்த்து நம்பி நம் மருந்தை வாங்கி சாப்பிடுங்கள்.

## குஷ்ட ரோகங்களெல்லாம் சொஸ்தமாகிவிட்டதற்கு அடையாளமான போட்டோ படங்களைக் கவனியுங்கள்.









# மனிதன் எதனால் உயர்ந்தவன்?

கைவல்ய சாமியார் எழுதியது

கூடி வாழ்தல், ஸ்நேகம், அன்பு ஆகிய இவைகளே மனிதர்கள் எக்காலத்தும் விரும்புவது. இப்படி எக்காலத்தும் சதா விரும்பும் மனிதனுடைய ஸ்வரூபத்தைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? ஒன்றும் தெரியாதென்றே சொல்ல வேண்டும். மனிதன் பிறக்கிறான்; பின்பு அவன் இறக்கிறான். அவன் எங்கிருந்து வருகிறான்? எங்கே பின்னர் போகிறான்? என்பதே நமக்குத் தெரியாது. ஒருவன் கவியாகவும் மற்றொருவன் போர் வீரனாகவும் இருக்கிறான். இவர்கள் இப்படியிருக்கக் காரணம் என்ன என்பதும் நமக்குத் தெரியாது. மனிதன் உயிரோடிருக்குங்கால் மூச்சு விடுகிறான். அவன் இறந்த பின் மூச்சு நின்றுவிடுகிறது. மூச்சு விட்டுக் கொண்டிருந்தது யாது? மூச்சில்லாது கிடப்பது யாது? நாம் பிறக்கக் காரணமென்ன? நாம் எங்கேபோகிறோம்? மரணத்தோடு நம வாழ்க்கை முடிந்ததா? நாம் ஆத்மாவா? அனாத்மாவா? மனமா? இந்திரியங்களா? அல்லது ஒன்றுமேயில்லையா? என்ற இந்தச் சங்கைகளுக்கு எந்த தேகதத்துவ சாஸ்திரத்தாலும் தக்க விடை கொடுக்க முடிவதில்லை. இம்மாதிரியான பெரிதாயும் ஆழ்ந்ததாயும் உள்ள இரகசியங்களால் மனிதன் சூழப்பட்டிருக்கிறான். இதை அறிய நாம் எவ்வளவு முயன்றாலும் நம்மால் ஆவதில்லை, இம்மாதிரியான இருளில் நாம் தத்தளிக்கிறோம் என்பதை உணர்ந்துதான் மேனாட்டு தத்துவ சாஸ்திரிகள் "நாம் எப்பொழுதும் விடாது அதிநுட்பமான விஷயங்களோடேயே சம்பந்தப்பட்டிருக்கிறோம். மனிதன் ஒரு பதருக்குச் சமானம். அவனுக்கு உலகத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. தன்னைப் பற்றியோ அவனுக்கிருக்கும் அஞ்ஞானத்திற்கு அளவேயில்லை. அது போல இவ்வுலகமாம் பெரிய யந்திரத்தை அளந்தறிவது அஸாத்தியம். அதிலிருக்கும் காரிய காரண சம்பந்தத்தை முழுவதுமறிய முடியாது. நாம் இன்னார் என்பதும் நமது ஸ்வரூபம் இன்னதென்பதும் அறிய முடியாது." என்று சொல்லுகிறார்கள் இவையனைத்தும் அதிக பழக்கத்தாலுண்டாகும் மந்த குணத்தைச் சிதறயடித்த மனிதர்களின் வாக்கியங்கள் என்றாலும் சமுத்திரத்தில் மீனுக்காக அலைகளை எளிதில் தாண்டிச் செல்லும் செம்படவனுக்குச் சமுத்திர ஒலியின் காம்பீரியமும் அதிலுண்டாகும் புயல்களின் காம்பீரியமும் எவ்வாறு தோன்றுதோ அவ்வாறு ஓயாத சமுத்திர அலை போல மோதிக்கொண்டிருக்கும் விஷயங்களைக் கவனியாது அவைகட்கு அப்பாற்பட்டு நிற்கும் வழி தோன்றுது. அதிகப் பழக்கத்திற்கு ஆளாக்கிக் கெட்டுப்போகும் மனிதர்கள் நிறைந்த இவ்வுலகில் பிரபஞ்சவிசித்திரம், அதன் ரகசியத்தின் பெருமை, அதைப்பூரணமாக அறியமுடியாது என்பவைகளையும், நமது அறிவின் சிறுமையையும் உள்ளபடி உணரும் சக்தி ஒன்று உண்டென்றும், அது வருவதற்கே ஈஸ்பர கிருபையென்றும், ஞானமென்றும், புண்ணியமென்றும், தவமென்றும சொல்லி அதை அடைவதற்கே கடவுள் பக்தியென்றும், யோகமென்றும், கர்மமென்றும் வழிகாட்டி அவ்வழியில் நடக்கும் திறமை வருவதற்கே சமத்துவம், சகோதரத்துவம், தன்னலம் விரும்பாமை முதலிய குணங்கள் நிறைந்தால் இப்பிரபஞ்ச வாழ்க்கையின் விர்த்தியிலும் அதற்கு அப்பாற்பட்ட ஞானத்தின் ஆனந்தத்திலும் இருக்கும் மனிதனே எல்லா ஜெந்துக்களைவிட உயர்ந்தவன் என்பது தேசப் பெரியவர்கள் வாக்கு.

நம் தேசப் பெரியவர்கள் கண்டு அறிந்து அனுபவித்த ஞானம் எல்லாம் நமக்கு உதவியாகவே இருக்கின்றன. அவைகளின் சகாயத்தின் பேரிலும் நமது சிற்றறிவிற் கெட்டிய வரையிலும் அகங்காரம் நிறைந்த விசித்திர ஜந்துவாகிய மனிதனது ஸ்வரூபத்தைப் பற்றி விவரிப்போம். மனிதன் சகல ஜந்துக்களிலும் மேலான ஜந்து என்று எல்லாரும் சொல்லுகிறார்கள். மனிததேகத்தின் ஸ்வரூபத்தை நோக்கில் இதை நாம் ஒத்துக் கொள்ள முடியாது. மனித தேகம் எவ்வளவு விசித்திரமாகவிருந்த போதிலும் மனிதனை விட அதிக பலம் அழகு காம்பீரியம் முதலிய சிறப்புவாய்ந்த சரீரங்களையுடைய ஜந்துக்கள் காணப்படுகின்றன. குதிரையே நல்ல தேகக் கட்டுடையதென்று பிரகிருதி சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். நல்ல கொம்பன் யானைக்கிருக்கின்ற காம்பீரியம் நல்லமல்லக ஜெட்டிக்குக்கூட இல்லை. சிங்கத்திற்குள்ள பார்வை நல்லவம்சத்திற்பிறந்த அரசனுக்குக்கூட இல்லை சிறந்த காளை மாட்டின் நடையானது போர் வீரனது நடையைப் பழிக்கும் திறனுடையது. கானமயிலாடக்காணும் கண் குளிரும் காட்சி கைகாட்டும் நடன மாதரிடமும் காணாது. ரம்பைக்குக் கூட பஞ்சவர்ணக்கிளியின் அழகு இருந்திருக்காது. படமெடுத்தாடும் சர்ப்பமும் ஆகாயத்தில் அசையாது உருவிச் செல்லும் கருட பட்சியும் அபூர்வ ஜெந்துக்கள். ஆகையினால் தேக விஷயமாகப் பார்க்குங்கால் மனிதன் மற்ற ஜெந்துக்களைவிட தேகத்தில் சிறப்பு வாய்ந்தவனென்று சொல்லுவதற்கில்லை. ஆகையால் மனிதனுக்குச் சிறப்பு அவன் தேகத்தால் உண்டாவதில்லை. அவன் மேன்மையும் நிமிர்ந்த முகத்தால் அவனுக்குண்டாகும் காம்பீரியமும் முக்கியமாக அவனுக்குள் ஆடி ஒளிரும் பரஞ்சோதியினது சத்திய நெறியின் சிறப்பால் உண்டாகின்றன.

இனி மனிதனது சிறப்பு தேகத்தை விடச் சிறந்தனவாகிய இந்திரியங்கள் மனஸ்ஆகியஇவைகளால் உயர்வு உண்டாகின்றதோ என்பதை விசாரிக்கப் புகுவோம். இந்திரியவ்யாபாரங்களை மாத்திரம் நாம் தனியாகப் பார்த்தால் மனிதன் மற்ற ஜந்துக்களை விட மிகத் தாழ்ந்தவனாகப் போகிறான். உற்று நோக்குங்கால் "புலி கரடி முதலியவைகள் கூட நல்லவைகள்" என்ற மதிப்பை நமக்கு உண்டாக்கும் குணம் வாய்ந்தவர்கள் மனிதர்களுள் அநேகர் காணப்படுகிறார்கள். புலிக்கும் கரடிக்கும் இயற்கையாக ஏற்பட்டுள்ள இரைகளுண்டு. மனிதனுக்கு இவற்றில் எல்லையில்லை. ஆடுமாடுகள், இன்னும் பூமியில் உலாவும் மிருகங்கள், ஆகாயத்தில் பறக்கும் பட்சிகள், சமுத்திரத்திலுள்ள மீன்கள், சமுத்திரத்தின்வழியாக ஓடும் ஜீவஜெந்துக்கள் ஆகிய எல்லாம் மனித விரோதிகளாக ஏற்படலாம். எறும்பு முதல் மனிதர் பரியந்தம் உள்ள ஜீவராசிகளில் எதைத் தான் மனிதன் தன்னயம் கருதி வருத்தாது விடுகிறான்? இந்திரிய வியாபாரப் பழக்கத்தில்மேலான உறவுகள் எல்லாம் சிதறிப் போகின்றன. தாயாதி என்ற நெருங்கின உறவைக் காட்டும் ஓர் பதம் விரோதி என்றபொருளைக் கொடுக்கும் நிலைக்கு வந்து விட்டது. சிலந்தியும் எறும்பும் அநேகருக்கு நற்போதனை செய்திருக்கின்றன. பசுவின் சாத்வீகம் பழமொழியாகி விட்டது. பாம்புகள் தமக்குள்ள சங்கீத அனுபவ சக்தி புஷ்பங்கள் வாசனை முதலியவற்றை அனுபவிக்கும் சக்தியாகிய இவைகளால் கவிராயர்களைப் பழிக்கும் திறனுடையவையாகின்றன. மனிதனது அளவிட முடியாத சுயநலங்கருதல், வீண் பெருமை பேசல், கொடுமை, தற்புகழ்ச்சி, விளையாட்டுத்தனம் ஆகிய இவைகளைப் போன்ற பிசாசகுணங்களை ஆழ்ந்து நோக்கினால் தனது சமூக வாழ்க்கையில் சிற்சில சமயங்களில் தற்கொலை செய்துகொண்டால் நலமாக விருக்குமென்ற எண்ணம் வந்திராத மனிதன் இருப்பது அபூர்வம். இதை நினைத்துத்தான் மனிதன் சும்மாவிருக்கக் கற்றுக்கொண்டானாகில் உலகிலுள்ள அரைவாசி துக்கங்களும் பறந்தோடிப்போம் என்றார் கால்கல் என்ற பிரகிருதி சாஸ்திரி. மனிதன் அவ்வாறு இருக்கமுடியாது. கீதையில் கிருஷ்ணன் சொன்னது போல சதா கர்மங்களைச் செய்துகொண்டு பிறப்பு இறப்பு ஆகிய இவைகள் வளர்வதற்கு வேண்டிய வித்தை விதைத்துக்கொண்டே இருக்கவேண்டியிருக்கிறது. சிங்கத்தினது கோபமும், யானையினது மாறுப்பகையும், புலியினது கொடுமையும், பாம்பின்விஷமும், நரியின் தந்திரமும், பன்றியின் ஆபாசகுணங்களும், எலியின் கெட்ட குணமும் மனிதனிடம் குடிகொண்டிருக்கின்றன. சிற்சில சமயங்களில் முற்கூறிய ஜந்துக்களைவிட அதிகமாகவும் போய் நடந்துகொள்ளுகிறபடியால் அவன் ஸ்திரமாயும் வரவரப் பலமாகும் குணமுள்ளதாயும் ராகத் துவேஷங்களாகியதாகியும் உள்ள வலையை சிலந்தி தன் வலையை உண்டாக்குவதைப் போல ஸ்வபாவமாகவே ,உண்டாக்கிக்கொண்டு வருவதால் மனதிலும் இந்திரியங்களினாலும் மற்ற ஜெந்துக்களைவிட மனிதன் உயர்ந்தவன் என்று சொல்லுவதற்கில்லை.

மனிதனது அறிவின் ஸ்வரூபத்தை நோக்குங்கால் அவன் ஜீவராசிகளைவிடச் சிறப்பு வாய்ந்தவனாகக் காணப்படுகிறான். இதில் தான் அவனுக்கு ஏற்றம் சற்று காணப்படுகிறது. தனது கணித விஷயங்களில் மனதை இழந்து கிடந்த நியூடனும் மலைச்சிகரத்திலிருந்து சந்திர மண்டலத்தை தமது தூர திருஷ்டிக் கண்ணாடி மூலமாகப்பார்த்து ஆனந்தித்த காலிலீயோ என்றவான சாஸ்திரியும் இன்னும்அபூர்வத்தைக்கண்டு ஆனந்தப்பட்டவர்களும் நம் தேசத்து யோகிகளும் சித்தர்களும் அறிவில் ஈடுபட்டு பிரபஞ்சத்தை மறந்த மகான்களல்லவா? இப்பேர்ப்பட்டவர்கள் நம்முள் எவ்வளவு அபூர்வமாகக் காணப்படுகிறார்கள், மிஞ்சியிருக்கும் ஜனங்கள் என்னும் பாலைவனத்தோடு ஒப்பிட்டால் இவர்கள் எவ்வளவு அபூர்வம்! ஒவ்வொருவனுக்கும் அறிவுண்டு. அது இந்திரிய வியாபாரங்களோடு பேதா பேதமின்றிக் கலந்திருப்பதால் அது அவனை வெகு காலம் காப்பாற்றுவதில்லை. அது பிரபஞ்ச விஷயங்களாகிய கொடிய சமுத்திரத்தில் இடைவிடாது அவனைத் தத்தளிக்கச்செய்யும் புயலாக ஏற்படுகின்றது. மனிதன் அடைந்திருப்பவைகளுள் அறிவு மிகச்சிறந்ததே. ஆனால் வக்கீல் ராஜ்ய வாதி போன்றவர்களிடத்தில் அது சீர்குலைந்து காணப்பட்டு பொதுவாகவும் சிறப்பாகவும் ஜனங்களுக்குக் கெடுதலாக முடிகின்றது. அற்பமான தேகத்தோடும் இழிவான இந்திரியங்களோடும் மிக குறைந்த சக்திவாய்ந்த அறிவோடும் கெட்ட குணம் வீண் பெருமை அறியாமை ஆகிய இவைகளோடும் நாம் இருந்துகொண்டு நம்மை அறிவாளி என்று நினைப்பது பொருந்தாது. அறிவாளியாக இருக்கவேண்டுமானால் மனமும் இந்திரியங்களும் சுத்தப்படவேண்டும். இவைகள் சுத்தப்படவே கோவில், தெய்வ வழிபாடு, ஆசார அனுஷ்டானம் இத்தனையுமுண்டாயின. ஆனால் அவையனைத்தையும் தன் பக்கமே தன் லாபத்தின் பிழைப்பின் பெருமைக்கே திருப்பி அநேக அக்கிரமங்கள் செய்யப்படுவதும் எல்லோர் முன்னும் நிற்கிறது. அவையனைத்தையும் சீர்திருத்தினாலொழிய மனமும்இந்திரியங்களும் சுத்தப்படாது என்பதை நாம் தெரிந்துகொள்ளும் வரையில் அறிவால் நாம் அடையும் பலனுமொன்றுமில்லை. உயர்ந்த ஜாதியென்று நினைத்து யாரையும் தொடாமல் இருப்பதினாலேயே மனம் சுத்த

இதன் தொடர்ச்சி 20-ம் பக்கம் பார்க்க.

# இதிகாசம்.

## இராமாயணம்—பாலகாண்டம்

## 10ம் கட்டுரை

### திரு சந்திரசேகரப்பாவலர் எழுதுவது

மேலும் இராமனிடம் சதாநந்தன் கூறுகிறன்:— விஸ்வாமித்திரன் மேற்குத் திசையில் தவம் செய்துகொண்டு இருக்கும்போது அயோத்தியில் அம்பரீஷன் என்ெெருரு மன்னனிருந்தான். அவன் ஓர் கால் ஓர் யாகம் செய்ய, அந்தயாகப்பசுவைஇந்திரன் திருடிக்கொண்டு போய்விட்டான். அதனால் ருத்விக்குகள் அந்த பசுவை கொண்டுவரவில்லையானல் அநேக கொடிய பாவம் வருமென்றும் இல்லையானல் ஒரு நரப் பசுவைக் கொண்டுவர வேண்டுமென்றும் கூறிவிட்டனர். அதனால் அம்பரீஷன் பல இடங்களிலும் திரிந்து கடைசியாக ருசீகன் என்ற முனிவனை யடைந்து அவன் பிள்ளைகளில் ஒருவனை வேண்டினன். அம்முனிவனுக்கு மூன்று பிள்ளைகள். அம்முனிவன் மூத்த மகனை விலைக்கு தரமாட்டேனென்றனன். அவன் மனைவி இளைய பிள்ளையைத் தாரேன் என்ன, நடு மகன் தானே வருவதாக ஒப்புக்கொண்டான். உடனே அரசன் முதியவனுக்கு அநேக ஆயிரம் பசுக்களைக் கொடுத்து அப்பிள்ளையை விலைக்கு வாங்கிக்கொண்டு வந்தான். அந்த பையன் பெயர் நசச்சேபன். வழியில் நசச்சேபன் விஸ்வாமித்திரனைப் பார்த்து தன்னை காக்க வேண்டினன். விஸ்வாமித்திரன் இவனுக்கு மாமன். முனிவன் தனனுடைய பிள்ளைகளை யழைத்து அவர்களில்யாராவது ஒருவன் நசச்சேபனுக்குப்பதிலாக போக வேண்டினன். உடனே அவர்கள் தகப்பனைப் பார்த்து அகங்காரங்கொண்டு "நீர் தன் பிள்ளையைக்கொன்று அயலான் பிள்ளையை காக்க விரும்பினீர். இது நாயின் மாமிசத்தைத் தின்பதுபோல தகாத செயலாம்" என்றனர். உடனே முனிவன்சினந்து "நீங்கள் வசிட்டனுடைய பிள்ளைகளைப் போலாகி ஆயிரமாண்டு நாயிறைச்சியைத் தின்றுத் திரிக" என்று சபித்தான். பின் நசச்சேபனுக்கு இரண்டு மந்திரங்களை கூறி யனுப்பினன். மன்னவன் அப்பிள்ளைக்கு சிவப்பு ஆடை உடுத்தி யூபஸ்தம்பத்தில் கட்டி யாகத்தை நடத்தினன். முடிவில் அந்த மந்திரங்களை அப்பையன் சொல்ல இந்திரன் தோன்றி அப்பையனை காப்பாற்றி யாகத்தை ஒப்புக்கொண்டான்.

பின் விஸ்வாமித்திரன் அங்கேயே ஆயிரமாண்டு தவம் செய்ய நான்முகன் தோன்றி 'ரிஷி' என்ற பட்டம் தந்தான். நெடுநாட் கழித்து அந்த மேற்கு திசைக்கு மேநகை என்ற பெண் வந்தாள். அவள் ஓர் குளத்தில் நீராடும்போது முனிவன் அவளைக்கண்டு மயங்கி வேண்ட அவளும் அவனேடுகூடத் தங்கினள். கௌசிகன் அவளோடு பத்தாண்டு கூடியிருந்தான். பின் அவனுக்குத் தான் காம விகாரத்தில் ஈடு பட்டிருப்பது பிழை என்பது தோன்றிற்று. அதனால் அவன் மனம் வருந்தி அது தேவர்களுடைய கேடு என்று நினைந்து அச்சத்தால் நடுங்கிக்கொண்டிருந்த அந்த மேநகையைச் சபியாமல் இனிய சொற்கூறி அனுப்பிவிட்டான். பின் அம்முனிவன் அவ்விடத்தை விட்டு நீங்கி யிமய மலையை யடைந்து அங்கே கௌசிகீ நதிக்கரையில் தவம்செய்தான். ஆயிரமாண்டுகள் கழிந்தபின் நான்முகன் தோன்றி "மகரிஷி" என்ற பட்டம் தந்தான். அதிலும் திருப்தி யடையாமல் விஸ்வாமித்திரன திரும்பவும் கடுந்தவம்செய்தான். அதனால்தேவர்களுக்கும் இந்திரனுக்கும் பெரிய பயம உண்டாய்விட்டது. இந்திரன தேவர்களோடு அரம்பையைப் பார்த்து விசுவாமித்திரனிடம் போய் அவனை மயக்கும்படி கூறினன். அசந்த அரம்பை அஞ்சி "முனிவன் கொடிய சாபந்தருவான், ஆதலால என்னை அனுப்பவேண்டாம்" என்று வேண்டினள். அவ்வாறு கூறி நடுங்கி நிற்கும் அரம்பையை தேற்றி தானும் மன்மதனும் குயிலாக வந்து அவளுக்கு துணைபுரிவதாக கூறினன் இந்திரன். அவ்வாறே அரம்பை போய் முனிவனை மயக்க முயன்றாள். இந்திரன் குயிலாகிக் கூவினன் அது கண்டு விசுவாமித்திரன் சந்தேகித்து உண்மையை உணர்ந்து அரம்பையை நோக்கி "நீ பதினாயிரமாண்டு கல்லாகக் கடவாய், உன்னை ஓர் அந்தணன் விடுவிப்பான்" என்று சபித்தான்: உடனே அவள் கல்லாய் விட்டாள். அதைக்கண்டு இந்திரனும் அவன் கூட வந்த மன்மதனும் பயந்து ஓடிவிட்டனர்.

பின்னர் கோசிகமுனிவன் வடதிசை விட்டு கீழ்த்திசை சென்று தவமியற்றினன். இந்திரன் பல கேடுகள் புரிந்தும் முனிவன் சினங்கொள்ளாமல் தவம் புரிந்தான். ஓர் நாள் இந்திரன் ஓர் பிராமணனைப்போல உருக்கொண்டு முனிவன் உண்ணும்போது அவ்வுணவை யிரந்தான. முனிவன் தடையின்றி அதை கொடுத்துவிட்டுப் பட்டினியிருந்தான். இவ்வாறு கடுந்தவம் செய்த விஸ்வாமித்திரனிடம் தேவர்களுடைய வேண்டுகோளால் நான்முகன் தோன்றி 'பிரம்மரிஷிப்' பட்டம் தந்து வசிட்டனையும் அதை ஒப்புக்கொள்ளச் செய்தான்.

இவ்வாறு சதாநந்தன் விஸ்மாமித்திரன் வரலாற்றை யெல்லாம் சொல்லி முடித்தான். அப்போது மாலைக்காலமாய் விட்டபடியால் சனக மன்னன் முனிவனிடம் விடை பெற்றுச் சென்றான். விஸ்வாமித்திரனும் இராமஇலக்ஷ்மணருடன் தாம் தங்குமிடம் சென்றான். இதுவரை வரலாற்றை ஆராய்வோம்.

கௌசிகன் மேற்குத் திசையை யடைந்ததும் அம்பரீஷன் என்ற மன்னன் ஓர் யாகம் செய்ய, சனனுடைய யாகப் பசுவை திருடிய பழைய திருடனகிய கீழ் மகன் இந்திரன், இந்த யாகப் பசுவைத் திருடிப் போய்விட்டான். அதனைத் தேடி காணாத மன்னன் ஓர் நரபசுவைத் தேடினன். இதனால் நரமேதமென்பது அக்காலத்தில் சர்வ சதாரண மென்பது தெரியவருகிறது. நரமேதமானது மனிதனைக்கொன்று நெய்யிலிட்டுப் பொரித்து தின்னும் யாகம். கம்பரோ அம்பரீஷன் யாகப்பசுவை இந்திரன் திருடியதைக் கூறாமல் முதலிலேயே அவன் நரமேதம் செய்யத்தொடங்கினன் என்று கூறுகிறார். இது தவறுதான். கம்பர் பாட்டு வருமாறு:—

"குதைவரிசிலைவாட்டானைக் கோமகன்
    அம்பரீடன்,
சுதைதருமொழியன் வையத்துயிர்க்குயி
    ராய தோன்றல்,
வதைபுரிபுருட மேதம் வகுப்பவோர் மைந்
    தற் கொள்வான்,
சிதைவிலன் கனகந்தேர் கொண்டடவிக
    ருவிச்சென்றான்".

இப்பாடலில் அம்பரீட மன்னன் உலகில் உயிர்க்குயிர் போல மிக நல்லவனென்றும் கொலை வேள்வியாய புருடமேதம் செய்யத் துணிந்து விலைக்கு வாங்கப் பொன்னெடு போனன் என்று கூறப்பட்டுள்ளது. உயிர்க்குயிரான மன்னன் கொலை வேள்வியிலும் மிகக் கொடியதாய புருடமேதத்தை எவ்வாறு செய்யத் துணிந்தனனே தெரியவில்லை. கம்பர் மன்னனை முதலில் நல்லனென்று கூறிவிட்டுப் பின் அதற்கு மாறாகக் கொலையிற் கொடியான் என்றார். இது எவ்வாறு பொருந்துமோ? மனிதனைக் கொன்று அவ்வுடலைத் தின்பதாய இக்கொடிய வேள்வியைச் செய்தோர் இழிதகைமைதானென்னே? இவ்விழிதகைய கதைகளை மிக நல்லனவென்று பாராட்டிப் படிப்போரை அறிவிலரென்று கூறவோ, அன்றி இழிதுணரென்று புகலவோ அறிகிலம். அறியாமை என்றே கூறி அமைவோம்.

மன்னன் நரவேள்விக்காக ஓர் மனிதனை விலைக்கு வாங்கினன். ஆடுமாடுகள் விலைக்கு வாங்குவதுபோல மனிதர்களையும் விலைக்கு வாங்குவது அக்காலத்து ஆரியர் பழக்கம்போலும். அரசாங்கத்தார் தடை செய்யாதிருப்பாரேல் இக்காலத்திலும் மனிதர்களை விலைக்கு வாங்கவும் நரவேள்வி நடத்தவும் செய்வார் போலும்!

மன்னன் விலைக்கு வாங்கிவந்த பையன் விஸ்வாமித்திரனைத் தஞ்சமடைந்தான். முனிவன் தன் மக்கள் நால்வரில் ஒருவனை அவனுக்குப் பதிலாக அனுப்ப முயல்கிறான். அவர்களோ தம் தந்தை செயலை இகழ்ந்து, அது நாயிறைச்சியைத் தின்னலிலும் கேடுகெட்ட தென்கின்றனர் உடனே முனிவன் தன் மக்களைநாயிறைச்சியைத் தின்று பலகாலமலைய சபிக்கிறான். முனிவனுடைய மக்கள் கூறிய கூற்றுகளைக் கம்பர் கூறாது மறைத்து 'அவர்கள் மறுத்துப் போயினர்; தந்தை சபித்தான்' என்றுமட்டும் கூறுகின்றனர். கோசிகன் முன்னரும் வசிட்டன் மக்களை நோக்கி 'நாயிறைச்சியைத்தின்று திரிக' எனச் சபித்தமை கண்டோம். இது இம்முனிவனுக்கு நாயிறைச்சி தின்ற வாசனையாலெழும் சொற்கள் போலும். அதுவும் நாய்வாலைத்திருடி இவ்விசுவாமித்திரன் உண்டவனாவான்.

"நாய்வாற் களவினல் ஞாலமிகழப்பட்டான்
    தூயனும் காதிமகன்"

என்கிறது சோமேசர் முதுமொழி வெண்பா.

அம்பரீஷனது யாகத்தின் பின்னரும் கௌசிகன் மேற்குத் திசையில் தவம் செய்து கொண்டிருந்தான். அப்போது மேனகையுடைய மையலிற்பட்டான். பின் உண்மையறிவுற அவளைச் சபியாது இனிய சொற்கூறியனுப்பினன். இதற்கு மாறாகக்கம்பர் கூறுகிறார். இச்செய்தி கிழக்குத் திசையில் நடந்ததாகக் கூறுவதோடு அவளை முனிவர் மண்ணில் மனிதப் பிறப்பெடுக்கச் சபித்தானென்றும் கூறுகிறார். அத்தோடு வால்மீகி மேநகையென்று கூற கம்பர் திலோத்தமையென்று அப்பெண்ணை மாற்றிக் குறித்தார். மிகவும் பொறுமையுடையவராக வால்மீகி கூறும் விசுவாமித்திரனைக் கம்பர் கொடிய கோபக்காரனுகக் காட்டியது வியப்பே.

முனிவன் வடதிசையை யடைந்தபோது திருட்டுக்காமி இந்திரன் அரம்பையை ஏவி முனிவனை மயக்கத் தூண்டுகிறான். பின் அரம்பை தண்டனை யடையக்கண்டு பயந்தோடுகிறான். இத்தீயோனை நம்பி அரம்பை சென்றது மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்கியதுபோலாயிற்று. இக்கதை கம்பர் முற்றிலும் கூறாது விட்டுவிட்டார்.

தன்னுடைய தவத்தைக் கெடுத்த மேநகையைத் சபித்துவிடுத்த முனிவன் தன்முன் வந்து நின்ற அரம்பையைக் கல்லாய்க்கிடக்கச் சபிக்கிறான். இக்கதையைத்தான் கண்டு மயங்கிக் கம்பர், அகலிகையை முனிவன் கல்லாய்க் கிடக்கச் சபிக்கின்றனனென்று கூறினர் போலும். வடதிசையில் மேலே கண்ட நிகழ்ச்சிகள் நடந்திருக்க இவைகளை யெல்லாம் கூறாது இத்திசையில் முனிவன் பிரமரிஷிப் பட்டம் பெற்றான் என்கிறார் கம்பர். வால்மீகியோ அவன் கீழ்த்திசை சென்று கடுந்தவம் புரிந்து அப்பட்டம் பெற்றா னென்கிறார்.

கீழ்த்திசையில் இந்திரன் உணவிரந்தது முதலிய செயல்களைச் செய்தமையைக் கம்பர் விடுத்தார். நான்முகன் பிர்மரிஷிப் பட்டம் தந்தபின் கோசிகன் அவனை நோக்கி வசிட்டன் அதனை ஒப்புரைத்தல் வேண்டுமென்று கூற அவ்வாறே அங்கு வசிட்டன் கோசிகன் முன்வந்து ஒப்புகின்றனன். இவ்வரலாற்றையும் கம்பர் கூறாது விடுத்தனர். இவ்வாறு இவ்வரலாற்றிலும் கம்பர் பல மாறுபாடுகள் செய்தமை பலஞ்கின்றது இனி மேற்செல்லுதும்.

# த்தில் யாகம்.

## சாப்புக்கடை.



கொலை! கொலை!!

எட்டு ஆடுகள் கொலை!!!



யாகசாலைக்கு கோல்வதற்கு
ாண்டு போகப்படுகின்றது.

ஓமகுண்டத்திற்கு எதிரில் ஆட்டைக் கட்டிவிட்டு ருத்விக்குகள் முதலியோர் உட்கார்ந்துகொண்டு மந்திரங்களை ஓதி ஆட்டைக் கொன்று தின்னல்.

## கொலை செய்து சாப்பிடப்பட்டது.

### கொலை! கொலை.!!

#### திருவான்மியூரில் 4 ஆடுகள் கொலை செய்யப்படப் போகின்றன.

யாகநோய் பரவுகின்றது.

கும்பகோணத்தில் பார்ப்பனர்கள் பல ஆடுகளை கொலைசெய்து உண்டு சோமபானங்கள் குடித்ததை குறித்து வெளியான விவரங்களை முன்னர் வாசித்தேன். அத்தகைய அருவருக்க தக்க புலைத்தொழிலைகேட்டு உண்மைச்சைவர்களும் ஜீவகாருண்யமுள்ளவர்களும் திடுக்கிட்டுப் போயினர், யாகத்தின் பெயரால் பார்ப்பனர்கள் ஆங்காங்கு தீங்கற்ற ஆடு மாடுகளைக் கொலை செய்து வயிறு புடைக்கப் புலால் உண்டு கட்குடிக்கும் தீச் செயல்கள் தற்போது பல இடங்களுக்கும் பரவுவதாகத் தெரிகின்றது. குடந்தைக் கொலைச்செயல் திருவான்மியூருக்கும் வந்து விட்டது. திருவான்மியூர் என்பது சென்னையையடுத்த அடையாற்றுக்குச் சற்று தூரத்திலுள்ள கிராமமாகும், இக்கிராமத்தில் நஞ்சுண்டராவ் பங்களாவுக்கு அடுத்துள்ள தோட்டத்தில் பல பார்ப்ப

யப்பட்டன, 7 வது நாள் சுமார் 20 தடவை பார்ப்பனர்கள் சோமபானமும் அருந்தினார்கள். சில முக்கியமான சந்தர்பங்களில் பலர் புகைப் படம் எடுத்தார்கள் அப்புகைப்படங்கள் தான் மேலே இருப்பன. 'திராவிடன்'

### திருக்குற்றாலத்தில் ஓர் நிர்வாண சந்நியாசி.

அரித்துவாரிலிருந்து நிர்வாண சந்நியாசி ஒருவர் இக்கோயிலுக்கு எழுந்தருளியிருக்கிறார். இவருக்கு கோயிலுக்குப் பக்கத்திலும் அருவிக்கு சமீபத்திலுமுள்ள அம்பாள் தபசு செய்யக்கூடிய திரு கல்யாண மண்டபத்தில் வசிப்பதற்கு கோயில் அதிகாரிகள் இடங்கொடுத்திருக்கின்றனர். அவருக்கு சுமார் 40 வயது இருக்கலாமென்று தெரிகிறது. அவருடைய நீண்ட உருவையும் பருத்த உடலையும் அங்கம் ஒன்றும்

னர்கள் யாகம் நடத்தப் பந்தல்கள் போட்டு தக்க ஏற்பாடுகள் செய்திருப்பதாயும் இதற்காக இன்று நான்கு கொழுத்த ஆடுகள் கொண்டுவரப்பட்டிருப்பதாயும் இந்த தீங்கற்ற பிராணிகளின் உயிர் எந்நிமிஷத்தில்போகக்கூடுமோவென்று சொல்ல முடியாதிருப்பதாயும் இருக்கிறது, யாகத்தின் பெயரால் பார்ப்பனர்கள் அநியாயமாகத் தீங்கற்ற ஆடுகளை வதைத்துக்கொல்வதை ஜீவகாருண்ய சங்கத்தார் ஜீவஹிம்சை சட்டப்படி தடுத்து இவ்வாறு அநியாயமாக ஆட்டைச் சித்திரவதை செய்யும்கொடிய குற்றவாளிகளை ஏன் தண்டிக்கச் செய்யக்கூடாதெனத் தெரியவில்லை மதம், தெய்வம்; யாகம் முதலிய அர்த்தமற்ற பதங்களின் பெயரால் செய்யப்படும் அட்டூழியங்கள் என்று நாட்டை விட்டொழியுமோ அன்றுதான் தேசம் க்ஷேமமடையும். ஓர் நிருபர். 'திராவிடன்'

ஆடையால் மறையாது பிறந்த மேனியோடு இருக்கின்ற அம்மண அழகையும் பார்த்து அதிசயத்து தென்காசி இலஞ்சி முதலிய பக்கக் கிராமங்களிலிருந்து வந்து பல பெண்களும் ஆண்களும் தேங்காய் பழம் வைத்து தெரிசித்துப் போகின்றனர்.

மகாத்மா காந்தியின் பாதங்களை இந்த ஜனங்கள் தொட்டு கண்ணில் வைத்தது அடாத காரியமென்று நமது சிமை ப்பிரதிநிதி ஸ்ரீசக்லத்வாலா கண்டித்தெழுதினர். ஆனால் இவ்விடத்தில் சில சிஷ்யர்கள் இச்சந்யாசியின் குறியையும் தொட்டு கண்ணில் வைத்து பூஜிக்கின்றனர்.

நமது தர்மகர்த்தர்கள் தெய்வபக்தியை வளரச்செய்யவேண்டிய சைவ வைஷ்ணவ ஆலயங்களில் தாசிகள் ஆடல் பாடல்களுக்கு இடங்கொடுத்து ஆண் பிள்ளைகள் களிகூரச் செய்யவும் நிர்வாண சந்நியாசிகளைத் தருவித்து நமது பெண்டிர்சகோதரிகளை பணிவிடை செய்ய விட்டு சந்தோஷப்படுத்தவும் எந்த வேத ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கிறதென்பது தெரியவில்லை, ஐயோ தேவாலயமே! பாழும் பக்தியே!

ஓர் பரிதாபி.


### நல்ல சாமான் விலை சரசம் இனும்

முன்பணம் அனுப்புகிறவர்களுக்கு தபால் சார்ஜ் இனும். ரூபாய் 1-க்கு டஜன் 16 காலர் கலர் கிளாஸ் பொத்தான். கொஞ்சம் ஸ்டாக் இருக்கிறது. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

K. பாலய்ய செட்டி,
ஷாப் காகூர், S. I.

# மாயவரம் மகா நாடும் காங்கிரஸ்காரர்களுக்கு அடியும்.

## (உண்மையாக நடந்த விவரங்கள்)

## அய்யர்—அய்யங்கார்களின் ஓட்டம்.

### விபீஷணர் ஸ்ரீ வரதராஜுலுவின் திண்டாட்டம்.

### ஸ்ரீ வரதராஜுலு சுயமரியாதை வீரர்களின் அடிபணிந்து மன்னிப்புக் கேட்டது.

*(சமீபத்தில் கூடிய மாயவரம் காங்கிரஸ் கூட்டத்தில் நடந்த அடிதடி சம்பவங்களையும், மண்டை உடைத்து ரத்தம் சிந்தியதாகச் சொல்லப்பட்ட வீரர்களையும் நேரில் கண்டு விசாரித்து உண்மையை அறிவிக்குமாறும், இதன் மூலம் தஞ்சை ஜில்லாவில் தோன்றிய உணர்ச்சியைத் தெரிவிக்குமாறும் நாம் நமது விசேஷ நிருபரை மாயவரம் முதலிய இடங்களுக்கு அனுப்பியிருந்தோம். அவர் நேரில் சென்று விசாரித்தெழுதிய ரிப்போர்ட்டை அப்படியே கீழே பிரசுரிக்கின்றோம். வாசகர்கள் உண்மையைப் படித்து 'தமிழ்நாடு'வின் புரட்டையும் ஒத்திட்டுப்பார்த்து உணர்வீர்களாக. (ப—ர்)*

(நமது விசேஷ நிருபர்)

மாயவரம் என்பது தஞ்சை ஜில்லாவில உள்ள ஒரு முக்கியமான முனிசிபல் ஸ்தலம். இதன் ஜனத்தொகை 40 ஆயிரமாகும். காவேரி நதியானது ஊருக்கு நடுவில் ஓடப்பெற்ற சிறப்பையும், அதனால் ஏற்பட்ட இருமருங்கிலும் உள்ள செழுமையான வனப்பையும, சைவ வைஷ்ணவ ஆலயங்கள் பலதைக் கொண்ட பான்மையும், இங்கிருந்து வடக்கே சிதம்பரத்திற்கும், தெற்கே திருவாரூருக்கும், மேற்கே கும்பகோணத்திற்கும், கிழக்கே தரங்கம்பாடிக்கும் போகும் 4 ரயில்வே பாதைகளும் சந்திக்கும் விசேஷத்தையும் மாயூரம் இயற்கையில் பெற்றிருப்பதால் இங்கே பல பெரிய பிராமணரல்லாத மிராசுதார்களும், வியாபாரிகளும், கைத்தொழிற் சிறப்பு வாய்ந்த நெசவாளிகளும், மேற்படியார்களை அண்டிப் பிழைக்கும் பார்ப்பனர்களும், மிராசுதாரர்களின் சத்திரம் சாவடிகளிற் சாப்பிட்டு காலங்கழிக்கும் உண்ணக்காவடிகளும், அவர்களை அடுத்து பிடுங்கித் தின்னும் பார்ப்பன வக்கீல் கூட்டத்தாரும், தோகையரிடம் தூது செல்லும் கூட்டத்தாருமாக உள்ள பலதிறப்பட்ட ஜனங்களும் வசித்து வருகின்றனர். எந்த இயக்கம் வந்தாலும், வலுவடைந்தாலும் அது இங்கேதான் முதன் முதலில் வந்து அரங்கேற்றம் பெற்றுப் போவது வழக்கமாயிருக்கின்றது.

(1) வங்காளப் பிரிவினையின்போது முத்தய்ய தாஸ் என்ற சிறுவர் இங்கே தான் அதிகமாகப் பிரசங்கம் செய்தது.

(2) ஒத்துழையாமையின் போது சென்னை மாகாணத்திலேயே முதன்மையாக நின்ற தஞ்சை ஜில்லாவிற்கு முதன்மையாக நின்றது மாயூரம்தான்.

(3) மாயூரத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் ஆர். சின்னையா பிள்ளை என்கிற பெரிய மிராசுதாரும், சிதம்பரம் ஸ்ரீமான் என். தண்டபாணி பிள்ளையும் இவ்வூரில் தான் சிறையிருந்து தண்டனை பெற்றவர்கள்.

(4) காங்கிரசிற்குக் காரியதரிசியாய் இருந்தவரும், தற்காலம் கதர் போர்டு காரியதரிசியாய் இருப்பவரும் ஸ்ரீமான் நாயக்கருக்கு வலது கை போன்ற அவருடைய சொந்தவூரில் கஷ்டப்பட்டு, சமீபத்தில் "[illegible]" என்கிற ஆங்கில வாரப் பதிப்பிற்கு ஸ்ரீ நாயக்கருடன் கூட்டாசிரியப் பதவியை வகித்துக்கொண்டிருக்கிறவருமான, ஒத்துழையாமையில் ஈடுபட்டு தமது ஐகோர்டு வக்கீல் தொழிலைத் துறந்து சிறை சென்ற உத்தம வீருமான எஸ். இராமநாதன் பிள்ளை எம். ஏ., பி. எல்., அவர்களும் மாயூர வாசிதான்.

(5) ஒத்துழையாமையைக் கொல்ல ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் வட இந்தியாவில் சம்மதி கொடுத்து வந்தபோது, அகில இந்திய ஒத்துழையாமைச் சங்கத்தை நிறுவி மாறுதலில்லாமல் அதன் தலைமை ஸ்தானத்தை மாயூரத்திற்கு மாற்றி அரிய வேலை செய்யப்பட்டதும இவ்வூரில்தான்.

(6) குருகுலப் போராட்டத்தின் போது காவேரி நடுவில் ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடு பிரசங்கம் செய்ய ஆரம்பித்ததும் அவரைப் பேசவொட்டாது தடுத்து அடித்து விளக்குகளை உடைத்து, ஒன்றுக்கிருந்து காய்ந்த மணலை சாமாக்கி உருட்டி ஸ்ரீ நாயுடுவை அடிக்க பார்ப்பனக் காலிகளையெல்லாம் பதறப் பதறத் துரத்தி அடித்து அக்காலத்திலேயே சுயமரியாதையை நிலை நாட்டிய சுத்த வீரர்களாம் ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை போன்ற பல உத்தம வீரர்களை மாயூரம் இன்றும் தாங்கிக்கொண்டிருக்கிறது.

(7) போலி தேசிய வாதிகளின் புரட்டு அதிகமானதும், உண்மை தேசிய வாதிகளாயும், சிறை சென்ற வீரர்களாயும் உள்ள எல்லாரும் ஸ்ரீ நாயக்கர் கட்சியில் சேர்ந்து ஒற்றுமையுடன் வேலை செய்து வருவது இந்த மாயவரத்தில் தான் காண முடியும்.

(8) சென்ற வருஷம் தஞ்சை ஜில்லாவில் பிராமணரல்லாதாரின் மகாநாட்டை சிறப்புடன் கூட்டி அதன் தலைவராய் ஸ்ரீ கிருஷ்ணன் நாயரைப் பெற்று அவருக்கு இவ்வருடம் சட்ட மெம்பர் பதவியைக் கொடுப்பதற்குக் காரணமாயிருந்தது, மாயூரம்தலைமையாகும்.

(9) கனம் முத்தையா முதலியாருக்கு ஓட்டு கொடுத்து சட்ட சபைக்கனுப்பி அவரை மந்திரியாக்கி பெரிய ஆடம்பரத்துடன் வரவேற்று உபசரித்ததும் மாயூரம் தான் என்று சொல்வது மிகையாகாது.

(10) மாயூரத்தைச் சுற்றியிருக்கும் தருமபுரம் திருவாவடுதுறை, திருப்பனந்தாள் முதலிய பெரிய மடாதிபதிகளும் பார்ப்பனர் கொட்டத்தை ஆதியில் தேவஸ்தான சட்டத்தை எதிர்த்த போதிலும், இப்போது அதன் அடி பணிந்து அடங்கி [illegible] மாயூரத்தின் பெருமையையே அதிகப்படுத்துகிறது.

(11) முடிவாக சமீபத்தில் ஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யர் மீட்டிங்கில் மரியாதையாய் வெளியேற்றப்பட்டு அவர் வரவேற்கப்பட்டதும், பாகாண காங்கிரஸ் கமிட்டி கூடியபோது ரத்தத்தைச் சிந்தியாவது அவர் கூட்டத்தார்களுக்கு நற்புத்தி கற்பித்துச் சுயமரியாதையை ஸ்தாபித்ததும், தமிழ்நாட்டின் கலங்கரை விளக்கமாய் நிற்கும் மாயூரத்தில் தான் என்க.

இப்படிப்பட்ட மாயவரம் க்ஷேத்திரத்தில் நமது காங்கிரஸ் காரர்கள் சைமன் கமிஷன் பகிஷ்காரத்திலும் மந்திரியமைப்பிலும் சென்னை மாகாண நிருவாகப் பொறுப்பிலும் பெரிய தோல்வியுற்றயர்திருந்ததை நீக்கிஅதற்குப்பரிகாரம் தேடிப் பிராயச்சித்தம் செய்து கொள்ளக்கூடியது ஓர் ஆச்சரியமல்ல. இக்கூட்டத்தின் சிறப்பை வருணிக்கப் புகுமுன் முகவுரையாக சில விஷயங்களை வாசகர்களுக்கு அறிவிக்க வேண்டியிருக்கிறது. ஆதாவது:—

பிராமணரல்லாத ஸ்ரீ சாமி வெங்கடாசலம் செட்டியார் போன்ற சிறந்த தேசிய வீரர்களுக்கும் இன்னல் விளைத்து சுயநலம் மேற்கொண்டு சுயராஜ்யக்கட்சியில் நின்று காங்கிரசை உபயோகித்து வரும் கூட்டத்தில் தலை சிறந்து விளங்கும் அயோக்கிய சத்தியமூர்த்தியின் விஜயத்தைமுன்னிட்டு மயூரத்தில சமீபத்தில் ஒரு மீட்டிங்கூட்டப்பட்டது. இதைக் கேட்டதும் உள்ளூரில் உள்ள சுயமரியாதையுள்ளவர்களின் உணர்ச்சி தூண்டப்பட்டு அயோக்கியர்களின் விஜயத்தை பகிஷ்கரிக்கும் முகத்தான் தங்களுடைய அதிருப்தியைக் காட்ட வேண்டி பலவிதமான மறியடி முதலியவற்றால் தோரணங்கட்டி மீட்டிங்கு நடக்குமிடத்தில் தொங்கவிட்டு எச்சரிக்கை செய்திருந்தார்கள். குறிப்பிட்ட காவேரிக் கரையில் குறிப்பிட்ட இடத்தில் மீட்டிங்கிற்கு குறிப்பிட்ட நேரத்தில் யாரும் ஜனங்கள் வரவேயில்லை. பிரபல மிராசுதாரும சட்டசபை மெம்பருமான ஸ்ரீ மருதவனம் பிள்ளையும் ஸ்ரீ சத்தியமூர்த்தியும் மேற்படி மீட்டிங்கிற்கு வந்தும் மீட்டிங்கிற்கு அக்கிராசனம் வகிக்க ஒரு காங்கிரஸ் வாதி கூட மருந்திற்கும் அகப்படவில்லை. பின் சீமைத்துணி கட்டிய ஸ்ரீ ரகுநாதராவ் அக்கிராசனம் வகித்து கூட்டத்தை நடத்த முடியாமல் திணறி கேட்டகேள்விக்கும் பதில் சொல்ல முடியாமல் ஸ்ரீ மருதவனம் பிள்ளையும் ஸ்ரீ சத்தியமூர்த்தியும் ஓட்டம் பிடித்து ஓடிமறைந்தனர். இதன் பிறகு மந்திரி ஸ்ரீ முத்தையா முதலியாருக்குப் பெரிய வரவேற்பும் மாயவரம் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து உபசாரப் பத்திரமும். வாசித்துக் கொடுத்து பெருமை படுத்தப் பட்டது. இதை யெல்லாவற்றையும் அறிந்து காங்கிரஸ் கோஷ்டியார், தம்முடைய கட்சியின் [illegible]த்தைக் காக்க வேண்டியும் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் மானங்கெட்ட மீட்டிங்கிற்காகப் [illegible] செய்யவும், ஸ்ரீ மருதவனம் பிள்ளை மூலம [illegible] ஏமாற்றி பிராமணரல்லாதாரின் ஒத்துழைப்பை நாடியும், தற்போதுள்ள மந்திரி சபையையாரும் ஆதரிக்கவில்லை யெனப் போலி நாடகமாடவும், மைலாப்பூர் கோஷ்டியார் தங்களுடன் சேர்ந்த விபீஷணர்களை நம்பி தமிழ்மாகாண காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகக் கூட்டத்தையும், பொதுக் கமிட்டி கூட்டத்தையும் மேற்படி கமிட்டிகளில் யாருமில்லாத மாயவரத்தில் 22-4-28 ல் கூட்டம் நடைபெறும்படி ஏற்பாடு செய்து விட்டனர். இதிலிருந்து தான் புதிய சகாப்தம் தோன்ற ஆரம்பித்திருக்கிறது.

(1) மேற்படி கமிட்டி கூட்டங்களுக்கு எல்லாரும் தவறாமல் வந்து சிறப்பிக்கும்படி மைலாப்பூராலும், பிராட்வே விபீஷண ஆழ்வாராலும், விசேஷ வரவேற்புகள் தனித்தனியாக அனுப்பப்பட்டன.

(2) காங்கிரசிற்கே சம்பந்தமில்லாத ஆக்கூர் ஆதீனபுரம் மிராசுதாரும், மருதவனம் பிள்ளையின் மைத்துனருமே ஆகிய ஸ்ரீ நாகலிங்கம் பிள்ளை யவர்களின் திருவிழுந்தூர் வீட்டில் தான் கமிட்டி கூட்டங்கள் நடைபெறும்படி செய்யப்பட்டிருந்தன.

(3) ஷை கமிட்டி கூட்டங்களுக்கு வெளியார் யாரையும், விட ஏற்பாடு செய்யாமல் பயந்துக் கொண்டு வழக்கத்திற்கு விரோதமாக கூலியாட்களையும். தேரிழுக்கும் வழக்கமுள்ள பண்ணையாட்களையும் வெளியில் காவலாக நிறுத்தி திருடர்கள் போல் இரகசியமாக கூட்டத்தை கூட்டிப் பேசி முடித்தனர்.

(4) பெரிய சண்டைகளுக்கிடையில் தனித்த தலைவர்கள் இதற்குமுன் திறந்தவெளியில் மீட்டிங்குகள் போட்டிருக்க, இப்பொழுது ஒரு கொட்டுக்கூடைத் தலைவர்கள் வந்திருந்தும் திறந்த வெளியில் மீட்டிங்கு போட அஞ்சி, ஒரு மூடப்பட்ட சிறிய ஹைஸ்கூல் ஹாலில் மீட்டிங்கு நடத்தியதாக பெயர்செய்து எப்படியாவது மானத்தைக் காக்க ஏற்பாடு செய்திருந்தனர்.

(5) முன்னடியே ஷை ஹாலில் மீட்டிங்கு என்று சொன்னால் இக்காங்கிரஸ் யோக்யர்களின் செயலைக் கண்டிப்பதற்குச் சுயமரியாதை யுள்ளவர்கள் தயாராய்விட்டால் என்ன செய்வதென்று பயந்துக்கொண்டு 22-ந்தேதி மாலை 6-மணிக்குத் 'மாயவரம் ஹைஸ்கூல் ஹாலில் காங்கிரஸ் மீட்டிங்கு கூடுமென்று' நோட்டீசுகள் வழங்கப்பட்டன.

(6) ஆதலால் பொது ஜனங்கள் யாரும் வருவதற்குச் சௌகரியமில்லாமலும், மாகாண கமிட்டி மெம்பர்களும். உள்ளூர் பார்ப்பன வக்கீல்களும், ஸ்கூல் மாணவர்களும், தேரிழுக்கும் அடியாட்கள் 200 பேர்களுமாககூடி மீட்டிங்கை நடத்த ஆரம்பித்து விட்டார்கள்.

(7) ஒவ்வொரு காங்கிரஸ் மெம்பர்களின் பக்கத்திலும் ஒவ்வொரு ஆள் இழுத்து வரிந்துகட்டிக் கொண்டுமேல்வேஷ்டியை அதன்மீது இடுப்பில்பில்டு மாதிரி பட்டையாக கட்டிக்கொண்டு மேலே யாதொரு மூடியுமில்லாமல் திறந்த கறுத்த மேனியராய் யமதூதர்கள் மாதிரி நின்றுக்கொண்டிருந்த காக்ஷி உண்மையில் காங்கிரஸ் காரர்களுக்கு வைவஸ்வத பட்டணத்திலிருந்து வாரண்டு வந்திருப்பதை ஒததிருந்தது.

(8) இப்படியிருந்தும் சுயமரியாதை வீரர்களின் தலை நகரமாகிய மாயவரத்தில், மின்சார சக்தி கொண்டு விஷயத்தை அறிவதுபோல் அறிந்து கொண்ட உண்மை பிராமணரல்லாதவர்கள் உடனே கூட்டமாக ஹைஸ்கூலுக்குள் போய் ஹாலுக்குள் நுழைந்து மேடைக்குச் சமீபத்தில் போடப்பட்டுள்ள பெஞ்சிகளில் உட்கார்ந்து கொண்டனர். உடனே கூட்டத்தில் பெருந்திகிலும் பரபரப்பும் உண்டாயிற்று. தலைவர்கள் ஓடுவதற்கு ஒருவருக் கொருவர் சமிக்ஞை செய்துக்கொண்டு அநுகூலமான காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு காத்திருந்தனர். இதனிடையில் காஸ்லைட்டுகள் கொண்டு வரப்பட்டு சுயமரியாதை வீரர்கள் அமைந்திருந்த பெஞ்சுகளுக் கிடையில் வைக்கப்பட்டு அவர்கள் முகம் எல்லோருக்கும் தெரியும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த லைட்டுகளை அப்புறப்படுத்தி கண்கூச்சத்தை தடுக்க எண்ணியபோது அவை அங்கேயே இருக்கும்படி வற்புறுத்தப்பட்டது. வந்திருந்தவர்களின் கண்கள் எல்லாம் சுயமரியாதை வீரர்களிடமும், கருத்தெல்லாம் ஓட்டத்திலும்ம நாட்டம் வைக்கப்பட்டிருந்த காக்ஷி கண்டவர்க்கே வெளிச்சமாகும்.

(9) காசிக்குப் போயும் கர்மம் தொலையவில்லையென்று வருந்தி ஸ்ரீ சீனிவாசய்யங்கார் எப்படியாவது கோக்கலே ஹால்மாதிரியாகிவிடக் கூடாதேயெனப் பயப்பட்டு அக்கிராசனம் வகித்து சுருக்கமாகச் சில வார்த்தைகள் கூறி ஸ்ரீ வாதராஜுலுவைப் பேசும்படி கேட்டுக் கொண்டனர்.

(10) ஸ்ரீ வாதராஜுலுவும் நிலமையைக் கண்டு நடுக்க முற்று சொல்லவதின்னதென அறியாது முன்னுக்குப்பின் முரண்படப் பேசி எடுத்த காரியத்தை விட்டு ஜஸ்டிஸ் கட்சியைத்திட்டி தமது கூலிப்பிரசாரத்தின் பெருமையையமயிலை சீமானுக்குக் காட்டி இருக்கையிலமர்ந்தார். பின்னர் பேசுவதற்குப் பிராமணரல்லாத கூலிகள் அகப்படாமையால் கோவை ஸ்ரீ சி. வி, வெங்கிட்டரமணய்யங்கார் பேச எழுந்தார். இது சமயம் தான் குழப்பத்திற்கும் சூழ்ச்சிக்கும் ஆயத்தம் செய்யப்பட்டது.

11 ஸ்ரீவெங்கட்டரமணய்யங்கார் எழுந்து சுயமரியாதை வீரர்களைக் கண்டு பயந்து கொண்டே நாக்குழறிப் பேசிக்கொண்டு வரும் போது சீனிவாசங்கார் சுயமரியாதை வீரர்கள் உள்ளே யிருக்கும் வரை நிர்ப்பயமாய் மீட்டிங்கு நடத்த முடியாதென நினைத்து ஸ்ரீமருதவனம்பிள்ளையிடமும் நாகலிங்கம் பிள்ளையிடமும் ஏதோ முணுமுணுத்து ரகசியமாய்ச் சொன்னார். உடனே இருவரும் எழுந்து வெளியே போய் உள்ளே வந்தனர். போலீஸ் கான்ஸ்டேபிள் ஒருவர் வாயிற்படியில் காவலுக்கு நிறுத்தப்பட்டார். உள்ளே யிருந்த அடியாட்கள் வெளியே சென்றனர். இது நடந்த 5 நிமிஷத்திற்குள் ஒரு ஆள் பிரசங்க மேடைக்குச் சமீபத்தில் உள்ள பெஞ்சியில் வீற்றிருந்த ஸ்ரீமான் வி. சுப்ரமணியபிள்ளையிடம் வந்து அவரை ஸ்ரீமான் ஆர் சின்னையா பிள்ளை வெளியில் இருந்து கொண்டு கூப்பிடுவதாக அறிவித்தனர். இதை உண்மையென நம்பி ஸ்ரீ பிள்ளையும் எழுந்து வெளியே செல்லும் போது கூட்டத்தார் கண்களும் கருத்தும் அவர் பின்னே சென்றன. வாசற்படி கடந்ததும் எங்கள் எஜமானுக்கு நீர் விரோதமாமே என்று சுமார் 20 ஆட்கள் ஸ்ரீமான் சுப்பிரமணிய பிள்ளையை வளைத்துக் கொண்டு வம்பு வளர்த்து அவர் சட்டைத்துணி மணிகளைப் பிடித்திழுத்து அடிக்க ஆரம்பித்தனர். நிலைமையையும் சூழ்ச்சியையும் அறிந்த ஸ்ரீமான் வி. சுப்பிரமணியப்பிள்ளை உடனே அவ்விருபது பெயர்களையும் அடியும் உதையும் கொடுத்து அப்புறப்படுத்தி உதறித் தள்ளி பதறி எழுந்து நடந்த விஷயங்களைப் பலரறியச் சொல்லிக் கொண்டுஹாலுக்குள்ளே நுழையும் போது அவரைத்தடுத்த போலீஸ்காரரும் மல்லாந்து விழ உள்ளே சென்று விட்டனர்.

(12) உடனே "ஆட்டுக்கிடையில் அரிமா புகுந்தது போலும்" "அசுரர் கூட்டத்தில் சுப்பிரமணியர் தோன்றியது" போலும் நமது ஸ்ரீமான் பிள்ளைபவர்கள் சென்றதும் உள்ளே சுயமரியாதை வீரர்களும் உண்மையை உணர்ந்துகர்ஜித்தெழுந்து மேஜையைத் தட்டிப் பேசியதாவது;— 'சுயராஜ்ய' மென்பது அமைதியாய் உள்ள சுயமரியாதை யுள்ளவர்களை நயவஞ்சகமாய் வெளியில் அழைத்து புடைப்பது தானோ' என்று உறத்துக் கூறி இதற்கு தலைவர் சமாதானம் சொன்னலொழிய மீட்டிங்கை மேற் கொண்டு நடத்த முடியாதென அறிவித்து விட்டனர். உடனே கூட்டத்தில் உள்ள எல்லாரும் அவரவர்கள் தங்கள் ஆசனத்திலிருந்து எழுந்து விட்டனர். வெளியில் இருந்த காங்கிரஸ் காலிகள் உள்ளே ஓடி வந்தனர். வந்ததும் சுயமரியாதை வீரர்களைக் கண்டு, உள்ளூர் வாசிகளாகவும் கௌரவமுள்ளர்களாகவும் செல்வாக்குள்ளவர்களாவும் அவர்கள் இருப்பதைக் கண்டு வெட்கித் தலைகுனிந்து நின்றனர். மேற்படி அடி ஆள் கூட்டத்தின் தலைவர்களாகிய சாராயக்கடை ஆள் ஒருவர், பிராசஸ் சர்வர் ஒருவர் ஆகிய இருவரும் சுயமரியாதைத்தலைவரிடம் வணக்கம் செலுத்தி தங்களுக்கு ரூ. 250 இந்தக் கூட்டத்தை நடத்த மாயவரம் மிராசுதார்களால் கொடுக்கப்பட்டதென்றும், அதற்கு அடையாளம் காட்ட வேண்டியதற்காக ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளையைத் தமாஷாக அடித்து தங்கள் சூழ்ச்சியைக் செய்து முடித்ததாகவும் இனி தாங்கள் ஒன்றும் செய்யப்போவதில்லையென்றும், வேண்டுமானால் சுயமரியாதை தலைவர்களுக்கு விரோதமாயுள்ளவர்களையும் சூடு காட்டிவிடட்டுமா என்றும் கேட்டார்கள். இதற்கிடையில் அக்கிராசனர் ஸ்ரீ சீனிவாசய்யங்கார் கூட்டத்தை அமைதியாய் உட்காரும்படி வேண்டியும் ஒரு பயனும் உண்டாகாமல் எல்லாரும் வெளியில் நழுவ ஆரம்பித்தனர். இச்சமயம் ஒரு செருப்பு அக்கிராசனர் மேஜையில் வந்து விழுந்தது. உடனே அக்கிராசனர் கீழேயிறங்கி குனிந்து கொண்டே பின்பக்கமுள்ள கதவைத் திறந்து கொண்டு வெளியே போக முயன்றனர். இதைக் கண்டதும் ஸ்ரீ வெங்கிட்டரமணய்யங்கார் தமது வைரக்கடுக்கன் போய் விடுமோ என அஞ்சி டர்பனை அவிழ்த்து முக்காடிட்டு இருகாதுகளையும் மூடிக் கொண்டு வெளியே ஓடினார். 'சமாதானம் சொல்லிவிட்டு வெளியே ஓடலாம்; விடாதே அவர்களை' என்று ஒரு பெரிய சப்தம் கிளம்பியது. பளீர் என்று ஒருவர் கன்னத்தில் கொடுத்த அறை ஹால் முழுதும் பெரிய எதிரொலியை உண்டாக்கிவிட்டது. அய்யங்கார் சென்ற வழியைப்பின்பற்றி ஸ்ரீ மருதவனம் பிள்ளையும், ஸ்ரீ அன்பாநாதபுரம் பிள்ளையும், ஸ்ரீ பஷீர் ஆமத்தும், ஸ்ரீ ஆர். சீனிவாசய்யங்காரும் இதர பார்ப்பன வக்கீல்களும். மாணவர்களும் கமிட்டி மெம்பர்களும் ஓட்டம் பிடித்து உயிர் தப்பினோமென்று சொல்லி நேரே ரயிலடி சென்றனர். இதன் பிறகு ஷை பின் பக்கக் கதவு சாத்தி மூடப்பட்டது. ஆதலால் வெளியில் செல்ல முடியாமல் ஸ்ரீமான்கள் வாதராஜுலுவும், எம். அண்ணாமலை பிள்ளையும், குப்புசாமி முதலியாரும், குழந்தையும், சாமிநாத செட்டியாரும் உள்ளே எலிப்பொறி போல் மாட்டிக்கொண்டார்கள்.

நிலைமையைச் சமாளிக்க வேண்டியும், தாங்கள் தப்பிப் பிழைக்க வேண்டியும் வேறு வழியில்லாமல் ஸ்ரீ வாதராஜுலு எழுந்து, ஓடிப்போன சுயராஜ்யக்கட்சியை மிகவும் பலமாகத் திட்டி அவர்கள் செய்த இவ்வடாத செய்கையைக் கண்டித்து சுயமரியாதை வீரர்களிடம் அநுதாபமிருப்பது போல் காட்டி பிராமணரல்லாதாரை ஏமாற்றப் பார்த்தனர். இவர் பேசிக்கொண்டிருக்கும் போதே காங்கிரஸ் அடியாட்களுக்கு ஸ்ரீ நாயுடுவை தெரியாதானபடியால், இவரும் ஸ்ரீ மருதவனம் பிள்ளை போன்றவர்களுக்கு விரோதியெனக்கருதி 'இந்த அயோக்கியனையும் உதை கொடுத்துத் தாத்து' என்று சொல்லி ஒரு ஆள் முதுகில் பலமாய் அடித்து விட்டார். இவ்வடியைப் பக்கத்திலிருந்த சுயமரியாதை வீரர் தாங்கியிராவிடில் ஸ்ரீ நாயுடு முதுகு அப்பளமாய்ப் போயிருக்கும். இச்சமயம் தான் ஸ்ரீ சாமிநாத செட்டியார் ஒரு நாற்காலியின் மீதேறி நின்று கொண்டு ஸ்ரீ நாயுடுவின் கைத்தடியைப் பிடுங்கி உயரத்தூக்கி ஆட்டிக்கொண்டு 'எல்லாரும் அமைதியாய் இருங்கள், ஸ்ரீநாயுடு உங்கள் குறைகளைக் கேட்பார்' என்று சொன்னார். உடனே கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் ஸ்ரீ செட்டியாரிடமிருந்த தடியைப்பிடுங்கி "நீயும் கெட்டே உன் தலைவர் நாயுடுவும் கெட்டார்" என்று திட்டிக்கொண்டு ஆத்திரத்துடன் ஸ்ரீ நாயுடுவை நோக்கி தடியை வீசினார். இதை ஸ்ரீ செட்டியார் பக்கத்திலிருந்த நாயுடு கண்டதும் தமது தலையை ஸ்ரீ செட்டியாரின் பின் புறத்தில் இழுத்து மறைத்துக்கொண்டு ஸ்ரீ செட்டியாரை முன்னால் பளிச்சென்று தள்ளிவிட்டார். எதிர்பாராமல் தாம் தள்ளப்பட்டதும் ஸ்ரீ செட்டியாருக்கு அந்தத்தடியானது மண்டையின் பின்புறத்தை இருகூறாக்கி ரத்தத்தை அடையாளங்காட்டியது. ரத்தம் பீறிட்டு செட்டியாருக்குப் பின்புற மிருந்தவர்கள் பேரிலெல்லாம் பன்னீர் மாதிரி தெளிக்கப்பட்டதை ஸ்ரீ நாயுடு பார்த்து பிரமித்து பெரு மூச்சு விட்டு கதறி எழுந்து இருகைகளையும் கூப்பி சுயமரியாதை வீரர்களை வணங்கி நமஸ்கரித்து, சுயராஜ்யக் காங்கிரஸ் கட்சிக்காரர்

(இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

# சமத்துவமும் சுயமரியாதையும் ‘தேசியத்தால்’ பெறமுடியுமா.

மக்கள் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் ஏற்ற சீர்திருத்தங்கள் ஏற்பட்டால் தான் தேசியம் தேசியம் என்று உளறும் அரசியல் சுதந்திரமடையமுடியும் என்பதைப்பற்றி நாம் மாத்திரமல்லாமல் உலகில் உள்ள பல பெரியோர்கள் என்று சொல்லப்பட்ட சுவாமி. விவேகானந்தர் திரு. காந்தி, திரு. லஜபதிராய் முதலிய எத்தனையோ பேர்கள் முழக்கம்செய்தும் வயிற்றுப்பிழைப்புக்காக ‘தேசிய’க் கூச்சலிடும் கூட்டத்தார் அதாவது நாடு அடிமையிலிருந்தால்தான் நாம் வாழ முடியும் என்றும் மக்கள் ஒருவருக்கொருவர் சமத்துவமற்று சுயமரியாதை இழந்து பிரிந்து நின்றால் தான் தங்களது ஆதிக்கம் நிலைநிறுத்தப்படுமென்றும் நினைத்துக்கொண்டிருப்பவர்கள் ஒரு சிறிது அறிவும் கவலையும்மனச்சாட்சியுமில்லாமல் அரசியல் சுதந்திரமும் சுயராஜ்யமும்பெற்றால் தான் சமத்துவமும் சுயமரியாதையும் அடைய முடியும் என்று பாமர மக்களை ஏமாற்றி வாழ்ந்து வருகிறார்கள். நமது பாமர மக்களும் இத்தேசிய வயிற்றுப்பிழைப்புக்காரரின் சுயநல சூழ்ச்சிகளை அறியாமல் தேசியம் சுயராஜ்யம் என்கின்ற தற்கொலை வாசகங்களை கண்டு ஏமாந்து வருகிறார்கள். இந்த நிலையில் சமத்துவமும் சுயமரியாதையும் சுயராஜ்யத்தை அளிக்குமா? அல்லது சுயராஜ்யம் சமத்துவத்தையும் சுயமரியாதையையும் அளிக்குமா? என்பதைப் பொது மக்கள் உணர வேண்டுமாய் வேண்டுகின்றோம். இன்றைய சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் எதிரியாயிருப்பது சுயராஜ்யமா அன்னியராஜ்யமா என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. பெண்களுக்கு கடவுள் பேரால் பொட்டுக்கட்டி உலகத்திலுள்ள ஆண்களைக் கெடுக்க விபசாரிகளாக்கக் கூடாது என்று ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தால் ‘அதுகூடாது, மதம் போய்விடும், பழக்கம் போய் விடும்’ என்று திரு சத்தியமூர்த்தி முதலியோர் கூப்பாடுபோடுவது சுயராஜ்யக்காரர்களா பராஜ்யக்காரர்களா என்று கேட்கின்றோம். குழந்தைகளுக்கு பொம்மைக் கல்யாணம் பண்ணி 10 12 வயதில் தேவாங்குகளைப்போல் பிள்ளைகளைப் பெறச்செய்து தேசபக்தனைமகுணதி அடிமையாக மானத்தையும் தேசத்தையும் விற்று தேசியக் கூப்பாடு போட்டு கூலிக்கு பிழைத்துக்கொண்டிருக்கும் மக்களை உற்பத்தி செய்வதைத் தடுக்கவேண்டுமென்று சட்டம் கொண்டுவந்தால் ‘அதுகூடாது, மதத்திலும் அரசியலும் தேசியமும் சுயராஜ்யமும் பிரவேசிக்கக் கூடாது’ என்று திரு. எம்.கே. ஆச்சாரி போன்றவர்கள்கூப்பாடுபோடுவது சுயராஜ்யமா பராஜ்யமா என்று கேட்கின்றோம். சுயராஜ்யத்திற்காக ஏற்படுத்திக்கொண்டிருக்கும் தேசிய சபை என்பதாகிய காங்கிரஸ் கொள்கையில் மக்கள் சமத்துவத்தையும் ஒரு கொள்கையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று திரு சண்முகம் செட்டியார் அவர்கள் காங்கிரசில் ஒரு தீர்மானம் கொண்டு வந்த காலத்தில், பார்ப்பனர்கட்கு அடிமையாகி “அத்தீர்மானம் காங்கிரசுக்கு வந்தால் அதை நான் எதிர்பார்ப்பேன்” என்று திரு வரதராஜலு சொல்லி அதை வெளியில் வரவொட்டாமல் தடுத்து விட்டதானது சுயராஜ்ய தேசியக் காரர்களாபராஜ்யக்காரர்களாஎன்று கேட்கின்றோம்.

மற்றும் வைக்கம் தெருவில் மனிதர் நடக்கக் கூடாது என்று கட்டளை போட்டு நூற்றுக்கணக்கான பேர்களை ஜெயிலில் அடைத்து கண்ணில் சுண்ணாம்பு பூசியது முதலிய கொடுமைகள் செய்த திருவாங்கூர் போன்ற அரசாங்கம் சுயராஜ்ய தேசமா பராஜ்ய தேசமா என்று கேட்கிறோம். பொது மக்கள் வரிப்பணத்தில் பள்ளிக்கூடம் வைத்து அதில் பார்ப்பனர்களைத்தவிர மற்றவர்கள் படிக்கக்கூடாது என்று கட்டளை இட்ட மைசூர் அரசாங்கத்தைப் போன்ற ராஜ்யம் சுயராஜ்ய தேசமா பராஜ்ய தேசமாஎன்று கேட்கின்றோம். ஊரார் பணத்தை யெல்லாம் காணிக்கை என்றும் வேண்டுகோள் என்றும் வருஷம் ஒன்றுக்குலக்ஷக்கணக்காக பார்ப்பனரல்லாத பக்தர்களிடத்தில் வசூல் செய்து மதுரையில் சமஸ்கிருத காலேஜ் வைத்து அதில் பார்ப்பனர்களைத்தவிர மற்றவர்கள் படிக்கக்கூடாது என்று சொல்லி ஸ்கீம் ஏற்படுத்திக் கொண்ட ராமேஸ்வரம் திருப்பதி போன்ற கோவில் பக்தர்கள் சுயராஜ்யக் கொள்கைக் காரர்களா பராஜ்யக் கொள்கைக்காரர்களாஎன்றுகேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாதார் பெரும்பான்மையோராக பிரயாணம் செய்வதால் அவர்கள் செலுத்தும் கட்டண லாபத்தில் நடந்து கட்டிய ரெயில்வே ஓட்டல்களில் பார்ப்பனர்களுக்கு தனி இடமும் பார்ப்பனரல்லாதாருக்கு தனி இடமும் ஒதுக்கி அவமானப்படுத்துவது தேசிய மரியாதைக்கு விரோதமாயிருப்பதால் எல்லோருக்கும் ஒரே இடம் அமைக்க வேண்டும் இல்லாவிட்டால் அவரவர்கள் உணர்ச்சிக்கு தக்க இடமாவது அமைக்க வேண்டும் என்று கேட்கின்ற திரு சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் போன்றவர்களின் கேள்விக்கு ரயில்வேக்காரரை இணங்கவிடாமல் செய்து பார்ப்பனருக்கு மாத்திரம் தனி இடம் ஒதுக்கும்வண்ணம் சொல்லச் செய்தவர்கள் சுயராஜ்யக்காரரா? பராஜ்யக்காரரா? என்று கேட்கின்றோம். இன்னும் இது போன்ற விஷயங்கள் ஆயிரக்கணக்காய் குறிப்பிட்டுக் கொண்டே போகலாம். அன்றியும் ராமனும் கிருஷ்ணனும், சோழனும் சேரனும், பாண்டியனும் திருமலை நாயக்கனும், கட்டபொம்மனுமான அரசர்கள் ஆண்டு கொண்டிருந்ததாகச்சொல்லப்படும் காலமாகிய சுயராஜ்யமிருந்த காலத்தில் தான் பார்ப்பனன் கடவுள் முகத்திலிருந்து வந்தான் என்றும் சூத்திரன் காலிலிருந்து வந்தான் என்றும் சொன்னதோடு அந்த சூத்திரனைக் கண்டால் பாவம், அவன் நிழல் மேலே பட்டால் பாவம், அவனோடு பேசினால் பாவம், அவன் பார்ப்பானுக்கு வைப்பாட்டி மகனாய் இருக்க வேண்டியவன் என்கின்ற நியாயம் வழங்கப்பட்டதும், சுவாமியை கும்பிட்ட பாவத்திற்காக ஒரு சூத்திரன் கொல்லப்பட்டதும் ‘எல்லோரும் சமம், ஜீவனைக் கொலை செய்யக்கூடாது’ என்று சொன்ன பாவத்திற்காக சமணர்கள் கழுவேற்றப்பட்டதும், இன்றைக்கும், அந்த சூத்திரர் கூட்டத்திலும வைப்பாட்டிமக்கள் கூட்டத்திலும் இன்றைய எல்லா தேசிய வீரர்களும் சேர்க்கப்பட்டிருப்பதும் உண்மையா பொய்யா என்று கேட்கின்றோம்.

இந்நிலை முழுவதையும் உண்மையாய் உணர்ந்தவரும் இதையே ஒரு காலத்தில் தேசிய வேலை என்று சொல்லிக் கொண்டு பாமர மக்களை ஏமாற்றினவருமான திரு. வரதராஜலு இன்று சுயராஜ்யம் கிடைத்த பிறகு சமத்துவத்தையும் சுயமரியாதையையும் அடையலாம் என்று சொல்லிப்பார்ப்பனர் மெச்சும்படி பேசவேண்டியதின் ரகசியம் என்ன என்று கேட்கின்றோம்.

இதுசமயம் ஏற்பட்டுள்ள சுயமரியாதை உணர்ச்சியால் தங்கள் ஆதிக்கத்திற்கு ஆபத்துவந்துவிட்டதென்று பயப்பட்டுக்கொண்டிருக்கும் பார்ப்பனர்களுக்கு அபயஸ்தம் கொடுத்து பார்ப்பனர்களிடமும் பார்ப்பன மடாதிபதிகளிடமும் ஒரு லாபம் அடித்துவிடலாம், அதாவது பதினாயிரக்கணக்காக சம்பாதித்துவிடலாம், என்கின்ற பேராசை மனப்பால் குடித்துக்கொண்டு சற்றும் அறிவும் நாணயமும் இல்லாமல் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனீயத்திற்கும் தாளம் போடுகின்றார் என்பது சிறிது சிறிதாக நமக்கு நம்பத்தக்க இடத்திலிருந்து விஷயம் வந்துகொண்டிருக்கின்றது. இதன் உண்மை எப்படியோ இருக்கட்டும். அப்படியாவது திரு. வரதராஜுலு பிழைப்பதானால் நமக்கு ஒருவித ஆறுதலாவது உண்டு. ஏனெனில் பிள்ளை குட்டிக்காரர் எப்படியாவது பிழைத்துப்போகட்டும் என்பதுதான். ஆனால் அதுவும நடக்கப்போவதில்லை. ஏனென்றால் இவரால் ஒரு காரியமும சாதித்துவிடமுடியாது என்கின்ற நம்பிக்கையால்தான். அதனாலே [illegible] விஷயத்தில் இவர் ஏமாந்துபோவாரே என்று பரிதாபப்படுகின்றோம். என்னவெனில் திரு. வரதராஜுலு சேர்ந்தாப்போல் ஒரு வாரத்திற்காவது ஒரு குறிப்பிட்ட கொள்கையில் இல்லாமல் சமயத்திற்குத் தகுந்தபடி எழுதியும் பேசியும் வருவதில் பார்ப்பனர்கள் இவரால் தங்கள் காரியம் ஆனவரை ஆகட்டும் என்று சும்மா கூலி இல்லாமல் ஏற்றுக்கொள்வார்களே ஒழிய ஒரு காசும் கொடுக்க முன் வரமாட்டார்கள் என்பது நமக்கு நன்றாய் தெரியும். உதாரணமாக திரு சீனிவாசய்யங்கார் சீமைக்குப் போகும்போது ஸ்ரீ வரதராஜுலு திரு. அய்யங்கார் தமக்குப் பட்டம் கட்டிவிட்டுக் காங்கிரஸ் ரூபாய்களை தமயிடம ஒப்புவித்துவிட்டுப்போவார் என்ற ஆசையால எவ்வளவோ அடிமை வேலையெல்லம் செய்தார். சுயமரியாதை இயக்கத்தை இரத்தம் சிந்தி அழித்துவிடுகிறேன் என்றார்; ஜஸ்டிஸ் கட்சியையை ஒழிக்கவேண்டியது தேசியக்கடமை

(இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

## "குடி அரசு"

'குமரன்' 10—5—28-ந்தேதி தலையங்கத்தில் எழுதுவது.

ஈரோட்டிலிருந்து வெளிவரும் 'குடி அரசு' வாரப்பத்திரிகையைப் பற்றி நமது நேயர் யாவரும் அறிந்திருப்பார். அதனை ஆதரிப்பவரும் வெறுப்பவரும் உண்டு. சென்ற பல நூற்றாண்டுகளாக நமது தமிழ் மக்கள் அடிமை வாழ்விலே உழைந்து பழகிவிட்ட படியால் சுய உணர்வு, சுய மரியாதை என்ற எண்ணமேயின்றிப் பாவசப்பட்டு, சடங்குகட்கும், மூட வழக்கங்கட்கும், அடிமைப்பட்டு அல்லலுறுகின்றனர். சமய நெறியிலும் சமூக வாழ்விலும் விசாரிப்பதென்பதே பாவகரமானதென்ற உணர்வுடையார் பலராவர். அவ்வப்போது தோன்றிய சில அறிவாளர்களும் பார்ப்பனர்கட்குப் பயந்து உண்மையை மற்றும் கூறமுடியாமல் பின்வாங்கிச் சென்றனர். வைதீகமும் பார்ப்பனியமும் இந்நாட்டு மக்களை அஞ்ஞானப்படுகுழியில் தள்ளியிருக்கிறது. பார்ப்பனர் ஆதிக்கம் தோன்றிய காலந்தொட்டு, தமிழர் இசை, தமிழர் தொழில், தமிழர் நூல், தமிழர் நாகரிகம், தமிழர் வாழ்வு, தமிழர் மதம் யாவும் நாளுக்கு நாள் அருகி அழிந்து வருவதைச் சிறிது கூர்ந்து நோக்குவாரும் அறிவர். தமிழர் உணவு, தமிழர் உடை முதலியவை கூடப் பார்ப்பனரால் புறக்கணிக்கப்பட்டு வருவதை நாள்தோறும் காண்கிறோம். இப்புன்மை வாழ்வினைத் தமிழ் மக்கள் உடைத்தெறிந்து இன்பவாழ்வு வாழவேண்டுமென்று தோன்றிய இயக்கங்கள் பலப்பல. வேதாந்த சித்தாந்த சண்டையும், ஆரியர் தமிழர் பூசலும், வடமொழி தென்மொழிப் போரும் நிகழ்தற்கு காரணமாக நின்றது பார்ப்பனீயக் கொடுமையேயாகும். காலத்திற்குக் கிடைத்த சௌகரியங்கட்கேற்பப் பலபடியாக இக்கொடுமை எதிர்க்கப்பட்டே வந்திருக்கிறதெனலாம். யாரெதிர்த்தும் இப்பூசல் ஒழியவில்லையென்பதுண்மையே. தமிழ் மக்கள் உண்மை அறிவு பெற்றநாளே இக்கொடுமை யொழியும் நன்னாளாகும். தமிழ் மக்களுடைய அகக்கண்களையும் புறக்கண்களையும் கெடுத்து வைப்பதே பார்ப்பனீயத்தின் முக்கிய நோக்கமென்பதை நமது தமிழ் மக்கள் மறந்துவிடக் கூடாது. இந்நிலையை மாற்றவேண்டுமென்பதே இன்று தோன்றி வளர்ந்துவரும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் நோக்கமாகும்.

இவ்வியக்கத்தைத் தாங்கி நடைபெற்று வரும் பத்திரிகைகளுள் தலை சிறந்து நிற்பது "குடி அரசு". இதன் ஆசிரியராக இருந்து நடத்திவருபவர் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கராவார். அவரைப்பற்றி இற்றைத் தமிழ் நாட்டில் அதிகங் கூறவேண்டியதில்லை, சென்ற சில நூற்றாண்டுகட்கிடையில் தமிழகத்தில் இவரைப்போன்ற ஒருவர் பிறந்ததில்லையென்று துணிந்து கூறுவோம். சுயநலமும், தந்திர யுக்திகளும், சமயத்துக்கேற்ற பசப்பு வார்த்தைகளும் இல்லாமல், கொடுமைகளைக் கண்டு கொதிக்கும் உள்ளமும், ஏழை மக்களிடம் இரக்கமும், அகங்காரமும் வீண் டம்பமுமற்ற மனப்பான்மையும் உடைய திரு. ராமசாமி நாயக்கரைப் போன்ற ஒரு தலைவரைத் தமிழ் நாட்டில் எழுந்துள்ள இயக்கங்கள் எதுவும் இதுவரை பெற்றதில்லை. திரு. நாயக்கரைப் பற்றிப் பலர் பலவாறு கருதலாம்; எதிர்க்கலாம்.

ஆனால் அவரை நாமறிந்த வரையில் வீழ்த்த முடியாதென்பது துணிபு. பல நாட்களாகக் கொடுமைகட்கு உட்படுத்தப்பட்ட தமிழ் மக்களிடையில் உண்மையுள்ளத்தோடும், தியாக உணர்வோடும் ஆண்மை கொண்டு எழுந்துள்ள இயக்கத்தின் அடிவேராக நிற்கும் திரு. நாயக்கரைத் தமிழுலகம் நன்கு அறிந்துவிட்டது. அவருடைய உரைகளை குடிசை முதல் கோபுரம் வரை காட்டுவதைக் காண்கிறோம். இனி இதனை வீழ்த்துதல் என்பது எளிதான காரியமல்ல.

திரு. நாயக்கரின் ஆயுதமாக நின்று பணியாற்றும் "குடி அரசு" பத்திரிகைக்கு நான்காவதாண்டு பிறந்திருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள பத்திரிகைகளுள் முதன்மை பெற்று நிற்பது 'குடி அரசே'யாகும். இன்று இப்பத்திரிகை ஏழாயிரம் பிரதி வெளியாவதாகத் தெரிகிறது. நாள்தோறும் சந்தாதாரர் அதிகரித்தே வருகின்றனர். இன்னும் பதினாயிரக்கணக்காக இது அதிகரிக்கப் போகிறது. எதிர்க்கட்சி பத்திரிகைகள் இதனை இன்னும் வீறுகொண்டு எதிர்க்கலாம். ஆனால் முடிவில் பார்க்கும்போது 'குடி அரசு'க்கு வாழ்த்துக் கூறி விளம்பரம் செய்ததாகவே முடியும். நெடுநாட்களாகக் கட்டிப் போடப்பட்டுத் துன்புற்ற மக்கள் விழிப்புற்று எழுச்சி கொண்டு சுதந்திர நாட்டமுற்றுக் கிளர்ச்சி செய்வாரானால் அதற்குப் பரிகாரங் கிடைக்கும் வரை அவர்களை யெதிர்க்க எவராலும் முடியாதென்பது இயற்கையாகுமன்றோ.

"குடி அரசு" இதுகாறும் திரு. நாயக்கரின் சொந்தமாக நடைபெற்றது. இப்போது அதனை ஒரு லிமிடெட் கம்பெனிமூலம் நடத்த உத்தேசிப்பதாக ஆசிரியர் குறித்துள்ளார். நட்டம் வந்த ஆரம்பகாலத்தில் சொந்தத்தில் வைத்து நடத்தி லாபம் வருகிற காலத்தில் ஒரு கம்பெனியாரிடம் ஒப்புவிப்பதாகக் கூறும் ஆசிரியரின் பெருந்தன்மை பாராட்டற்குரியது. இப்போது வருட சந்தா மூன்றே ரூபாய்தான். இருபத்து நான்கு பக்கங்களுடன் வெளிவருகிறது. இது மிகவும் குறைந்த சந்தாவாகும். இன்னும் இதனை இரண்டு ரூபாயாக்கி விடலாமென்று ஆசிரியர் கூறுகிறார். இவற்றை அறிந்து நோக்கித் தமிழ் மக்கள் இம்முயற்சிக்குப் போதரவு நல்கி இவ்வியக்கத்தையும் 'குடி அரசை'யும் வளர்த்தின்புறுதல் வேண்டும்.

"குடி அரசு" ஆசிரியர் உயர் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கட்கு, லாலுகுடி தாலுக்கா கோமாகுடி கிராம தமிழர் சுய மரியாதை சங்கத்தார் அளித்த

## வரவேற்புப் பத்திரம்.

தமிழ் நாட்டிற்கோர் திலகமான மாபெருந்தலைவராகிய பெரியோய்! நின்வரவு நல்வரவாகுக!

பன்னெடு நாட்களாய் பார்ப்பனர்கள் சூழ்ச்சியால் பல்வேறு வகையாகப் பிரிந்தும், வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், முதலிய சாத்திரங்களென்னும் பாசத்தால் கட்டுண்டும், சுய மதிப்பற்றுத் தவிக்கும் தமிழ் மக்களுக்கு அவைகளின் புரட்டுகளையும், அவைகளைச் செய்துவைத்த சுயநலவாதிகளின் மோசங்களையும் வெள்ளிடையாக எடுத்துக்காட்டி இத்தகைய குருட்டு நம்பிக்கைகளையும், அதில் சொல்லும் சடங்குகளையும் அறவேயொழித்து, பகுத்தறிவினால் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்த்து, யாருக்கும் எவ்வித கெடுதியுமிலாத முறையில் நேர்மையாக நடந்து சுயமரியாதைபெற்றுவாழ்வதே-சகலஉயிர்களையும் சமமாகப்பார்த்து அவைகட்குறும் பெரும்பசி யகற்றி, வஞ்சனை, பொய், களவு சூது, சினம், முதலிய குற்றம் நீங்கிய மனத்தராய் வாழ்வதே-சுயராஜ்ய சுகவாழ்வென உபதேசிக்கும் பெரியோய்!

நீண்ட நாட்களாய் தேசத்தில் மூடியிருக்கும் பெருங்கலையான குருட்டுநம்பிக்கையையும் மூடபக்தியையும் அடிமைக் கட்டுப்பாட்டையும் ஒழிப்பதில் இரவு பகலாய் ஓயாதுழைக்கும் தங்கள் தொண்டு பெரும்பயனளிக்கப்படுவப்பட்டிருக்கிறதென்பதில் ஐயமில்லை.

ஆயினும் எதிர்த்துத்தோன்றும் எவ்வித பகைவர்களும் அவர்கள் எதிர்ப்பும் சூரியனைக்கண்ட பனிப்படலம் போல்மறைந்து அடங்க வெற்றி பெறுவதில் தங்கள் ஆணைபின்பற்றி எல்லாவித தியாகமும் செய்து எங்கள் உயிரையுங் கொடுக்கவும் சித்தமாயிருக்கின்றோம் என்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

எல்லாம் வல்ல இறைவன் தங்கள் உழைப்பின் பெரும்பயனை நாங்கள் பெற்று வாழவும் அவற்றைக்கண்டு பெருமகிழ்ச்சி தாங்கள் அடையவும் கருணை பாலிக்கும்படி வேண்டுகிறோம்.

தமிழ் சுயமரியாதைசங்கத்தார், கோமாகுடி.

தென்னிந்திய பால்ய பிரதம நாடக கம்பெனியாகிய

**மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியார்**

ரூபா 150,000 க்கு மேல் செலவிட்டு தயாரித்த

**: தசாவதாரம் :**

ஈரோடு ஸ்ரீ நடராஜ எலக்டிரிக் சினிமா ஹாலில்

(17—5—28) விபவ வருஷ வைகாசி மாதம் 4-ந்தேதி வியாழக்கிழமை முதல் 15 நாள் வரை பிரதி தினமும் இரவு 9 மணிக்கு நடத்துவார்கள்.

எஸ். எம். சச்சிதானந்தம் பிள்ளை, புரோப்ரைட்டர்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு விபவ-௵ சித்திரை-௴ 31-௳

## யாகம்.

பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனரல்லாதார்களில் பெரும்பான்மையோருக்கும் வித்தியாசமிருப்பதாக பார்ப்பனர்களால் சொல்லப்படும் காரணம் ஒன்றே ஒன்று தான். அதாவது பார்ப்பனர்கள் மாமிசம் சாப்பிடுவதில்லை என்பதும், பார்ப்பனரல்லாதார் மாமிசம் சாப்பிடுகிறார்கள் என்பதுமே யாகும். மாம்சம் சாப்பிடுவதிலும், பதார்த்தத்தில் உள்ள குண தோஷங்களைப்பற்றி-அதாவது காய் கறிகளுக்கும் மாமிசத்திற்கும் உள்ள உருசி குணம் முதலியவைகளைப்பற்றிக் கூட அல்லாமல்-ஒரு ஜீவனை வதைக்கின்றது கூடாது என்பதான ஜீவஹிம்சையையே பிரதானமாகக் கருதி சொல்லப்படுகின்றது.

இதை உத்தேசித்தே ஆங்காங்கு ஜீவகாருண்ய பிரசாரமும், கொலை மறுத்தல் பிரசாரமும், புலால் உண்ணாமை பிரசாரமும், எவ்வளவோ செய்யப்பட்டு வருகின்றன.

அப்படியிருக்க, இந்த நாளில் பார்ப்பனர்கள் ஒன்று கூடி தெய்வத்தின் பேராலும், மதத்தின் பேராலும், மோக்ஷத்தின் பேராலும் ஜீவன்களை வதைத்து கொன்று தின்பதானது மோக்ஷத்திற்காக செய்யப்படும் காரியமாய் பாவிக்கப்படுகின்றது. என்னே நமது அறிவீனம்! மாமிசம் சாப்பிடுவது நல்லதா கெட்டதா? பாவமா புண்ணியமா? அவசியமா இல்லையா? என்பதைப்பற்றிய விவகாரத்தை நாம் இந்த வியாசத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்கின்ற கொள்கையை மதமாக உடையவர்களும், ராமன், கண்ணாக வெந்த நல்ல நல்ல மாமிசமாகப் பார்த்து பொறுக்கி எடுத்து சீதைக்குக் கொடுத்தான் என்கின்ற புராணத்தை கும்பிடுவதை மதமாகக் கொண்டவர்களும், எச்சில் மாமிசத்தை, அதாவது தான் கடித்துத் தின்று ருசி பார்த்து பின்பு சிவனுக்கு படைத்து அதனால் மோக்ஷமடைந்த பக்தர்களைப் பாடி மோக்ஷமடைவதை மதமாகக் கொண்டவர்களும், ஆடும், கோழியும், பன்றியும், எருமைக்கிடாவும் அடுக்கடுக்காக கொன்று பூசை செய்ய வேண்டிய கடவுளை கும்பிடுவதை மதமாகக் கொண்டவர்களும், வீணாகப்போவது மனிதனின் பசிக்குதவுவதால் யாருக்கு என்ன நஷ்டம் என்பவர்களும், தண்ணீரைக்காய்ச்சி சாப்பிட்டால் அதிலுள்ள பல ஜீவன்கள் சாகின்றனவாதலால் காய்ச்சாமல் சாப்பிட வேண்டுமென்றும், விளக்குவைத்தால் அதில் பல பூச்சிகள் வந்து விழுந்து சாகுமாதலால் இருட்டில் இருக்க வேண்டுமென்றும், மூச்சு விட்டு சுவாசம் உள்ளே இழுத்தால் பல பூச்சிகள் உள்ளே போய் இறந்து போகுமாதலால் வாயையும் மூக்கையும் துணியில் மூடிக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லுகின்றவர்களும் இருக்கும்போது மாமிசம் சாப்பிடுவது சரியா தப்பா என்பதை சுலபத்தில் முடிந்துவிட முடியாது.

ஆனால், வேதத்தின் பேரால் கும்பகோணத்தில் பார்ப்பனர்கள் ஆடுகளை வதைத்துக்கொன்றது சரியா என்பது தான் இவ்வியாசத்தின் கருத்தாகும். கசாப்புக்கடைக்காரனோ அல்லது வேறு "கீழ்த்தரக் கடவுள்" களோ ஜீவன்களை ஒரே வெட்டாக ஒரு வினாடியில் வெட்டிவிடச் செய்கின்றார்கள். ஹிம்சை என்பதை அச்சீவன்கள் ஒரு சிறிதும் அனுபவிப்பதற்கில்லாமல் திடீரென்று வெட்டி விடுகின்றார்கள். ஆனால் யாகத்தின் பேரால் 'உயர்ந்த வகுப்பு' பார்ப்பனர்கள் 'உயர்ந்த வகுப்புக் கடவுளுக்கு' மோக்ஷத்திற்காக உண்ணுவதற்கு பலி கொடுப்பதற்காக செய்யும் கொலையில் மேல்கண்டபடியாவது வெட்டாமல் உயிருடன் விரையை நசுக்கியும் தோலை உரித்தும் வேண்டிய அவயவங்களை உயிருடனிருக்கும் போதே அறுத்தெடுப்பதும் என்றால் எவ்வளவு கொலைபாதகம்—சித்திரவதை— கர்ஞ்சித்தம்— என்பதை கவனித்துப் பார்க்க வேண்டும் என்றே வேண்டிக்கொள்ளுகின்றோம்.

ஒரு ஜீவகாருண்ய சங்கமாவது, கொலை மறுத்தல் கூட்டமாவது, சிவனடியார் திருக்கூட்டத்தாராவது இதைப்பற்றி ஒரு வார்த்தையாவது இதுவரை பேசினவர்கள் அல்லர். மதமும் கடவுளும் ஸ்வராஜ்யமும் எப்படி புரட்டின் மீதே கட்டப்பட்டிருக்கின்றதோ அது போலவே ஜீவகாருண்யமும் கட்டப்பட்டிருக்கின்றதேயொழிய உண்மையானதத்துவத்தின் பேரில் இல்லை. இதுதான் இப்படி புரட்டு இயக்கமென்றால், ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்தார் அதாவது S. P. C. A. சங்கத்தார் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. அவர்கள் இந்த யாகத்தின் பேரால் கொலை பாதகம் செய்த பார்ப்பனர்களை S. P. C. A சட்டப்படி நடவடிக்கை நடத்தினால் தண்டித்திருக்கக்கூடாதா என்று கேட்கின்றோம்.

மதத்தின் பேராலும் சுவாமியின் பேராலும் செய்யும் காரியங்கள் குற்றமல்ல என்று சொல்வார்களானால், நமது சுவாமிகள் எல்லாவித பாபத்திற்கும் காரணபூதமாகவும் உடந்தையாகவும் இருக்கின்றது என்பதில் என்ன சந்தேகம். பார்ப்பனர்கள் எது செய்தாலும் அது மோக்ஷத்திற்கும் சுயராஜ்யத்திற்குமாகஆய்விடுகின்றது. அதே காரியங்களை நம்மவர்கள் செய்வது தேசத்துரோகமும் தெய்வத்துரோகமும் ஆய்விடுகின்றது.

## நமது கருத்து.

'குடி அரசின்' நான்காவது ஆண்டு முதல் இதழில் எழுதியிருந்த தலையங்கத்தைப் பார்த்த நண்பர்கள் பலர் நமது இயக்கத்தைப்பற்றியும்நம்'குடி அரசின்'வளர்ச்சியைப்பற்றியும் வாழ்த்துக் கூறி பல கடிதங்கள் எழுதி இருக்கின்றார்கள். உதாரணமாக காரைக்குடி 'குமரன்' பத்திரிகையும், அதன் ஆசிரியர் திரு. முருகப்ப செட்டியார் அவர்களும், அமராவதிப்புதூர் திரு. பிச்சப்பா சுப்பிரமணிய செட்டியாரும், கானாடு காத்தான் திரு. வையிசு. ஷண்முகம் செட்டியார் அவர்களும், மதுரை, அருப்புக்கோட்டை, திருப்பூர், கோயமுத்தூர், திருச்சி, நாகப்பட்டணம், கும்பகோணம், மாயவரம், தஞ்சை, திருச்செங்கோடு, மாரண்டஹள்ளி, அம்பலூர், சென்னை, கொளும்பு முதலிய இன்னும் பல இடங்களிலிருந்து பல நண்பர்களும் எழுதி இருக்கின்றார்கள். அவற்றுள் சிலர் 'குடி அரசை' லிமிடெட் கம்பெனியாய் ஏற்படுத்துவதை ஆதரித்தும் பலர் அதைத் தடுத்தும் எழுதியிருக்கிறார்கள். ஆனாலும் சுயமரியாதை இயக்கத்தை ஒரு தனி ஸ்தாபனமாக்கி அதற்கு வேண்டிய சங்கம், பிரசாரம், காரியஸ்தலம் முதலிய ஏற்பாடுகள் செய்யும் விஷயத்தில் யாவரும் ஒரே அபிப்பிராயமாகத்தான் எழுதி இருக்கிறார்கள். இதை சுமார் ஒரு வருஷ காலமாகவே பலர் எழுதி வருகிறார்கள். இவைகளில் மலேயா நாட்டுக்கடிதங்களே பல. 'குடி அரசை' தனித்த முறையில் நமது சொந்த பத்திரிகையாக நடத்துவதில் பொருள் நஷ்டம் ஒன்றுமில்லையானாலும் நம்மால் இனி நிர்வகிக்கக்கூடியதாயில்லை என்பதை நாம் தெரிவித்தாகவேண்டியதாயிருக்கின்றது. எனவே சுயமரியாதைக் கொள்கை உடையவர்களாகவே சேர்ந்து ஒரு லிமிடெட் கம்பெனியாக்கி (எந்த மதத்தைப்பற்றியானாலும் சரி) வேதம், சாஸ்திரம், புராணம், ஜாதி, மதம் முதலியவைகளில் (எந்த மதத்தில் பிறந்தவர்களானாலும் சரி) அடியோடு நம்பிக்கையில்லாதவர்களாகவும் மனம், வாக்கு, காயங்கள் மூன்றும் அவை அனுபவத்திலில்லாதவர்களுமான ஒரு கூட்டத்தாரின் சுதந்திரத்தில ஆசிரியத்தன்மையை விட்டு 'குடி அரசு'ம், 'ரிவோல்ட்'டும் நடைபெறும்படியான ஏற்பாடுசெய்வது மிகுதியும் அவசியமான காரியம்என்பதேநமது அபிப்பிராயம். 'குமரன்' பத்திரிகை எழுதியிருப்பது போலும் மற்றும் பல நண்பர்கள் எழுதியிருப்பது போலும் வெகு காலமாகவே இம்மாதிரி இயக்கம் நம் நாட்டில்பல தோன்றித்தோன்றி மறைந்து கொண்டே வந்திருக்கின்றதே

ஒழிய ஒன்றுவது நிலைந்திருக்கவேயில்லை இதை நமது எதிரிகளே நன்றாய் சொல்லிக் காட்டி நம்மையும் வெருட்டி வருகிறார்கள். அதாவது "வள்ளுவர், புத்தர், முதலியோர்களின் இயக்கங்களும் இன்னும் எத்தனையோ பேர்கள் முயற்சியும் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. அப்படியிருக்க இதை யார் லட்சியம் செய்யப் போகிறார்கள்" என்று சொல்வது போலவே நடந்து வந்திருக்கின்றது. ஆனால் மேல்நாடுகளில் சற்று இவ்வியக்கம் வெகு வேகமாக பரவி வருகின்றதாக இப்போது தெரிய வருகிறது. நமது நாட்டில் இவ்வியக்கம் வேரூன்றிவிட்டதில் சந்தேகமில்லையானாலும் இனி ஒரு ஐம்பது ஆண்டாவது விடாமல் தொடர்ச்சியாய் வேலை செய்தாக வேண்டும். முன் காலங்களில் இவ்வியக்கம் நிலைக்காததற்கும் பலனளிக்காததற்கும் முக்கிய காரணம் என்ன வென்றால், அவ்வக்காலங்களில் இருந்த அரசர்கள் வேத, சாஸ்திர, புராண, ஜாதி, மதப் பார்ப்பனர்களின் கைப் பிள்ளைகளாகவே இருந்துவந்ததால்தான். இப்போதுஉள்ள அரசாங்கம் பார்ப்பனர்களைக்கொண்டு நடைபெறுவதானாலும் வேதம், சாஸ்திரம், புராணம், மதம், ஜாதி, என்கின்ற விஷயங்களில் பார்ப்பனர்களை பின் பற்றுபவர்கள் அல்ல அன்றியும் இவ்விஷயங்களில் அரசாங்கத்திற்கும் உண்மையான நம்பிக்கை கிடையாது. ஏதோ அவர்களது ஆட்சி நிலைத்திருக்க வேண்டியும், இவ்வேத சாஸ்திர புராண ஜாதி மதம் அதற்கு அநுகூலமாயிருப்பதாலும் இவற்றை ஒழிக்க அவர்களாக முன் வருவதில்லையே யல்லாமல் மற்றபடி இவைகளை ஒழிக்கச் செய்யும் இயக்கத்திற்கு வெளிப்படையான எதிரிகள் யில்லை. இது நமக்கு எவ்வளவோ அநுகூலம் என்றே சொல்ல வேண்டும்.

ஆப்கானிஸ்தான அமீரும், அருக்கி கமால் பாட்சாவும், இட்டலி முசோலினியும், ஒரு அளவுக்காவது சுயமரியாதையையும் அறிவையும் ஆதாரமாகக்கொண்டு அவரவர்கள் நாட்டை உன்னத நிலைமைக்குக்கொண்டு வந்து காட்டி வரும் உதாரணத்தைக் காண்பவர்களுக்கு நமது இயக்கத்தைப் பற்றிய பயமோ சந்தேகமோ ஒரு சிறிதும் இருக்கத் தேவையில்லை என்றே சொல்லுவோம்.

மற்றபடி தங்கள் இனத்தாரின் சுய நலம் காரணமாகவோ, சில தனிப்பட்டவர்களின் பிழைப்பு காரணமாகவோ, அறிவில்லாத காரணமாகவோ கூப்பாடு போடுபவர்களை லக்ஷியம் செய்யவேண்டிய நிலைமையையும் நமது இயக்கம் ஒருவாறு தாண்டி விட்டதென்று சொல்லலாம். அன்றியும் அவ்வித கூப்பாடுகளால் நமக்கு பலவித நன்மைகளும் ஏற்பட்டுவருகிறது. ஆதலால் தொடர்ந்து வேலை செய்ய ஏற்பாடுகள் செய்வதுதான் இப்பொழுது நாம் செய்யவேண்டிய வேலையாகும். எதேனும் சில நண்பர்களாவது ஒன்று சேர்ந்து இவ்வியக்கத்திற்கு ஒரு சங்கமேற்படுத்தி அதை பதிவு செய்து அதன் மூலம் பத்திரிக்கைகளையும் நடத்த ஏற்பாடு செய்வதே நலம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இதைப்பற்றி சமீபத்தில் தஞ்சை ஜில்லாவில் கூட இருக்கும் மாகாண சுயமரியாதை

## ஸ்ரீ வரதராஜுலுவின் மற்றொரு சபதம்

ஸ்ரீ வரதராஜுலு நாயுடு 10-ந் தேதி தமிழ்நாடு பத்திரிகையில்பின் வருமாறு எழுதுகிறார்:—

"சமதர்மம் நிலைபெறஉழைப்பதே எனது நோக்கம். இரண்டுவருஷங்களாக எச்சரித்துவந்தேன் நாயக்கர் சீர்படவில்லை. வெற்றி தோல்வியைப்பற்றி எனக்கு கவலை இல்லை. நாயக்கர் பிரசாரம் தொலையவேண்டும் அல்லது நான் தொலையவேண்டும். நான் எதற்கும் துணிந்தவன் என்பது தங்களுக்குத் தெரியும். பிராமணரல்லாதாருக்குள் போராட்டம் வேண்டாமென்றே இது வரையில் பொறுத்திருந்தேன். இனிமேல் நான் சும்மாயிருந்தால் அது தேசத்துரோகமாகும் 'திராவிடனை'ப்பற்றி கவலை இல்லை. நாயக்கர் ஒருகாலத்தில் காங்கிரசில் இருந்தாரென்பதற்காக ஒருசில நண்பர்கள் அவர் சொல்வதை கேட்கிறார்கள். அந்த தப்பு அபிப்பிராயத்தை போக்குவதே எனது பிரசாரத்தின் நோக்கம் குரு க்ஷேத்திர பூமியில் தயங்கி நின்ற அர்ஜுனனுக்குத்துணை புரிந்த திருகிருஷ்ண பகவான ஒருவரே எனக்கு துணை. இன்றைய தமிழ் நாட்டு நிலைமை இதுவேயாகும். நாயக்கர் பிரசாரத்தால் வந்த வினை இது தான"

இது எத்தனையாவது சபதம்என்பதும் இனியும்இதுபோல் எத்தனை சபதப்பிரசாரம் வெளியாகப் போகிறது என்பதையும் பொது ஜனங்கள் பொறுமையோடு கவனிக்கவேண்டுகிறோம் 30-4-28 தேதி தலையங்கத்தின் கீழ் பஞ்சம நந்திக்கு பாத பூஜை செய்வது தனது பாக்கியம் என்றார். இன்று,ஒன்று நாயக்கர் பிரசாரம் தொலையவேண்டும் அல்லது தான் தொலையவேண்டும் என்கின்ற பிரயத்தனத்தில் இறங்கி விட்டதாக கூறுகிறார். இனி எதில் இறங்கி விடுவாரோ?

---

மகாநாட்டில் ஒரு முடிவு செய்யலாம் என நினைக்கிறேன். அதற்குள் எதாவது கடிதப் போக்குவரத்து செய்ய வேண்டும் என்கிற எண்ணமுள்ள கனவான்கள் திரு. ஈ. வெ. ராமசாமி என்கின்ற சொந்த விலாசத்திற்கு எழுதிக் கொள்ளலாம்.

## நாகபட்டணம் தேசபக்த சமாஜம்

திரு ஈ. வெ. ராமசாமிநாயக்கர் இம்மாதம் 19, 20 ஆம் தேதிகளில் செங்கல்பட்டு ஜில்லாவில் சில மகாநாடுகளுக்கு தலைமை வகிக்க போகவேண்டியதை உத்தேசித்து நாகபட்டணம் தேசபக்த சமாஜஆண்டு விழாவைஜூன் மீ 2, 3 ஆம் தேதிகளில் ஒத்திப் போட யோசனை செய்யப் பட்டு வருகின்றது.

## திரு. நாயக்கர்

திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் இம் மாதத்தில் கீழ்க்கண்ட தேதிகளில் கீழ்கண்ட இடங்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்வார்

12-ஆம் தேதியில் கோயமுத்தூர், 13-ல் ஈரோடு, 14-ல் துறையூர், 15-ல் முசிறி, 16, 17-ல் ஈரோடு, 18-ல மதராஸ், 19, 20-ல செங்கல்பட்டு ஜில்லா, 21-ல் ஈரோடு 22, 23, 24-ல் கோயமுத்தூர், 25,26-ல் ஈரோடு, 27, 28, 29-ல் ராமநாதபுரம் ஜில்லா, ஜூன் மாதம் 2, 3-ல் நாகபட்டணம்.

## சுயமரியாதை கதர் பண்டகசாலை திரிச்சிராப்பள்ளி.

தமிழ்நாட்டில் பலவிடங்களிலும், நம் நகரிலும், கதர் விற்பனைக்கென்று பல கதர் கடைகளிருப்பினும் அகில இந்தியா சர்க்கா சங்கத் தமிழ் நாட்டுக் கிளைச் சங்கத்தார் நடத்தும் நீதியற்ற முறையினால், காங்கிரஸ் சபையினைப்போன்று பார்ப்பனர் வயப்பட்டு பார்ப்பனரல்லாதார்களை நியாயமான முறையில் நடத்தாமலும் நம்மவர்களின் முறையீடுகளைப் பொருட்படுத்தாமலுமிருப்பதால், தமிழ்நாடு கதர்லாக்கா சத்தியாக்கிரகக் கமிட்டியார் 30—4—1928-ல் கூடிச்செய்த தீர்மானத்தை அநுசரித்து, பார்ப்பனரல்லாதார் மூலதனத்தைக் கொண்டும், மேற்பார்வையிலும், சுயமரியாதைகதர்பண்டகசாலை என்ற பெயரோடு, கூட்டுறவு வியாபார முறையில் கதர் கடை ஒன்று வைத்து நடத்த முடிவுசெய்துள்ளோம்.

இதுபோது பங்கு 1-க்கு ரூபாய் பத்து விதம் இருநூறு பங்குகளுக்கு இரண்டாயிரம் (2000) ரூபாய் சேர்த்து மூலதனமாக வைத்து வியாபாரம் செய்யப்பெறும். போதிய பங்குகள் சேர்ந்ததும் கூட்டம் கூட்டி பங்குதாரர் களுக்குள் ஏழுபேர்களைத் தேர்ந்தெடுத்து, அந்த நிறைவேற்றக் கழகத்தார் மூலமாக கடை நடத்தி வைக்கப்பெறும். வேண்டும் போது பங்குகளை அதிகப்படுத்தி மூலதனம் உயர்த்தப்பெறும்.

பார்ப்பனரல்லாத பெருங்குடிகளே பங்கெடுத்துக்கொள்ள உரிமை யுடையவர்களாதலின் ஏழைமக்களின் நன்மையை நாடும் நம்மவர்களான கதராபிமானமுள்ள நண்பர்கள் பலரும் போதிய பங்கெடுத்துக் கொண்டும் தங்கள் பேயர்களை எடுத்துக் கொள்ளச்செய்தும் எங்களுக்கு ஊக்கமளித்து ஆதரிக்கவேண்டுகிறோம்.

தா. ஈ. மூ. செல்வக்கணபதி செட்டியார்,
தலைவர்,

ச. ம. சி. பரமசிவம், காரியதரிசி.

இதுவரை 100 பங்குவரை சேர்ந்திருக்கிறது. திரு நாயக்கரும் பங்கு எடுத்துள்ளார். மற்றவர்களும் பங்கு எடுத்துக் கொண்டு பார்ப்பனரல்லாத பொது மக்கள் இதைஅவசியமாய் ஆதரிக்கவேண்டுகிறோம். (ப-ர்)

## மலாய் நாட்டு,

"திராவிடன்" சந்தாதாரர்களுக்கு.

பல நண்பரின் வேண்டுகோளின்படி மலாய் நாட்டுச் சந்தாவை 1—5—28 முதல் வருடமொன்றுக்கு ரூபாய் 18-0-0 ஆகக் குறைத்துள்ளோமென்பதை மகிழ்ச்சிப் பெருக்குடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர்,
"திராவிடன்"
மதராஸ்.

## சுயமரியாதை பிரசாரம்.

### திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கர் தமது நண்பர்களுடன் திருச்சி, தஞ்சை, தென்னாற்காடு ஜில்லாக்களில் செய்த சுற்றுப் பிரயாணம்.

### மக்களின்எழுர்ச்சி ஆடம்பரமானவரவேற்பு. சுயமரியாதை உணர்ச்சி தாண்டவம்.

திருச்சி லால்குடி நிருபர் எழுதுவது.

திரு, நாயக்கர், அவர்களின் திருச்சி ஜில்லா சுற்றுப் பிரயாணத்தில் லால்குடி மீட்டிங்கைப் பற்றி சென்ற வாரத்திலேயே குறிப்பிட்டு விட்டேன்

பூவாளூர்

மறுநாள் 4—5—28-ந்தேதி வெள்ளிக்கிழமை காலை 10-மணிக்கு திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், விஸ்வநாத பிள்ளை, ராவணதாஸ் நாயுடு, கலியபெருமாள் நாயுடு, முதலியவர்கள் லால்குடி வாசிகள் பலருடனும் பூவாளூருக்கு விஜயம் செய்தார்கள்.

அவர்களை பூவாளூர் வாசிகளும் பஞ்சாயத்து மெம்பர்களும் பூமாலை தாம்பூலம் முதலியவைகளுடன் பெருங் கூட்டமாக வரவேற்று பஞ்சாயத்து ஆபிசில் ஜாகை செய்து அங்கு அழைத்துச் சென்றார்கள். சுமார் சென்ற 5, 6 மாதங்களுக்கு முன் திரு. நாயக்கரும் அவர்களது மேல்கண்ட நண்பர்களும் இதே பூவாளூருக்கு வந்தபோது எந்த பஞ்சாயத்து தலைவர் பிரசங்கிக்க வொண்ணாதபடி 144 உத்திரவு வாங்கி ஏற்பாடுசெய்தார்களோ அந்த பஞ்சாயத்து ஆபிசிலேயே நாயக்கரை ஜாகை செய்யச் செய்யவும் வேண்டிய சவுகரியம்சப்ளை முதலியவைகள் செய்யவும், பஞ்சாயத்து மெம்பர்கள் பெரும்பான்மையோர் கூடவே இருக்கவுமான அவ்வளவு தூரம் அவருக்கு சுயமரியாதை உணர்ச்சி தாண்டவமாடியதுமிகுதியும் குறிப்பிடத்தக்கது. மற்றும் மாலை மீட்டிங்கு வரை அவ்வூரிலுள்ள மதபக்திக் காரரும் புராண பயிற்சிக்காரரும் மற்றும் பல பல வித்மான நம்பிக்கை யுள்ளவர்களும் வரிசை வரிசையாக வந்து நாயக்கரை கண்டு பேசிக்கொண்டே இருந்ததும் யிவர்களில் பெரும்பாலோரும் நாயக்கர் சொல்வதை ஒப்புக்கொண்டு தங்கள் தங்கள் பழங் கருத்துக்களை மாற்றிக் கொண்டதும் மாற்றிக் கொண்டதாக அக் கூட்டங்களிலேயே சொல்லிக்கொண்டதும மிகவும் குறிப்பிடத்தக்கது.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், திருச்சி ஜில்லாவில் இப்பூவாளூரானது சமயப் பற்றுதலிலும் புராண வாசனையிலும் மிக்க முதன்மை யானதாதலால் நாயக்கர் பிரசாரமானது இவ்வூர் பிரமுகர்களை சுயமரியாதை உணர்ச்சியில வசப்படுத்தி விட்டது என்பதற்காகவே குறிப்பிடுகின்றேன். சென்ற வருகையின்போது சற்றும் லக்ஷிய மில்லாதவர்களும் ஆடம்பரத்திலும் வரவேற்பிலும் கலந்துக் கொண்டதோடு லால்குடி தாலுக்கா மகாநாட்டிற்குஆகவேண்டிய ஏற்பாடுகளும் மிக்க அக்கரையோடு நடத்த ஒத்துழைத்து வருகிறார்கள்.

மாலையில் அரச மரத்தடியில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் கூடப்பட்டது. கூட்டத்திற்கு ஊர்வலமாக நாயக்கர் முதலியோர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். கூட்டத்தில்பெண்களும் ஆதி திராவிடர்களும் மற்ற உள்ளூர் வெளியூர் வாசிகளும் ஏராளமாய் விஜயம செய்திருந்தார்கள்.

திரு விஸ்வநாத பிள்ளை அவர்கள் அக்கிராசனராக தெரிந்தெடுக்கப்பட்டதும் திருவாளர்கள் ராவணதாஸ், கலியபெருமாள் நாயுடு, பொன்னம்பலனார் முதலியவர்கள் சுயமரியாதைகீதங்களும் நாயக்கர் பேரில் பாடி பாட்டுக்களும் பண் இசையுடன் சொன்ன பிறகு திரு நாயக்கர் இரண்டு மணிநேரம் சுயமரியாதையின் முக்கியத்தைப்பற்றியும அதன் எதிர்ப்பின் இரகசியத்தைப்பற்றியும் அதை அடைய வேண்டிய மார்க்கத்தைப் பற்றியும உயிரை விட்டாலும் நமது சமுகத்திற்கும நாட்டிற்கும் சுயமரியாதை சம்பாதித்து தீரவேண்டியதைப்பற்றியும் விளக்கமாக பேசினார்கள். நாயக்கர் செல்லுமிடங்களில் எல்லாம இரகசியப்போலீசும் போலீசு ரிப்போர்ட்டர்களும்தொடர்ந்து கொண்டேவந்ததும் குறிப்பிடத்தக்கது. பிறகு திருவாளர்கள் ராவணதாஸ்பொன்னம்பலனார்செல்வக்கணபதியார் முதலியோர்கள் பேசியதும் அக்கிராசனர் விஸ்வநாத பிள்ளை முடிவுரையில் கூட்டம் முடிவு பெற்றதும் ஒரு வேடிக்கை நடந்தது அதாவது கூட்டமுடிவில் ஒரு பெரியவர் மது வருந்திவிட்டு அக்கிராசனரைப் பார்த்து 'விதி பெரிதா மதிபெரிதா' என்று கேட்டார். அங்குள்ளவாலிபர்கள் மதுக்கடைக்காரன் பெயரைச்சொல்லி அவரைப் போய்கேளுங்கள் என்றதும் அப்பெரியவர் உள்பட எல்லோரும் சிறித்துக் கொண்டே போனார்கள்.

கோமாங்குடி.

கோமாங்குடி மகாஜனங்கள் விரும்பியபடி 5-ந்தேதி பகல் 4 மணிக்கு பூவாளூரிலிருந்து திருவாளர்கள் செல்வகணபதி செட்டியார், பொன்னமபலனார் விஸ்வநாதபிள்ளை, கலிய பெருமாள் நாயுடு, பரமசிவம் செட்டியார் ஈ வெ ராமசாமி நாயக்கர்,திருச்சி சேர்மெனும ஜில்லா போர்டு வைஸ்பிரசிடெண்டும் சட்டசபை மெம்பருமான திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை லால்குடி தாலூகா செட்டியார் குமாரர், வைஸ்பிரசிடெண்ட் திரு பரமசிவம் பிள்ளை முதலியவர்கள் கோமாங்குடி வந்து சேர்ந்ததும, சுமார் ஆயிரம் ஜனங்களுக்கு அதிகமாக வரவேற்று சிற்றுண்டி அளித்து சரியாய் 5 மணிக்கு கூட்டம் திரு விஸ்வநாதபிள்ளை அவர்கள தலைமையில் துவக்கப்பட்டது. திரு நாயக்கருக்கு கோமாங்குடி சுயமரியாதை சங்க காரிய தரிசியால் ஒரு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டதும் நாயக்கர் இரண்டுமணி நேரம் தமது சொற்பொழிவு நிகழ்த்தினார். பெண்கள் ஆதித்திராவிடர்கள் மற்றும் சுற்பக்கத்து கிராமவாசிகள் ஆகிய சுமார் 1500 பேர் வரை கடைசி மட்டும் பொறுமையாய் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒரு விசேஷ சம்பவம்

நாயக்கர்பிரசங்கத்தின் இடையில் ஒருபெரியவர் இந்தக்கூட்டம்பார்ப்பனர்களின் அக்கிரமத்தை வெளிப்படுத்த கூடியிருக்கின்றது. என் றுஎண்ணி இருந்தோம், ஆனால் குடியானவர்களையும் பறையரையும் ஒன்றாக்க வேண்டுமென்று பேசுகிறார்கள் ஆதலால் நிறுத்திவிடவேண்டும் என்று சிலரைக் கூப்பிட்டு சொன்னார். அதுகேட்டு நாயக்கர் மிக ஆவேசமாக பறையர் என்றால் என்னஎன்பது பற்றியும் நமக்கும் ஆதி திராவிடர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பது பற்றியும் இவ்வித மனப்பான்மை உள்ளவர்கள் எந்தவிதத்திலும் பார்ப்பனர்களைப் பற்றியோ வெள்ளைக்காரனைப்பற்றியோ பேசுவதற்கு யோக்கியதை இல்லை என்றும் சொன்னார். உபந்யாச முடிவில் அக்கிராசனரும் திரு. பொன்னம்பலனாரும் விளக்கிப் பேசி கூட்டம் 9 மணிக்கு முடிவு பெற்றதும் உடனே திரு. நாராயணசாமி பிள்ளை அவர்களும், திரு. செட்டியாரும், வைஸ்-பிரசிடெண்ட். பரமசிவம்பிள்ளை அவர்களும், விஸ்வநாதம்பிள்ளை அவர்களும் நாயக்கரும் லால்குடிக்கு பிரயாணமாகி திரு. பரமசிவம் பிள்ளை அவர்கள் வீட்டில் சிற்றுண்டி அருந்தி நேரே திருச்சிக்கு சென்று விட்டார்கள்.

திருச்சி.

மறுநாள் காலையில் திருச்சி தென். இ. ந. உ. சங்க காரியதரிசி திரு. வேதாசலம் பிள்ளை அவர்களின் சிறிய தகப்பனார் திரு. பழனியாண்டிபிள்ளை அவர்கள் காலம் சென்ற கருமாதி கிரிகையின் சார்பாக 'ரிவர்வியூ' என்கின்ற பங்களா தோட்டத்தில்கூட்டப்பட்டிருந்த ஒரு கூட்டத்தில் 'சமூகமும் சடங்கும்'என்பது பற்றி ஒன்றரைமணிநேரம்பேசி விட்டு அன்று பகல 12 மணி வண்டியில் திரு. நாயக்கரும் திரு. விஸ்வநாதம் பிள்ளையும் மாயவரம சென்று விட்டார்கள்

திரு. நாயக்கரும், திரு விஸ்வநாதம் பிள்ளையும், கும்பகோணத்திலிருந்து திரு. தண்டபாணி பிள்ளையும், திரு. பாபுசாயபும் வழி நெடுக மற்றும் பல கனவான்களுமாக மாலை 5 மணிக்கு மாயவரம் வந்து சேர்ந்தார்கள்; ஸ்டேஷனில் திருவாளர்கள் செ. சின்னையா பிள்ளை, பொரையார் கனகசபை நாடார், லிங்கம், சுப்பிரமணியபிள்ளை, நடராஜ முதலியார், கல்யாண சுந்தர முதலியார், டாக்டர் ராமன் நாயர் முதலியோர்கள் வரவேற்று திரு. எஸ். ராமநாதன் அவர்கள் வீட்டிற்கு நேரே அழைத்துச் சென்றார்கள். அங்கு மாகாண சுயமரியாதை மகாநாடு வரவேற்புக் கமிட்டி முடிந்ததும் ஆற்றங்கரையில் பெரிய கூட்டத்தில் திருவாளர்கள் நாயக்கர், தண்டபாணிபிள்ளை, விஸ்வநாதம் பிள்ளை முதலியோர் 3 மணி நேரம் பேசினார்கள். இரவு 2 மணி வண்டியில் திரு நாயக்கர், தண்டபாணி பிள்ளை, சுப்ரமணிய பிள்ளை ஆகியோர்கள் திண்டிவனம் சென்று விட்டார். திண்டிவனம் விஷயம் அடுத்த வாரம் வெளிவரும்.

———

# மதம் என்பது என்ன?

## அமெரிக்காவில் "இங்கர்சால்" என்பவர் நிகழ்த்திய சொற்பொழிவு.

திரு. ரா சௌரிராஜன் மொழிபெயர்த்தது.

மயம் குரு பீடத்தை எழுப்பி நைவேத்தியத்தைப் படைக்கிறது. பயம் முழந்தாளிட்டு பிரார்த்தனையை ஓதுகிறது. பயம் நேசிக்க பாசாங்கு செய்கிறது. மதம், அடிமைக்குணங்களாகிய கீழடக்கம், மனத்தாழ்மை, வெறுத்தல், மன்னிப்பு, இணக்கம் முதலியவற்றையே போதிக்கிறது. உதடுகள் பயபக்தியுடன் "அவன் என்னைக்கொன்றாலும் நான் அவனை நம்புவேன்" என்று செப்புகின்றன. இதுவே ஈனமாகிய பாதாளம். மதம், சுவதந்திரியம், சுயேச்சை, ஆண்மை, தைரியம், தற்காப்பு முதலியவற்றைக் கற்பிப்பதில்லை. மதம் கடவுளை அதிபதியாகவும், மனிதர்களை அடிமைகளாகளாகவும் அமைக்கிறது. அதிகாரி அடிமைத்தனத்தை இன்பமானதாகச் செய்யும்படியான அவ்வளவு மகா மேன்மையானவராக விருக்க இயலாது.

கடவுள் ஒருவர் இருந்தால் அவர் நல்லவர் என்று நமக்கு எவ்விதம் தெரியும்? அவர் இரக்க முள்ளவரென்றும், மானிடர்களுக்காக கவலை கொள்கிறாரென்றும் நாம் எவ்வாறு ரூபிக்க முடியும்? கடவுள் ஒருவர் இருந்தால் அவர் அநேக தடவைகளில் கோடிக்கணக்கான ஏழை மைந்தர் நிலத்தை உழுது விதைத்து பயிரிடுவதைக்கண்டிருக்கிறார். அவர்களைப் பார்த்த பொழுது மனிதர்கள் உயிருடனிருக்க அந்தப் பயிரையே நம்பியிருந்தார்களென்று அவருக்குத்தெரியும். என்றாலும் இரக்கம் பொருந்திய கடவுள் மழையைக் கொடாமல் வைத்துக் கொண்டார். அவர் கதிரவனை உக்கிரமாகச் செய்து நிலத்திலுள்ள ஈரத்தை இழுக்கச் செய்தாரே ஒழிய மழையைத்தரவில்லை. மாந்தர் நட்ட பயிர் வாடி அழிவதைப் பார்த்தார். ஆனால் மழையைத் தரவில்லை. மனிதர்கள் வறண்ட பூமியை வருத்தத்துடன் நோக்குவதைக் கண்டும் மழையைத் தரவில்லை. வரவர, எஞ்சிய கொஞ்சம் ஆகாரத்தையும் அவர்கள் சாப்பிடுவதை அவர் கண்ணுற்றார். பட்டினி கிடக்கும் நாள்களில் அவர்கள் அழிந்து போவதைக் கண்டார். அவர்களுடைய பசியைப் பார்த்தார், உள் குவிந்த கண்களைக் கண்டார்; அவர்களுடைய பிரார்த்தனையைக் கேட்டார்; எளிமையான பிராணிகளையும் அவர்கள் தின்பதைக் கண்டார். மாதா பிதாக்கள் பசியினால் பித்தர்கள் போலிருப்பதைக் கண்டார்; குழவிகளைக் கொன்று தின்பதைக் கண்டார். இருந்தாலும் மேலே பரமண்டலத்திலிருக்கும் பிதா கல்லைப் போலிருந்தார். கீழுள்ள பூமியும் இரும்பைப் போலிருந்தது. அவர் மழையைத் தரவில்லை. இக்கடவுளின் இருதயத்தில் அன்பிருக்கு மென்று நாம் சொல்ல முடியுமா? அவர் மன்னோர்களுக்காக கவலை கொண்டாரென்று நாம் சொல்ல முடியுமா? அவருடைய காருண்யம் என்றும் நிலைத்திருக்கு மென்று நாம் இயம்பமுடியுமா? பிணங்களை வயல்களில் பரப்பியும் கிராமங்களை அழிக்கும்படியான புயல் காற்றை அனுப்பியதாலும் கடவுள் நல்லவரென நாம் ரூபிக்கிறோமா? ஆயிரக்கணக்கான திக்கற்ற குழந்தைகளைக் கொல்லும் படியான பெரிய வெடிப்புகளை உண்டு பண்ணியும், அல்லது எரிமலையிலிருந்து வரும் நெருப்பு ஆறுகளால் மனிதர்களைப் புதைத்தும் இருப்பதைக் கொண்டு அவர் நல்லரென்று நாம் ரூபிக்கிறோமா? நமக்குத் தெரிந்த உண்மைகளிலிருந்து கடவுளின் சுசீலத்தை நாம் அனுமானிக்க முடியுமா? இவ்வித இடுக்கண்கள் நேராவிட்டால் — கடவுள் மனிதர்களுக்காக கவலை கொள்ள வில்லையென்று சந்தேகம் கொள்ளுவோமா? பஞ்சம், கொள்ளை, நோய், புயல், காற்று, பூகம்பம் முதலியவைகளில்லாவிட்டால் கடவுள் நல்லவரல்லவென்று நாம் சந்தேகிப்போமா!

வேத சாஸ்திரிகளின் கொள்கைபடி கடவுள் மனிதர்களை சம நிலையில் படைக்கவில்லை. அறிவிலும் உருவத்திலும், நிறத்திலும் மாறுபட்ட வம்சங்களை கடவுள் உண்டு பண்ணினார். இதில் யோக்கியமாவது விவேகமாவது இருக்கிறதா? உயர்ந்த குலத்தார் தாங்கள் தாழ்ந்த குலத்தாரில்லையென்று கடவுளுக்கு வந்தனம் செலுத்த வேண்டும்? இதைசரியென்று ஒப்புக் கொண்டால் நான் மற்றொரு கேள்வி கேட்கிறேன். தாழ்ந்த வகுப்பார் தாங்கள் உயர்ந்த வகுப்பார்களாக வில்லை யென்று அல்லது தாங்கள் மிருகங்களில்லை யென்று கடவுளை வணங்க வேண்டும்? கடவுள் பல சிறப்பட்ட வகுப்பார்களை அடிமைப்படுத்துவார்களென்றும் அவருக்குத் தெரியும். கடவுள் இத்தனை செய்தும், இரத்தம் சிந்தப்படுமென்றும், தீவிர வேதனை என்றும் நிலை பெற்று நிற்குமென்றும் தெரிந்தும், எண்ணிறந்த வயல்களில் கொல்லப்பட்டவர்களின் பிரேதங்கள் கிடப்பதையும், இரத்தம் கசியும் அடிமைகளுடைய முதுகையும் குழந்தைகளின் பிரிவால் தாயார்களின் உள்ளுடைந்த மனதையும், அவர் பார்த்திருப்பாரானால் அவரைவிட பொறுமையுள்ள பிசாசு ஒன்றை நாம் கருத முடியுமா? பிறகு எதற்காக கடவுள் நல்லவரென்று நாம் சொல்லவேண்டும்.

சிறைச்சாலைகளில் இறந்த தைரியவான்களும் தர்ம குணமுள்ளவர்களும், தூக்குமேடைகளில் தங்களது மேன்மையான இரத்தத்தைச் சிந்தி வாழ்த்தியவர்களும், கட்டப்பட்டு புகழ் கொண்ட பிராணத்தியாகிகளும், வேதனையந்திரத்தில் கொடுக்கப்பட்டு பூட்டுகளும் சதைகளும் பிய்க்கப்பட்ட குணசீலர்களும், உண்மையை நாடியதில் கண்கள் அவிக்கப்பட்டவர்களும், சண்டையிட்டு வீணே இறந்த எண்ணற்ற தேசாபிமானிகளும், துன்புறுத்தியதினால் கண் கலங்கிய பெண்மணிகளும், பரிதாபமான அநாதைக் குழந்தைகளும் கடந்த ஆண்டுகளில் கொல்லப்பட்ட கோடிக்கணக்கானவர்களும், வெள்ளத்திற்கும் வெங்கனலுக்கும் ஆளானவர்களும், புயல் காற்றுக்கும் அலைகளுக்கும் ஆளானவர்களும், இடிக்கும் எரிமலையினுடைய நெருப்புக்குழம்புக்கும், பஞ்சத்துக்கும், தொத்து வியாதிகளுக்கும், அன்பற்றும் துஷ்டமிருகங்களுக்கும், விஷமுள்ள பாம்புகளுக்கும், இரையானவர்களும், வேற்றுமை கூறிய எனர்களும், முடிதரித்த கொடுமையானவர்களும், பட்டாடை உடுத்த வஞ்சகர்களும் உலகத்திலுள்ள சுதந்திரம் பிடுங்கப்பட்டதென்று வருந்தி மாண்டிருந்தார்கள். இவ்வுண்மைகளெல்லாம் மனிதர்களை காத்து ஆசீர்வதிக்கும்படியான ஒரு கடவுள் இல்லையென இயம்புகிறது.

### நீதிக்காக பணி செய்யும் சக்தி

பெரும்பாலான மக்கள் இயல்பிற்கு மேற்பட்ட கொள்கையை தழுவியிருக்கிறார்கள், ஒரு கடவுள் இல்லையென்றால் அவர்கள் மற்றொரு கடவுளைக் கற்பித்துக் கொள்ளுகிறார்கள். கடவுள் இல்லையென்றால் நீதிக்காக உழைக்கும் சக்தியைப்பற்றி பேச ஆரம்பிக்கிறார்கள். இந்த சக்தி என்பது எது அப்பியாசத்தால் மனிதன் உயர்கிறான் உயர்ந்தே திருந்தான்.

### வருந்துகிறோம்.

மலேயாநாட்டு சுயமரியாதைத் தொண்டரும், சிங்கப்பூர் வாசியும், குடி அரசு நேசருடன், ஜஸ்டிஸ் அபிமானியும் பிரபல ஆங்கில ஆசிரியருமாகிய திருவாளர் S. கோபால் அவர்களின் செல்வப்புதல்வி லஜ்ஜாவதி சென்ற மாதம் 24உ விண்ணுலகெய்தியதை அறிந்து ஆற்றொணாத் துயர் அடைகிறோம். செல்வி லஜ்ஜாவதி இறக்கும்போது பன்னிரண்டாண்டு பாலகியேயாயினும் அவ்வயதில் அவள் ஒரு கலாவதியாகவேயிருந்தாள். பாழும் க்ஷயம் அவளுயிரைக்கொள்ளை கொண்டது இயற்கை யன்னை திருவாளர் கோபால் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் ஆறுதல் அளிப்பாளாக.

### நாகை மஞ்சக் கொல்லையில் புரோகிதத்தை ஒழித்த முதல் வீரர்.

மஞ்சக்கொல்லை திரௌபதியம்மன் கோவில் வடக்குத்தெருவிலிருக்கும் திருவாளர் வி. கே. சுப்பிரமணியன் அவர்கள் தனது தந்தைக்கு சுமார் பதினாறு வருஷமாய் பார்ப்பனரைக்கொண்டு நடத்திய வருஷாந்திரச் சடங்கை சுயமரியாதையை முன்னிட்டு இவ்வருஷச் சடங்கன்று புரோகிதர்களை ஒழித்து 30—4—28-ல் தனது உறவினருக்கும் சில ஏழை மக்களுக்கும் அன்னமளித்தார். அவரது கொள்கைக்கு கொஞ்சமும் மாறுபடாது முகமலர்ச்சியுடன் வரவேற்றுபசரித்தார் அவரது அன்னையாரும். சுயமரியாதை வாழ்க! சூழ்ச்சிப் புரோகிதம் வீழ்க.

வே. சாமிநாதன்.

---

ஒரு இடத்திற்குச் செல்ல வேண்டிய தொரு மனிதன் சாலைகள் பிரியுமிடத்திற்கு வந்து சேருகிறான். வலப்பக்கத்துப்பாதை என்று எண்ணிக் கொண்டு அவன் இடப்பக்கத்துப் பாதை வழியே சென்று முடிவில் வழிதப்பி வந்ததை உணர்கிறான். பிறகு அவன் திரும்பி வந்து சரியான பாதை வழியே சென்று முடிவில் வழிதப்பி வந்ததை உணர்கிறான். பிறகு அவன் திரும்பி வந்து சரியான பாதைவழியேசென்று குறிப்பிட்ட இடத்தைச் சேருகிறான். மறு தடவையிலும் அவன் வலது புறமுள்ள பாதையை விடுத்து சரியான பாதையிலேயே செல்கிறான். அவன் அப்பாதை சென்றிருப்பதால் அது வேறு பாதை என்பதை தெரிந்துக் கொண்டான். அவன் சரியானபாதை வழியே செல்கிறான். இவ்விடத்தில் வேத சாஸ்திரிகள் "நீதி வழியே செலுத்தும் சக்தி ஒன்று இருக்கிறது" என்று சொல்லுகிறார்கள்.

சுவாலையின் அழகில் வசீகரப்பட்ட ஒரு குழந்தை அந்தச் சுவாலையை இளங்கைகளால் பிடிக்கிறது. நெருப்பு சுட்டு விட்டது. அதன் பிறகுகுழந்தை தனது கையை நெருப்பினிடம் கொண்டு போவதில்லை. நீதிவழியே செல்லும் சக்தி குழந்தைக்கு ஒரு பாடத்தைக் கற்பித்து விட்டது.

ஒன்று சேர்ந்த உலக அநுபவமே நீதி வழியே செல்லும் சக்தி. அந்த வல்லமையான சக்திக்கு உணர்ச்சி கிடையாது. அதற்கு சித்தம் கிடையாது. துணிவு கிடையாது. அது ஒன்றின் பலனாகும்.

'திராவிடன்'

ரோஜா முத்தையா

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றார். மாபவாத்திலும் கழுக்குக் கவி பாடினார். அங்கு நடந்ததாக நடக்காத புரட்டு பித்தலாட்டமெல்லாம் தன் பத்திரிகையில் எழுதினார். கடைசியாக திரு. சீனிவாசய்யங்கார் தனது இதர சிஷ்யர்களைக் கூப்பிட்டு 'திரு. வரதராஜுலுவை விட்டே சேர்க்காதீர்கள்; அவரைநம்பி காசு கொடுத்து ஏமாறாதீர்கள்' என்று உபதேசம் செய்து விட்டுக் கப்பலேறிவிட்டார். எனவே இதிலிருந்து மக்கள் சமத்துவமும் விடுதலையும் சுயமரியாதையும் சமூக சீர்திருத்தத்தால் ஏற்படுமா அல்லது வயிற்றுப்பிழைப்புக்கு ஆதாரமான "தேசிய" சுயராஜ்யத்தால் ஏற்படுமா என்பதை முடிவு செய்யும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றோம்.

"திராவிடன்"

## புரோகிதம் ஒழிந்த திதி.

நாகபட்டணம் தாலூகாவைச் சேர்ந்த தன்னிலப்பாடி கிராமத்திலுள்ள சைவ வேளாளரான ஸ்ரீமான் ராஜகோபால பிள்ளையவர்கள் தன் தகப்பனாருக்கு 6-5-28ல் செய்யவேண்டிய திதியை பார்ப்பனரைக்கொண்டு செய்வித்த கிரியைகளைச் செய்யாமல் அவர்களிலக்கிடார்ப்பனரல்லாத 100 ஏழைகளுக்கு அன்னமளித்தார்கள். அதில் ஆதிதிராவிடர்கள் 25 பேர்கள் இருக்கலாம்.

அ. வெங்கிட்டராம நாயுடு.

## புரோகிதம் ஒழிந்த திதி.

என் தகப்பனாரின் நான்காம் வருஷத் திதி நினைவாய், சித்திரை மாதம் 17-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை, பிராமண புரோகிதத்தை அறவேநீக்கி, கடவுளை வணங்கி, ஏழைப்பரதேசிகளுக்கு அன்னமிட்டு, பந்துமித்திரர்களுடன் உண்டி அருந்தினேன்.

நாகபூஷணம் நாயுடு,
கிளார்க், போர்ட் ஆபீஸ்,
நாகபட்டணம்.


## இனாம்! இனாம்!
## ஸில்க் அங்க வஸ்திரம்.
### பிரைஸ் சீட்டு.

என்ற இந்த சீட்டை ரூபாய் 1 விலைகொடுத்து வாங்கினவர்களுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள 5 சீட்டு அனுப்பப்படும். டி சீட்டு 5-ம் விற்று ரூபாய் 4-ம் சீட்டின் டுப்ளிகேட்டும் அனுப்பினவர்களுக்கு 4 ரூபாய் பொறுமான ஒரு சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் இனாம் அனுப்பப்படும். சன்பர்களே, கவனியுங்கள். டி சீட்டு 5-ம் விற்று தாங்கள் கொடுத்த ரூபாய் ஒன்றும் எடுத்துக்கொண்டு மீதம் ரூபாய் நாலும் எங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகவே தாங்களுக்கு ஒரு கஷ்டமுமின்றி சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் கிடைக்க உழைப்பிற்கு உத்தரவாதமுள்ளது இனாம் கிடைப்பதை கவனியுங்கள். எட்டணா ஸ்டாம்புடன் இன்றே எழுதவும். 'ஜவுளி செட்லாக் இனாம்' மானேஜர்,

எம். ஆர். வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவாங்கூர்.





பரம்பரை வைத்திய சந்ததியிலுதித்தவர்!
பழநியில் கீர்த்திவாய்ந்த வைத்திய ஆசிரியர்!!

ஐந்து தலைமுறையாய் அனுபவமுள்ளதும், மஹானின் அனுக்கிரகம் பெற்றதுமான பெரிய முறைகளால் தயாரித்த சிறந்த ஔஷதங்கள் எங்களிடத்தில்தான் கிடைக்கும். கர்ம வியாதிகளைக் கண்டிப்பது எது? ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கின பழநி சி. எம். சாமி.

## குருதாம்பர பஸ்பம் ஒன்று தான்.

இது அபூர்வ சத்தி வாய்ந்தது தீராத நாட்பட்ட திமிர், குஷ்டம், மதமதப்பு, குறைநோய், வீக்கம், பெரு வயறு, மகோதரம், ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம், சொறிகள், பத்துகள், தடிப்புகள், கபால நீர் பிளவை, ஆறாத குளிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீங்கும் அனுபவத்தில் கைகண்டது.

100-வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50. 50-வேளை ரூ. 25.

ஏழைகளுக்கு பாதி விலை.

நற்சாட்சியை கவனியுங்கள்:—

ஐயா, எனக்கு வயது 35. இரண்டு வருஷகாலமாய் குஷ்ட வியாதி வலது கால் பெருவிரலில் குளிப்புண், குண்டி பின்புறத்தில் கருமேகம், முதுகில் வெள்ளைப்புள்ளிகள், வலது கையிலும் இடது கையிலும் பத்துகள், தேகத்தில் மதமதப்பு, சுரணையில்லாதிருத்தல் இவைகளினால் மிகவும் கஷ்டப்பட்டு மதராஸ், ராயபுரம் ஆஸ்பத்திரியில் 17 ஊசிகள்வரை ஏற்றியும் இன்னும் அநேக இங்கிலீஷ் மருந்துகள் சாப்பிட்டும் குணமடையாமல் தங்கள் மருந்துகளின் குணங்களையும், பிரக்யாதியையும் கேள்விப்பட்டு நேரில் வந்து 50 வேளை குருதாம்பர பஸ்பமும் அதற்கு அனுபானமும் பெற்று சாப்பிட்டதில் குணமாய் இருக்கிறது.

கோவிந்த நாயர், குடுவாயூர், பாலக்காடு தாலூகா.

குருதாம்பர பஸ்பம் தருவித்து 60 வயதுள்ள ஸ்திரீக்கு மேகநீரினால் முழங்கால், பாதம், கணுக்கால் இவைகளில் வீக்கமும், உபத்திரவமுமிருந்து அதற்கு 10-வேளை கொடுத்ததில் பூரண சௌக்கியமாயிற்று.

எஸ். கே. நாராயணசாமி நாயுடு,
எப். டி. தென்னை, காளியாம்பாடி போஸ்டு, வேலூர் தாலூகா.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய அபீஸர்களின் நற்சாட்சிகளையும் கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர். **C. மலையப்பசாமி.** நித்தியானந்தவைத்திய சாலை, பழனி

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி, 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.


## தெம்மாப்பட்டு
## சித்ரா பௌர்ணமி உத்சவம்

"நாளது சித்திரை மாதம் 22-ம் நாள் சித்ரா பௌர்ணமியன்று இவ்வூர் (தெம்மாப்பட்டு) வேளாளர் குலச்சார்பாக ஏழைகளுக்கு அமுதாபசாரம் நடைபெற்றது."

சோமசுந்தரம்.


## கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் திட்டமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட ஜாதகள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி



## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஹு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.



## "பிரசண்ட மகா விகடன்"

இது ஆசார சீர்திருத்தத்தையும், நல்லொழுக்கத்தையும் போதிக்க வெளிவரும் அதிரச விகட மாதப் பத்திரிக்கை.

இது வேடிக்கையாகவும், விநோதமாகவும், விகடமாகவும், தமாஷாகவும், பல விசித்திர சித்திர படங்களுடன் விளங்குவது. காலப்போக்குக்கேற்றது. இன்பம் பயக்கும் இனிய நடையது.

வருட சந்தா, ரூ. 1—8—0.
தனிப்பிரதி, அணா. 0—4—0.

"பிரசண்ட மகா விகடன்" ஆபீஸ்,
ந. மு. ஸ்டோர், பாலக்கரை, திருச்சி

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்காக பன்முறையும் மன்னிப்பு கேட்டு இந்த நிலைமையில் தம்மைக்காப்பாற்றி விட வேண்டுமென்றும், தாமும் பிராமணரல்லாதார் தான் என்றும், தமக்கும் அவர்களின் சுயமரியாதையில் நம்பிக்கை யுண்டென்றும், ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளையையும் ஸ்ரீ செட்டியாரையும் அடித்தது தம்மை அடித்தது போலத்தான் என்றும் சொல்லி மிகவும் வேண்டிக் கொண்டனர். "இந்த நாயுடு இப்படித்தான் முன்னே சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் சென்னையில் அடி பட்டுக் கொண்டு தம்முடைய மோட்டார் டிரைவர் மீது பழிபோட்டார்" என்றும் இவரை நம்பக் கூடாது என்றும் ஒருவர் சொன்னார். இருப்பினும் சுயமரியாதை வீரர்கள் தம்மை அடைக்கலம் புகுந்த நாயுடுவை பெருந்தன்மையுடன் காப்பாற்றி வெளியில் அழைத்துக் கொண்டு போனார்கள். வெளியில் சென்றதும் ஸ்ரீ நாயுடு தம்மை மைலாப்பூர் கோஷ்டியார் உபயோகப் படுத்திக் கொண்டு உதை படும்படி தனியாய் விட்டு விட்டு ஓடிப் போனதைக்கண்டு மனம் வெதும்பினார். இவரை அழைத்துப் போவதற்கு அய்யங்காரோ மோட்டார்காரோ ஒன்றும் வெளியில் காத்திருக்க வில்லை. சுயமரியாதை வீரர்களிடம் யுத்தத்தில் அகப்பட்ட கைதி போல் ஸ்ரீ நாயுடு ஸ்ரீமான் ஆர் சின்னையா பிள்ளை வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே அவர் ஸ்ரீமான் பிள்ளையிடமும் மன்னிப்புகேட்டுக் கொண்டு திருவிழுந்தூர் போய் அங்கேயும் யாரையும் காணுமையால் ரயிலடிக்குச் சென்று ஓடிப்போய் விட்டார். ஸ்ரீமான் சாமிநாத செட்டியார் மண்டையில் அடிபட்டவுடன் யாரடா என்னை அடித்தது என்று மேஜையின் மீது ஏறியதும் கீழே விழுந்தார். கீழேயுள்ள பெஞ்சி கவிழ்ந்ததும் அதனுடன் செட்டியாரும் கவிழ்ந்து ஒரு கண்ணாடி பீரோவில் மனிதன் எலும்புக் கூடு வைக்கப் பட்டிருந்ததில் முட்டிக் கொண்டு தலை மாட்டிக் கொள்ள வலி பொறுக்க மாட்டாமல் தலையை வெளியில் இழுக்க உள்ளேயிருந்த—எலும்பு மனிதன்—எலும்புகள் எல்லாம் வெளியில் கலகல எனக் கொட்டியதைக் கண்டு தம்முடைய எலும்புகள் தான் நொருங்கி விட்டனவோ என்று நிலைகுலைந்து பிரக்ஞை யற்று விட்டார். இதைக்கண்ட மற்ற பாக்கி பேர்களும் ஓட்டம் பிடித்து ஹாலைக் காலியாக்கினர். இந்தச் சண்டையில் ஸ்ரீமான் வி. சுப்பிரமணிய பிள்ளைக்கு அடி மட்டும் கிடைத்தது. ஆனால் காங்கிரசைச் சேர்ந்த பலருக்கு நல்ல அடியும் கிடைத்ததோடு மண்டை உடைந்து ரத்தம் சிந்தவும் ஆகிவிட்டது. உண்மையில் வாசிக்க இதை ஸ்ரீ நாயுடுவும் அவர் 'தமிழுநாடு'வும் கொஞ்சங்கூட தாம் தப்பித்ததற்காகவேனும் நன்றி பாராட்டாமல் உண்மைக்கு நேர்மாறான பொய்யைப் பார்ப்பனப்பனப்பத்திரிகையை விட அதிகமாக அளந்து பிரிகரித்து தம்மையும் புகழ்ந்து கொண்டு தம்காலிக்கில பிராமணரல்லாதார் வீழ்ந்ததாகவும் எழுதியிருப்பது எவ்வளவு கேவலமும் இழிவான செய்கையும் ஆகுமென்பதை வாசகர்கள் யோசித்து முடிவு செய்யவும். கூட்டம் முடிந்தபிறகு இரவு 10-மணிக்குக் காவேரிக்கரையில் அடியாட்களுக்குள் பெரிய கலகமும் சண்டையும் அடிதடிகளும் நடந்தபின்னர் அவர்களை எலிவிட்ட காங்கிரஸ் பிரசாரகர்களால் கைக்கூலி கொடுக்கப் பட்டு சமாதானம் செய்யப்பட்டதும் அடங்கிவிட்டதாகவும் கூறப்படுகிறது. இச்சண்டைக்கு காரணம் ரூ. 250-ஐ அடியாட்களில் எல்லோரும் சமபங்காக எடுத்துக்கொள்ள முடியாமல் சாராயக்கடைக்காரரும், பிராசஸ் சர்வரும் பங்குபோட்டுக்கொண்டு மற்றய ஆட்களுக்கு தலைக்குக் கால் ரூபாய் வீதம் கள்ளுக்காக கொடுத்ததே யாகுமெனவும் சொல்லப்படுகின்றது.

## எவ்வித புரோகிதமும் கூடாது.

மாண்புமிக்க தலைவரே!

புரோகிதத் துன்பத்தை அறவே ஒழித்துவிட வேண்டிய அவசியத்தைக் குறித்து தாங்கள் பிரசாரம் செய்து வருகிற சின்னாட்களுக்குள் அவ்வியக்கம் தமிழ்நாடு முழுதும் பரவியிருப்பதை எவரும் மறுக்கமுடியாது.

பார்ப்பன புரோகிதனை நீக்கி அல்லாத புரோகிதனை ஏற்படுத்திக் கொள்கிற சிலருடைய கொள்கையிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. நாளடைவில் பார்ப்பனரல்லாத புரோகிதமும் பரம்பரைத் தொழிலாக அடிமைப்படுத்தும் நிலையில் வந்து விட இடங்கொடுக்கலாகாது என்பதே எனது தாழ்வான அபிப்பிராயம்.

ஆகவே விவாகம் முதலிய சுபகாரியங்களிலும் 'கருமாதி' முதலிய அசுப காரியங்களிலும் முறையே மணமக்களை ஆசீர்வதித்து கூறும் நன்மொழிகளும் கடவுளிடம் இறந்துபோன ஆன்மாவுக்காக பிரார்த்திக்கும் மன்னிப்பு வார்த்தைகளும் சொல்லப்பட்டு விசேஷத்தை முடித்துக்கொள்ள வேண்டுமென்பது எனது உள்ளக்கிடக்கை.

அவ்விதம் கூறும் மொழிகள் படித்த எவரும் கூறத்தக்கதாக இருக்கவேண்டுமே யொழிய தனிப்பட்ட ஒரு வகுப்பார் அல்லது சந்ததியாருக்குஉரியதாகஇருக்கும்படி பழக்கத்திற்கு கொண்டுவந்துவிடக்கூடாதென்பது தாங்களறியாததல்ல.

ஆகவே நன்மை தின்மை காரியங்களில் தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் உபயோகித்து வருவதற்கு தகுதியான சுயமரியாதைச் சங்கத்தின் பேரால் மேலே கண்ட இரண்டு காரியங்களுக்கும் வார்த்தைகள் வாக்கியங்கள் தயாரித்து புத்தக ரூபமாக வெளியிடவேண்டுமென்று தங்களை பன்முறை வேண்டிக்கொள்கிறேன்.

சுவாமி. வேதாசலம் அவர்கள் ஏதோ அத்தகைய தமிழ் மந்திர நன் மொழிகளடங்கிய புஸ்தகம் ஒன்று வெளியிடப் போவதாக சமது 'குடி அரசில்' சில மாதங்களுக்கு முன் வெளிவந்த ஞாபகம் எனக்கு இருக்கிறது.

எப்படியாவது இவ்விஷயமாய் கூடிய சீக்கிரம் ஒரு ஏற்பாடு செய்து சுப. அசுப காரியங்களில் உபயோகிக்கிற வாக்கியங்களை வெளியிட முயற்சி எடுத்து தமிழ் நாட்டிற்கு உதவுமாறு பிரார்த்திக்கிறேன்.

ஆர். துரைவெங்கடசாமி
இராமச்சந்திரபுரம்.

குறிப்பு:—இந்த மந்திரியான யோக்கிய கூட்டத்தாரின் செய்கையினாலும், "தமிழ் நாடு" வின் பொய் பிரசாரத்தினாலும் ஸ்ரீ நாயுடுவின் சலைஞ்சக சூழ்ச்சியினாலும் பாயவரத்திலும் இதர தஞ்சை ஜில்லாவின் மற்ற தாலூக்காக்களிலும் மிகுந்த பரபரப்பும் ஆத்திரமும் உணர்ச்சியும் உண்டாயிருக்கிறது. பிராமணரல்லாதாரின் சுய மதிப்பு தாண்டப்பட்டு கொதித்துக் கொண்டிருக்கிறது. 6-5-28-ல் சென்னை மாகாண சுயமரியாதை மகாநாடு கூட்ட ஆலோசிப்பதற்காக மாயவரத்தில் வரவேற்பு கமிட்டி கூட்டப்பட்டு திருவாளர் ஆர். சின்னையா பிள்ளையால் அறிக்கைகள் ஆயிரக்கணக்காக வெளியிடப் பட்டிருக்கின்றன. "தமிழ் நாடு" வைக் கொளுத்தி தம்முடைய ஆத்திரத்தைக் காட்ட வேண்டுமென்று சொல்லி நிறுத்தி விட்டனர். பார்ப்பனர்கள், ஸ்ரீ நாயுடுவை உபயோகப்படுத்தி தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்ள முயற்சிக்கின்றனர். முடிவு என்ன ஆகுமோ? நாம் அறியோம். 'திராவிடன்'

## மதுரை—இராமநாதபுரம் ஜில்லா பார்ப்பனரல்லா இளைஞர் மகா நாடு

அறிக்கை

1 இம்மகாநாடு மதுரையில் பேலமாசி வீதி நகரக் கொட்டகையில் நாளது மேமீ 19 20. உ சனி ஞாயிறுகளில் நடைபெறும்.

2 இம்மகாநாட்டு வரவேற்புகழகத் தலைவர் சிவகங்கை எஸ்டேட் வக்கீலும் தாலுகா போர்டு பிரசிடெண்டுமான திரு. எஸ். இராமச்சந்திரன் சேர்வை அவர்கள்.

3 மகாநாட்டின் தலைவர் சென்னைநகராட்சி கழக உறுப்பினர் டாக்டர். ஸி. நடேசமுதலியாரவர்கள்.

4 வரவேற்புகழக உறுப்பினர் கட்டணம் ரூ. 2 பிரதிநிதி கட்டணம் அணா 8 பார்வையாளர் (Visitor) கட்டணம் அணா 4 பெண்களுக்கும் ஆதிதிராவிடசகோதரர்கட்கும் கட்டணம் கிடையாது.

5 வெளியூர் பிரதிநிதிகளுக்கு மகாநாட்டில் இடவசதியும் ஆகார வசதியும் இலவசமாக கொடுக்கப்படும். (விசிட்டர்களுக்கு கிடையாது) படுக்கைகள் அவரவர்கள் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6 மகாநாட்டின் தொண்டர் படைத்தலைவர் திரு. வி அழகப்பன் பீ ஏ பீ எல் வக்கீல் (மதுரை) இளைஞர்கள அவர்களிடம் சென்று தொண்டராக பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7 கதர் பொருட் காட்சியை "குமரன்" பத்திராசிரியர் திரு. செ. முருகப்ப செட்டியாரவர்களும்

8 வர்த்தக பொருட் காட்சியை "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் ஆ. முத்து நாடாரவர்களும் திறந்து வைப்பார்கள்.

9 20உ ஞாயிற்றுக்கிழமை இரவு சகோதரத்துவ சமத்துவ சமபந்தி போஜனமொன்று நடைபெறும். அதற்கு டிக்கட் பெற்றவர்களை அனுமதிக்கப்படுவர். அது போழ்து மதுரை பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தார் சிலம்பம் சர்க்கஸ் பார் விளையாட்டுகளடங்கிய தேகப்பியாசங்களை செய்துகாண்பிப்பார்கள்.

10 வரவேற்புக்கழகஉபத் தலைவர்கள் மதுரை முனிசிபல் கௌன்சிலர் கா. ம. அலாவுதீன் ராவுத்தர் பகதூர், பி. இ. தாமஸ், பி. வரதசாமி நாயுடுகாரு, வக்கீல், ஆர் ஜி நல்லகுருத்தாலம் பிள்ளை அவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் தங்கமணி நாடாரவர்கள், என். சாமி பண்டிதர், பிச்சமுத்து சேர்வை ரவர்கள், வைரவபுரி அமபலகாரர் அவர்கள், கருமத்து சிவலிங்கம் செட்டியாரவர்கள்.

11 மகாநாட்டுக்கு அனுப்பவேண்டிய தீர்மானங்களை வரவேற்பு கழக தலைவருக்கு 14உக்குள் வந்து சேரும்படியாக சிவகங்கைக்கு அனுப்பும் படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

12 வைக்கம் வீரர், அழகர்சாமி நாயுடு சிங்கம், கண்ணப்பர், இராமநாதன், ஆர்யா முதலிய பல தலைவர்கள் விஜயம் செய்வார்கள். அனைவரும் வருக.

விளம்பர ஆபிசர்.

# கும்பகோண

## பார்ப்பனக் க



யாகசாலையில் கொல்வதற்காக இரண்டு ஆடுகள் ஒரு பார்ப்பனனால் கொண்டு போகப்படுகின்றன.

கொலை! கொலை!!

எட்டு ஆடுகள் கொலை!!!



மற்றொரு பார்ப்பனனால் ஒரு ஆடு இழுத்துக்கே

## யாகத்தின் பேரால் எட்டு ஆடுகள்

திரு, தண்டாங்கோரை அப்பாதுரை தீக்ஷிதர் முதலியவர்களால் வெளியிடப்பட்ட துண்டு பிரசுரங்களின்படி சர்வதோமுகயாகம் கும்பகோணம் டவுன் எக்ஸ்டென்ஷனில் 30-3-28ந் தேதிவெள்ளிக்கிழமைஆரம்பிக்கப்பட்டதுமேற்படியாகத்திற்குசீர்திருத்தக்காரர்களென்றுசொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்கள்உள்பட எல்லோரும் மித்திரனில் வெளியிட்டிருந்தபடி பெரும்பான்மையாகக் கூடியிருந்தார்கள் திரளான ஜனங்கள் வெளியிலிருந்து உள்ளே நடப்பதை பார்த்துக்கொண்டிருந்தார்கள் யாகத்தை நடத்திவைதத 108 ருத்விக்குகளும் ஸ்மார்த்த பார்ப்பனர்களாகயிருநத போதிலும வைணவ மாத்வ பார்ப்பனர்கள் வந்திருந்து ஆதரித்தது குறிப்பிடத்தக்கது முதல் 5 நாட்களும் யாக சாலை சுறுசுறுப்பாகக் காணப்படவில்லை. 6 வது நாள் காலை முதற்கொண்டுதான் விடாமல் அதிக வேத கோஷ்டமும் ஓமப்புகையும் காணப்பட்டது. 6 வது நாள் மாலை 4 ஆடுகள் கொல்லப்பட்டன என்னும் வதந்தி ஊர் முழுவதும் பரவி விட்டதால் 7 ஆம் நாள் திரளான ஜனங்கள் வேடிக்கை பார்கக வந்து கூடி விட்டார்கள். முதலில் யாகத்தினுடைய கொள்கையைப்பற்றி வடமொழி சுலோகங்கள் சொல்லப்பட்டு தமிழில் வியாக்யானமும் செய்யப்பட்டது அதன் முக்கியமான கருத்து என்னவென்றால் அவ்வாடுகளாகிய யாகப் பசுக்கள் பிராமணர்கள மோக்ஷமடையும் பொருட்டு தங்களுடைய பிராணனை தியாகம செய்வதை அங்கீகரிக்கும் படியாக தேவர்களை பிரார்த்தனை செய்வதாகவும் அதனால் அந்த ஆடுகளின் தியாகங்களை இவர்கள் ஏற்றுக்கொண்டு அந்த ஆடுகளும் அதைச்சார்ந்த வர்க்கங்களும் நற்கதியடைய வேண்டுமென்று பிராத்தனை செய்யவேண்டியது என்பதாகும்.

யாகசாலையானது நான்குமுகங்கொண்டதாகவும் நடுவில் ஒரு ஓமகுண்டங் கொண்டதாகவும் அமைக்கப்பட்டிருந்தது. நான்கு பக்கத்திலும் ஒவ்வொரு ஸ்தம்பம் நாட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஸ்தம்பத்திலும் ஒவ்வொரு ஆடு கட்டப்பட்டிருந்தது. மந்திரங்கள் சொல்லி ஆட்டின் பேரில் சில பாகங்களில் நெய் வார்க்கப்பட்டது சில சடங்குகள் செய்யப்பட்ட பிறகுஒவ்வொருஆடும்பார்ப்பனரால்கொலைசெய்வதற்காகவும் சமைப்பதற்காகவும் அந்தயாகசாலையின் வடமேற்கு மூலையில் தனியாக அமைக்கப்பட்டிருந்த அறைகளுக்குத் தூக்கிக்கொண்டும் இழுத்துக்கொண்டும் போகப்பட்டது ஆடுகள் மந்திரம சொல்லி ஓமம் வளர்க்கும்பொழுது தாமாகவே மூர்சித்து கீழே விழுந்து விடுமென சில பார்ப்பனர்களால் சொல்லப்பட்ட போதிலும் அவைகள் கொலை செய்யுமிடத்திற்குக்கொண்டு போகபபடும் வரையில்மாந்தழைகளைத் தின்று கொண்டு நல்ல சுவாதீனத்துடன் இருந்தன .கொலை செய்யுமிடத்திற்கு கொண்டு போனவுடன் அவ்விட மிருந்த மூன்று வேளாளர்களில் ஒருவர் ஆட்டின வாயை நூல் கயிற்றால் கட்டி குரல் வளையை அமுக்கக்கொண்டும் ஒருவர் படுக்கப் போட்டு நாலு காலையும் பிடித்துக்கொண்டும் மற்றொருவர் கிட்டிக்கழியினால் விரையைக் கட்டி இழுத்துக் கொண்டு கசக்கியும் கொன்று விட்டார்கள். சில ஆடுகள் விரையைக் கசக்கின போது வேதனையைப் பொறுக்க முடியாமல் துள்ளித்திமிறி கத்தின, பிறகு பக்கத்திலிருந்த சமையல் அறைக்குச் கொண்டுப்போகப்பட்டன, அவ்வாடுகளின் இடது விலாப் புறத்தில்பார்ப்பனர்கள் கிழித்து குடலை வெளியில் எடுத்து அதன் பேரில் படர்ந்திருந்த பேர் கொழுப்பை உரித்து சாணிபோல் கட்டப்பட்டிருந்த காரை முள்ளின் பேரில் விரித்து ஓமகுண்டத்திற்குக் கொண்டு போய் தணலில் நெய்யை விட்டு வாட்டி அதை கையால் எடுத்து உருட்டி கீழே இருந்த தர்ப்பைப் புல்லின்பேரில் வைத்தார்கள்.

இவ்விதம் அந்தந்த ஆட்டின் கொழுப்பை அந்தந்த ஓம குண்டத்திற்குக் கொண்டுபோய் செய்யப்பட்ட பிறகு அதே பார்ப்பனர்கள் அந்த அறைக்குள் வந்து தோல், தலை, கால், எலும்பு குடல் நீங்கலாக மற்ற பாகங்களை எல்லாம் எடுத்து அவ்விடத்தில் அடுப்பின் பேரில் தனித்தனியாக. இருந்த நாலு பாத்திரங்களில் போட்டு பக்குவஞ்செய்து ஓம குண்டத்திற்கு நிவேதனம் செய்து எடுத்துக்கொண்டு போனார்கள். வ்விதமே மறுநாளும் 4 ஆடுகள் கொலைசெய்

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

மிஸ் மேயோ எழுதியுள்ள "இந்தியத்தாய்" என்ற அவதூறுப் புஸ்தகத்திற்குநேர் மறுப்பு நூல் தமிழில் வெளிவந்துவிட்டது.

# மாயா மேயோ

(வ. ரா. எழுதியது).

மிஸ் காதரைன் மேயோ எழுதிய "இந்தியத்தாய்" என்ற நூலுக்கு "மாயா மேயோ' சரியான மறுப்பாகத் தமிழில் எழுதப் பெற்றுள்ளது. மேயோவின் நூலை "சாக்கடைப் பரிசோதகரின் யாதாஸ்து" என்று மகாத்மா காந்தி சொன்னார். கவி ரவீந்திநாத் டாகூர் அவருடைய நூலைப் "பொய்க்களஞ்சியம்" என்று கூறினர். டாக்டர் அனிபெசண்டு "இழிந்த கருத்துடன் இந்தியரைத் தூற்றும் கெட்ட நூல்" என்றுரைத்தார் ஸ்ரீ டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு "இந்தியத்தாய்" எழுதியவரைக் "குப்பக்காரி" என்றும் "நாடோப்பெண்" என்றும் அழைத்தார். மேயோவின் அவதூறுக் களஞ்சியத்தில் காணப்படும் பொய்களும், வஞ்சக எண்ணங்களும், பாதி உண்மைகளும், மற்றுமுள்ள ஏனைய ஆபாசங்களும் "மாயா மேயோ"வில் எடுத்துக் காண்பிக்கப்பெற்று, தக்க மறுப்புகளும், நேர்மையும் நேர்த்தியும், உண்மையும் கொண்ட சமாதானங்களும் அளிக்கப் பெற்றிருக்கின்றன. மேநாட்டின் நாகரீகமும் உலகப்போக்கும் "மாயா மேயோ"வில் நன்கு ஆராயப்பட்டிருக்கின்றன. உயர் வாழ்வுக்கும், விடுதலைக்கும் ஏற்ற சாதனங்களும் இந்நூலில் விவரமாகக்கூறப்பட்டிருக்கின்றன. மறுப்புகளுக்குத் தக்க சான்றுகள் காண்பிக்கப் பெற்றிருக்கின்றன. நகைச்சுவையும், ஆராய்ச்சியும் விடுதலைத் தத்துவங்களும் சூத்திரங்களும் இந்த நூலில் மலிந்து கிடக்கின்றன. அடிமைத் தனத்தினின்றும் விழிப்புற்று விடுதலைபெற்ற உலக நாடுகளைப்பற்றிய வரலாறுகள் பலவற்றை இந்நூலில் காணலாம். தன் மதிப்பையும் தேச பக்தியையும் ஊட்டி மிஸ் மேயோவுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் சாட்டையடி கொடுத்து அவளுடைய அவதூறு நூலுக்கு சரியான மறுப்பாக பக்ஷபாத மில்லாத ஸ்ரீ வ.ரா. அவர்களால் எழுதப்பெற்ற இந்த "மாயா மேயோ"வை ஒவ்வொரு இந்தியரும் வாங்கி வாசித்தல் வேண்டும்.

சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம், நேர்த்தியான அச்சு. விலைரூபாய் 2—0—0 தபால் செலவு வேறு.

இந்த நூல் உங்கள் ஊரிலுள்ள புஸ்தக ஷாப்பில், இருக்கிறதா வென்று பாருங்கள். இல்லாவிட்டால் கீழ்க்கண்ட விலாசத்துக்கெழுதுங்கள்.

**வாலன் புஸ்தகசாலை,** 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" சென்னை. டெலிபோன் நெ. 3311

# தேகாரோக்கியமே சிறந்த பூஷணம்!

அம்ம! கொடிய கோடை ஆரம்பித்துவிட்டது. சகிக்கமுடியாத இந்த வெயிலினுல் ஏற்படும் தேக அசௌகர்யங்களுக்கு கணக்கேயில்லை. சாதாரண தலைவலி முதல் கொடிய மலேரியா சுரம் ஏற்படக்காரணமாயிருப்பது இந்த வெயிலே! ஆகையினுல் ஒவ்வொருவரும் முன் ஜாக்கிரதையுடனிருக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியம். கோடைகால உபயோகத்திற்கென்றே ஸ்பெஷலாய் தயார் செய்திருக்கும்:—

(பண்டித. டி. கோபாலாச்சார்லு அவர்களின்)

## ஜீ வா மி ரு த ம்

வெயிலின் கொடுமையால் வாடி வதங்கியவர்களுக்கும், மெலிந்த தேகிகளுக்கும், புதிய இரத்தத்தையும், போதிய புஷ்டியையும் அளவற்ற உற்சாகத்தையும் கொடுத்து புத்துயிரளிப்பது. எவ்வித வியாதியால் வருந்தும் நோயாளிகளுக்கும் நமது ஜீவாமிருதம் ஓர் தேவாமிர்தம் என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மை. ஒரே புட்டி மருந்து உங்களுக்கு இந்த உண்மையை விளக்கும்.

**விலை புட்டி 1க்கு ரூ. 3—4—0.**

## அ மி ரு த ா ம ல க தை ல ம்

புராதீன, சாஸ்திரீய ஆயுள்வேத முறைப்படி செய்யப்பட்டது. தினசரி ஸ்நானத்தில் இதை சிறிதளவு உபயோகித்து வந்தால், மூளைக்கும் சிரசுக்கும், மற்றுமுள்ள எல்லா அவயவங்களுக்கும் போதிய குளிர்ச்சியைக் கொடுத்து உஷ்ணத்தின் உக்ரமிப்பை தணிக்கக்கூடியதும், வெயிலில் வேலை செய்வோருக்கும், ஆபீஸ் குமாஸ்தா, மானேஜர் முதலிய மூளை வேலையுள்ளவர்களுக்கும், உண்மையில் ஒரு வரப்பிரசாதந்தான்!

**விலை புட்டி 1க்கு ரூ. 1—0—0.**

இன்றே உங்கள் ஆர்டரை அனுப்பி விடுங்கள்,

## ஆயுள்வேதாசிரமம்,

**151, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, தபால் பெட்டி 287, சென்னை.**

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மடையாது. அறிவு வந்து விடாது. இந்திரிய சேட்டையும் போகாது மதக்குறியணிந்து கோவிலுக்குப் போய் கன்னத்திலடித்து சத்தினலும் மனம் சுத்தியாகாது இந்திரிய ஆதிக்கம் குறையாது. ஆயிரம் குடும்பத்தை அனுதியாக்கி ஒருஆட்டுத்துண்டைக்கண்டு ஜீவகாருண்ய மென்று தேகத்தை யெல்லாம் குறுக்கிக்கொண்டாலும் மனதிற்கு இரக்கம் வந்துவிடாது. இந்திரியங்களின் கொடுமை போய்விடாது. விசாரணை செய்துபார்த்தாலே அறிவின் தன்மை புலப்படும். அப்பொழுதுதான் மனிதன் மற்ற ஜீவராசிகளில் மேற்பட்டவனைக் காட்டமுடியும்.

புத்தியின் மற்றைய பாகமாகிய கற்பனை சக்தி யென்றஓர் சக்தி மனிதனிடமிருக்கிறது. அதுதான் மனிதனது சிறுமை எல்லாவற்றையும் அகற்றும் திறனுடையது இந்தசக்தி விசாரணையினுல் உண்டாகிறது. மனஸ், இந்திரியம், அறிவு, இத்தனையையும் போட்டு விசாரணை என்னும் மத்தால் கடைந்தால்உண்டாகும் வெண்ணெய்க்குத்தான் சிந்தனை சக்தி என்று பெயர். இந்த சக்திக்குத்தான் கடவுள் அருள் யென்றும் கடவுள் கடாட்சமென்றும் ஞானமென்றும் சொல்லுவது. தேகம், மனஸ், இந்திரியங்கள்,முதலிய பிரபஞ்சமெல்லாவற்றையும் அப்பாற்பட்டு ஆனந்திக்கும் சக்தியும் அதுவே. மனிதனுக்கு உண்மையாக ஏற்பட்டுள்ள பெரு உரிமை பெருஞ்செல்வம் மலைகள், ஆறுகள், பிரபஞ்சத்தில் காணும் அத்தனையும் கண்டு களித்து பிரபஞ்சத்தோடு கலந்து ஆனந்தப்படுவது அந்த சக்தியே. இந்த நிலையில் தான் மனிதன் எல்லாவற்றைவிட உயர்ந்தவன்.

---


## ஆநந்த குணபோதினி.

மூன்றும் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000-சந்தாதார்கள்உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனும். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.



## அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸி நல்ல ரங்குள்ள வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பாம்பே குவாலட்டி மேல் கண்ட மார்க்குகளும், சூரத் மார்க்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி திணுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினல் அனுப்பித்தருகிறேம்.

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
மேட்டுபாளையம் — கோயமுத்தூர்.



## கணித விளக்கமென்னும்

# கடைக்கணக்கு நூல்.

சத்தியவிஜய நகரம் டீச்சர் ரா. ராஜு முதலியாரால்
இங்கிலீஷ் எண்ணலெழுதப்பட்டது.

உயர்தர கலாசாலைகளில் வாசிக்கும் மாணவர்கள் (பிராக்ஷன்) வழியாகவும் (ஜி. சீ. யம்) (யல். சீ. யம்,) வழியாகவும், கண்டு பிடிக்கக்கூடிய வியாபாரத்திற்குரிய கணக்குகளெல்லாம் போரட் பாடசாலைகளில் பயிலும் சிறுவர் சிறுமிகளும் வியாபாரத்தில் பயிலும் சிறுவர்களும் வியாபாரிகளும் சுலபவழியாய் தெரிந்து விடை கூறும் வண்ணம் இங்கிலீஷ் எண்ணல் எழுதப்பட்டது. இப்புஸ்தகத்திலுள்ள கணக்குகள் சிலது கீழ்காட்டப்பட்டுள்ளது.

(1). அறுவர் வியாபாரம் ஆரம்பித்தார்கள் 8-ல் ஒன்று ஒருவன்

| | |
|---|---|
| 5-ல் ஒன்று ஒருவன் | இவர்கள் செய்த போத்தில் வந்த லாபச்சாட்டில் சுவாமியார் பாக விகிதம் 72 ரூபாய் கொடுத்தார்கள். இவர்களுக்கு வந்த மொத்த லாபமென்ன? நபர்வாரி லாபமென்ன? |
| 6-ல் ஒன்று ஒருவன் | |
| 3-ல் ஒன்று ஒருவன் | |
| 10-ல் ஒன்று ஒருவன் | |
| 16-ல் ஒன்று ஒருவன் | |

(2) ஒரு மரக்கால் கடலைக்காயின் இடை 56 பலமுள்ளது ரூபா 1-க்கு மரக்கால் 4-ஆக 1-மரக்கால் 50-பலம் இடையுள்ள கடலைக்காயை ரூபா 1-க்கு எத்தனை மரக்கால் வாங்கலாம். (3) மாதம் 1-இ 100-க்கு வட்டி 1—4—0 ஆக 13 நாளைக்கு 90ரூபா வட்டி குடித்தான் அவன் வாங்கி இருந்த அசல் ரூபா என்ன. (4) மாதம் 1-க்கு 100-க்கு வட்டி ரூபா 0—12—0 ஆக 1-வருஷம் 10-மாதம் 19-நாளைக்கு அசலும் வட்டியும் ரூபா 1500 ஆனுல் இதில் அசல் ரூபா என்ன வட்டி ரூபா என்ன?

(5) 12-மரக்கால் நெல்லை 7-மரக்கால் கூடை ஒன்றைக்கொண்டும் 1-நபர் 1-க்கு 6-மரக்கால பங்கிட்டுக்கொள்ள வேண்டியது: இதுபோன்ற கட்டுக்கதைக் கணக்குகள் 39 இருக்கின்றன. புத்தகம் 1-க்கு விலை அணு 0—8—0. தபால் சார்ஜ வேறு.

விலாசம்:— சி. முருகேச முதலியார்,
கீழ்வெள்ளியூர், மதுராதிருமணித்தாங்கல்,
தேசூர் போஸ்டு,
(வந்தவாசி தாலூகா, வட ஆற்காடு ஜில்லா)



## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைககப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிருர்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ண எஜன்சி, 26 வெள்ளாளத்தெரு, வேப்பேரி மதராஸ



கவனியுங்கள்! நல்ல லாபம்!

## PHOTO HAND CAMERA

ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0



நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறுநூருகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போடோவின் அளவு $3\frac{1}{2}$X $2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்



...பபத்ர படையாச்சி,
குமிளியம்,
...டையார் பாளையம்.




ரங்கசாமி நாயக்கன்,
கொங்கு நாயக்கன் மகன்,
புதூர், ஆயக்குடி போஸ்டு, பழனி தாலுக்கா.




கிருஷ்ண செட்டி,
சித்தாமணி கிராமம், பாதரி போஸ்டு,
ஆச்சாபாக்கம் மார்க்கம்.



ச. பெ. ந. ஷேக்
முகம்மது ராவுத்தர்,
குளிவரை போஸ்டு,
திருமயம் தாலுக்கா.



T. செங்கசாமி,
பெரியகருமார்பட்டல,
உரிகம், K. G. F.



பி. சின்னய்யன்,
Black Smith Shop
உரிகம். K. G. F.



S. சிவசம்பு பிள்ளை,
செண்டுல் போஸ்டு,
கோலாலம்பூர் F. M S.



மகாதேவ ஐயர்
கோபிசெட்டிபா
ளையம்.



கு. ரா. செங்கசாமி
செட்டியார்,
சிங்காரப் பேட்டை
குகை, சேலம்.




கவனியுங்கள்!
இருவருக்கும் பிறவிக் குஷ்டம்
தீர்ந்துவிட்டது.



K. C. கோவிந்தன் நாயர்,
35, அம்மன் கோவில் தெருவு,
மண்ணடி, மதராஸ்.


## வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்தியசாலை, பழனி, Head Office Palni.

Tele. Ad. 'Siddhar' Palni.
தந்தி விலாசம்: 'சித்தர்' பழனி.

நமது பிராஞ்சு வைத்தியசாலை:—நெ. 29, பிராட்வே சென்னை.

டெலிபோன் நெ. 3111.

3-ம் பக்கத் தொடர்ச்சி.

வியைத் திருட்டுத்தனமாய்ப் புணரவும் அவள் இவனது உடல் பட்டதற்காக உயிரை விட்டாள்; அவள் அப்படி உயிரை விடுகையில் இந்த விஷ்ணுவின் பெண்டாட்டியை இன்னொருவன் போகிக்கவேண்டுமென சாபமிடாமல் செத்ததாக எந்தப்புராணத்திலேனும் கூறியுள்ளதா? எந்தப்புராணமாவது கூறுமா? பொது அறிவுடையவர் இதை எவ்விதம் மறுப்பது என்கிறேன். இப்படிக் 'கடவுளாக' ஹம்பக் செய்கையிலேயே சாபம் வாங்கிய விஷ்ணுவானவன் தன் கர்மம் அனுபவிக்கவென வருணுகிரபக சுர ராமனாக வந்திட்டபொழுது விஸ்வாமித்திர ரிஷியின் சாபத்திற்கு முற்றும் பயந்தே அவன் சொன்னதை யெல்லாஞ் செய்திட்டான் போலும் (வெட்கக்கேடு!)

இங்கு இன்னொரு 'தெய்வப் பெருமை' யென்ன வென்றால் நரபலி வேள்விக்குச் செல்ல மறுத்த தன்மைந்தரை கௌஷி முனி சபித்த பின்னர் மேலும் தவம் செய்கையில் மும்மூர்த்திகளும் வந்து பெரிய பட்டம் தந்து ரிஷியைப் போற்றுகிறார்கள்! (வெட்கக்கேடு) மும்மூர்த்திகளும் ஆகா நீதியே உருவமானவர்தான்! இத்தகைய அயோக்கியர்களைப் போற்றியவர்கள் பரிகசிக்கப்படமாட்டாரா? போற்றவாபடுவர்? தனது குருககளின் வரலாற்றை ராமன் கேட்டது ஒரு வாறாக ஒழிந்தது.

ஜனகன் தன் வீதத்திற்குத், திரேதாயுகத்தில் விதிக்கப்பட்ட 'யாகதர்மப்படி நாட்டார் சொத்தைக்கொண்டும் லக்ஷம் கோடியாகப் பணம் செலவிடும வேள்வி செய்கிறானென்று கேட்டு அதை கௌஷி முனி சிரேஷ்டரும் ராம லக்ஷ்மணர்களும வந்து கண்டு கௌரவித்தனர். இதன்வரலாற்றை அடுத்த கட்டுரையில் ஆராய்வோம.


## டிடக்டாவ்

அல்லது

## துப்பு இரகசியம் அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம.



இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் இக் கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றித் தண்டிப்பாய் வி. பி. யில அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.



மூன்றுவது வருஷம்! மூன்றுவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதார்களுடையதும், தமிழ் கலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

# ஆனந்த விகடன்

இதற்கு மூன்றும் வருஷம் பிறந்து விட்டது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காகவும் அரும்பாடுபட்டு எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப் பத்திரிகை இது ஒன்றேயாகும். இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அனுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங்கொள்கின்றன. இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு வருட சந்தா தபால் கூலியுள்பட ரூ.1-0-0 வெளி நாடுகளுககு முன்பணம் ரூ 1-4-0. மாதிரி காப்பி இனாம்!

விலாசம்:— 'ஆனந்த விகடன்' ஆபீஸ்,

244, தங்கசாலை வீதி, மதராஸ்

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை, டெலிபோன் 3311



ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம. எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.



## ஐந்து (5) குடும்ப ஔஷதங்கள்.

சுயமான கஸ்தூரி தோலா 1-க்கு விலை 1-ம் நெ. ரூ. 75.
2-ம் நெ. ரூ. 50. 3-ம் நெ. ரூ. 40. 4-ம் நெ. ரூ. 35.
குங்குமப்பூ தோலா 1-க்கு விலை ... ... ரூ. 4.
கோரோஜனை ,, ,, ,, ... ... ரூ. 19.
பச்சை கற்பூரம்,, ,, ,, ... ... ரூ. 4.
காபூல் பெருங்காயம் 10 தோலா டப்பி 1-க்கு ரூ. 1.
காசி வயிரவர் பிரசாதக்கயிறு 100-க்கு விலை 1-ம் நெ. ரூ. 3.
2-ம் நெ. ரூ. 2½. 3-ம் நெ. ரூ. 2.

உத்திராக்ஷ ஜெபமாலைகள், கண்டிகள், கெவுடு தனி மணிகள், பித்தளைப் பாத்திரம், பட்டு தினுசுகள் சகாய விலைக்கு அனுப்பப்படும். விலை ஜாபிதா இனாம்.

மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.


கடவுளை வணங்க

பார்ப்பனத்தரகர் வேண்டுமோ!

வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

**லாபகரமான வழியை அறிவதெப்படி?**

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாற்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

## வர்த்தகக்கணித நூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டிய தெவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியதெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் டி புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் டி புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ 2.

**வாசன் புஸ்தகசாலை.** நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ. 119, சென்னை



## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

**ஷேர் 1-க்கு ரூ. 10.**

தயவு செய்து டி கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகாமானது. பிராஸ்பக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.



பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னாடிஸ மெஸ்மரிஸமென்னும்

## மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவமடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வயப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, குளை போஸ்டு, மதராஸ்.



## திரிமூர்த்தி உண்மை

அல்லது

விலை அணா 12 **தேவர்களின் இரகசியம்** விலை அணா 12

மூழு முதற் கடவுள் மூன்றாகி, மூன்று முப்பத்திமூன்று கோடியாக பெருகின அற்புத இரகசியத்தை அறிய விரும்பாதவரும் உண்டோ! தமிழ்நாடு இதுவரையில் கண்டிராத அற்புத நூல். சத்தியார்த்தப் பிரகாச ஆசிரியர் ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதன் எழுதினது.

**சூடன் அண்டு கோ.,** 14, பள்ளியப்பன் தெரு, சௌகார்பேட்டை, சென்னை



முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரால்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி ஒன்றாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.



**டேபில் டைம்பீஸ் இனம் !!!**

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடியதொருஅழகான டேபில் டயம்பீஸ் இனமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.



இங்கிலீஷ் காஸ்பாண்டன்ஸ் டிபார்ட்மெண்ட்

## 5-மீ இங்கிலீஷ்கோர்ஸ்

புது ஆரம்பம்! முந்துங்கள் !!

100-மாணவர்களுக்கு மேல் எடுக்கப்படமாட்டாது.

வயதாகி விட்டதென்று நினைக்க வேண்டாம். ஆர்க்ரைட் என்னும் மேதாவி 50-வது வயதில் ஆங்கில இலக்கணம் படிக்க ஆரம்பித்தார். 5மீ கோர்ஸ், ஜூனியர், சீனியர் இம்மூன்று கோர்ஸ்களையும் முடித்து பாஸ் பண்ணினவர்கள் டாக்டர், இன்ஜினியர், லாயர் முதலிய தொழில் படிப்புக்கும் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய இடங்களில் மேலான படிப்புகளுக்கும் எடுக்கப்படுகிறார்கள். டி கோர்ஸ்களை தாங்கள் செய்யும் தொழிலுக்கு யாதொரு இடையூறின்றி தபால் மூலம் படித்து தாங்கள் விரும்பும் தொழிலுக்குப் போகலாம். ஏராளமான நற்சாட்சி பத்திரங்கள். முதலாவது 5 மாத இங்கிலீஷ் கோர்ஸில் சேருங்கள் ரூ. 5—0—0 (முழுக்கோர்ஸ்) அயல்நாடுகளுக்கு வி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது. ஒவ்வொரு கோர்ஸ் முடிந்ததும் உயர்ந்த சர்டிபிகேட் கொடுக்கப்படும். தமிழ் தெரிந்தவரும் சேரலாம்.

டைரக்டர்,
கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
நாகூர்.

அநேக
ஜமீன்தார்,
பிரபுக்களால்
தங்க மெடல்கள்
பரிசுபெற்ற
டாக்டர்
S. P. மருந்துகள்.



12 GOLD MEDAL TO Dr. S. PALANIYAPPA MUDALI.

அநேக
ஜட்ஜுகள்,
டாக்டர்கள்,
வக்கீல்களால்
நற்சாக்ஷிகள் பெற்ற
டாக்டர்
S. P. மருந்துகள்.

# அமிர்தம்

## குடலைப்பற்றிய

## எல்லா வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

பித்தம், மயக்கம், பசியின்மை, சோகை, காமாலை, பாண்டு, வயிற்றுவலி, குன்மம், அரோசிகம், வெட்டை, பித்த வாய்வு, கபாலவாய்வு, மார்வலி, மண்டைஇடி, ஒத்தை தலைவலி, மேகம, வாதம், கீல்வாய்வு, ஓடுவாய்வு, கீல் பிடிப்பு, கீல் வீக்கம், முழங்கால் வாய்வு, சுவாசகாசம், பாரிச வாய்வு, மலபந்தம், மலச்சிக்கல், மூலாதார உஷ்ணம், மூல மூளை, மூலத்தில் ரத்தம் விழுதல், நாள்பட எல்லா வியாதிகளையும் போக்கும். எல்லோரும் சாப்பிடலாம். பத்தியமில்லை.

குறிப்பு:—ஆபீசர்களுக்கும் அதிகமாய் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கும், அலைச்சல் உள்ளவர்களுக்கும், முக்கியமானது. அன்றாடம் மல நிவர்த்தி கிரமமாய் செய்து, தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும்.

ஒரு சேர் டின் விலை ரூபா 2—0—0 வி. பி. வேறு.

## தங்கரேக்

### மன்மத குளிகை.

20 நாள் சாப்பிட்டுப் பாருங்கள். இதன ஆச்சரியமான குணமும் பலமும் தெரியும்.

### பிரபுக்களுக்கென்றே தயாரித்தது

தங்கரேக், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ சேர்த்தது. அபாரமான தாதுபுஷ்டியையும், நீடித்த சுகத்தையும் கொடுக்கும். தாது உடைதல், மேகவியாதி, நீர் அழிவைப் போக்கும். 20 நாள் உபயோகம் 40 குளிகை ரூபா 7-8-0. 10 நாள் 20 குளிகை ரூபா 4. வி. பி. வேறு.

## பிரமேக நிவாரணி.

வெள்ளை, நீர்க்கடுப்பு, இரத்த வெள்ளை, மஞ்சள் வெள்ளை, தந்தி வெள்ளை முதல் சகல வியாதிகளையும் மூன்று தினத்தில் குணப்படுத்தும். புட்டி 1க்கு ரூ. 2 வி. பி. வேறு.

## மகாமன்மத சிந்தாமணி லேகியம்.

தாது விர்த்தி, ஜீரண சக்தி, மனோ சக்தி, புத்தி கூர்மை, பரமானந்தமும் அளிக்கும்.

No. 1. சேர் டின் ரூ. 2—4—0 No. 2. ரூ. 1—8—0 வி. பி. வேறு. பினாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், நெட்டால், முதலிய அன்னிய நாட்டார் தபால் செலவு ரூ. 2-8-0 சேர்த்து முன்பணம் அனுப்பவும்.

முக்கியமான நற்சாக்ஷிகள்!!

## TESTIMONIALS.

முக்கியமான நற்சாக்ஷிகள்!!

Dr. S. P. மருந்துகள் அநேகமாய் குணத்தைக் கொடுக்கிறது. மற்ற சில மருந்துகளைப்போல் எவ்வித கெடுதலும் செய்கிறதில்லை. அடியிற்கண்ட நாங்கள் Dr. S. P. மருந்துகளையே வாங்கி எல்லோரையும் உபயோகப்படுத்தும்படி சிபார்சு செய்கிறோம்.

ம-ா-ா-ஸ்ரீ ஸர். பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்கள், கே. சி. எஸ். ஐ. சி. ஐ. இ. மதராஸ்.
,, டி. ரங்காச்சாரியார் அவர்கள், ஹைகோர்ட்டு வக்கீல், மதராஸ்.
,, கே. இராஜாக் கவுண்டர் அவர்கள், ஜமீன்தார், இளநகர்.
,, என். இராஜாக் கவுண்டர் அவர்கள், ஜமீன்தார், மானத்தி.
,, எஸ். எஸ். சுப்பையா கவுண்டர் அவர்கள், ஜமீன்தார், முசிரி.
,, சி. எம். ரங்கராவ் அவர்கள், வக்கீல், நாமக்கல்.
,, வி. எஸ். சேதுராமராவ் அவர்கள், டாக்டர், நாமக்கல்.
,, எம். வீரப்ப பிள்ளை அவர்கள், மிராசுதார், தாலூக்கா போர்டு டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பரும் அண்டு யூனியன் சேர்மன், பாண்டமங்கலம்.

ம-ா-ா-ஸ்ரீ எ. கந்தசாமி பிள்ளை, போஸ்டு கிளார்க்கு, செரம்பான் F. M. S.
,, ஜோ. சிவராமய்யர், நேட்டிவ் டாக்டர், பாண்டமங்கலம்.
,, சபாபதி முதலியார், ஜோஸியம் அண்டு வைத்தியம், காட்டுப்புத்தூர்.
,, கே. ஆர். முத்துசாமி செட்டியார் அவர்கள், மிராசுதார், (யூனியன் சேர்மன், வேலூர்).
,, பழனி செட்டி, நேட்டிவ் டாக்டர், கோலாலம்பூர் F. M. S.
,, கே. வி. ரங்காச்சாரியார் அவர்கள், சப் ரிஜிஸ்டரார், வேலூர்
,, சி. எஸ். வி. எஸ். சர்மா, போஸ்டு மாஸ்டர், வேட்டக்காரன் புதூர்.
,, எஸ். மகாலிங்க சர்மா, சுதேசமித்திரன் ஆபீஸ், மதருஸ்.
,, எஸ். சுப்புரத்னமய்யர், போஸ்டு கிளார்க்கு, வேலூர்.

வள்ளி வைத்தியசாலை,
வேலூர் போஸ்டு (சேலம் ஜில்லா)
Via புகலூர் (S. I. Ry.) S. India.

நமது பிராஞ்சு வைத்தியசாலை,
என். தண்டபாணி பிள்ளை, மானேஜர்,
நெ. 292, சைனுபஜார்ரோடு, மதராஸ்.


ஸ்ரீமத் நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.